# கா. அப்துல்கபூர்

ஹ. மு. நத்தர்சா



இந்திய இலக்கியச் சிற்பிகள்

இறையருட் கவிமணி

# கா. அப்துல் கபூர்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

இறையருட் கவிமணி

# கா. அப்துல் கபூர்

ஹ.மு.நத்தர்சா

சாகித்திய அகாதெமி

*Iraiyarul Kavimani Abdhul Kapoor* · Monograph in Tamil by H.M.Nathersha, Sahitya Akademi, New Delhi 2005, Rs. 25

© சாகித்திய அகாதெமி
முதல் பதிப்பு 2005
ISBN 81-260-2089-x

**சாகித்திய அகாதெமி**

இரவீந்திர பவன, 35, பெரோஸஷா சாலை,
புது தில்லி 110001

விற்பனை

'ஸ்வாதி' மந்திர சாலை, புது தில்லி 110 001

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக்
கட்டடம், டாக்டர் அம்பேத்கா வீதி, பெஙகளூா 560 001

குணா பில்டிங்ஸ், 443, அண்ணாசாலை, தேனாம்பேட்டை,
சென்னை 600 018

ஜீவன் தாரா பில்டிங, நான்காவது மாடி,
டைமண்ட் ஹாாபா சாலை, கொல்கத்தா 700 053

172, மும்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதா, மும்பாய் 400 014

**விலை : 25**

**அச்சு : கோரமண்டல் பிரிண்டர்ஸ் . பி. லிமிடெட்.,**
**சென்னை - 14**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 7 |
| 1. வாழ்வும் பணியும் | 9 |
| 2. உரைநடை இலக்கியம் | 25 |
| 3. சிறுவர் இலக்கியம் | 48 |
| 4 கவிதை வளம் | 69 |
| 5. பன்முக ஆளுமை | 89 |
| பின்னிணைப்புகள் | 102 |

# முன்னுரை

**கா**லத்தால் மறையாத அழகிய இலக்கியச் சிற்பங்களை வடிவமைத்து இந்தியப் பண்பாட்டிற்கு எழிலூட்டும் எழுத்துச் சிற்பிகளை அடையாளம் கண்டு அவர்களைப் வாசகர்களின் நினைவுலகில் பத்திரப்படுத்தி வைப்பதில் அக்கறையுடன் செயல்பட்டு வெற்றியை ஈட்டிவரும் சாகித்திய அகாதெமி, இறையருட் கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூரின் சுருக்கமான வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வாய்ப்பை எனக்கு வழங்கியமைக்கு நான் நன்றியன்.

இஸ்லாத்தைத் தன் வழியாகவும் இன்பத்தமிழைத் தன் மொழி யாகவும் கொண்டு படைப்புலகில் ஓர் இலட்சியப் பயணம் நிகழ்த்தியவர், பேராசிரியர் கா. அப்துல்கபூர். இறையவனின் திருவருள் கனியப்பட்ட காரணத்தால் ஏராளமான மாலை இலக்கியங் களை எழுதிக் குவித்து அவற்றை இசைத்தட்டு வடிவிலும் ஒலிக்கச் செய்து கேட்பவர் உள்ளத்தைக் குளிரச் செய்த ஆற்றல் மிக்க கவிஞர்.

கல்வியாளராய் இவர் காலடி தடம் பதித்த கல்லூரிகளும், அக் கல்லூரிகளில் பயின்ற இவரது மாணாக்கர்களும் இவரது குருகுல வாசத்தில் பெற்ற கல்வியனுபவத்தை இன்றும் நன்றியுடன் நினைத்துப் போற்றி மகிழ்கின்றனர்.

அரபி, தமிழ், மலையாளம், ஆங்கிலம் இவற்றில் இவர் பெற் றிருந்த பன்மொழிப்புலமை, உலக இலக்கியங்களின் சுவையை படிப்பவர் மாந்தி மகிழும் ஒரு நல் வாய்ப்பை உருவாக்கித் தந் துள்ளது.

ஆன்மீகம், அறிவியல்-என்னும் இரண்டு தளங்களிலும் சிறகு விரித்துப் பறந்த ஞானப்பறவை இவர்.

இவரது உரைவீச்சு-கேட்டோரைப் பிணைத்து கேளாதோரை ஏங்க வைத்தது. உரைநடை,கவிதை- இரண்டின் வழியில் படிப்பவர் இதயங் களைத் தன் வசப்படுத்தும் வசீகரமொழி நடையாளர் இவர்.

குழந்தை இலக்கிய உலகிலும் தன் முத்திரையை அழுத்தமாய்ப் பதித்த வித்தகர்

தன் பன்முகச் செயல்பாட்டால் இன்தமிழுக்கு ஏற்றம் தந்த இலக்கியச் சிற்பி ஒருவரின் வாழ்க்கையோவியத்தை வரைந்து காட்டும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றதில் நான் பெருமிதமும் மகிழ்ச்சியும் அடைகிறேன்

இவரது எழிலார் வாழ்க்கைச் சித்திரம் படிப்பவர் நினைவுப் பெட்டகத்தில் பத்திரப்படுத்தி வைக்கப்படும் என உளமார நம்புகிறேன்.

இந்நூல் உருவாக்கத்திற்குத் துணை நின்ற அன்புள்ளங்களுக்கு நன்றி.

**ஹ.மு. நத்தர்சா**

# 1
# வாழ்வும் பணியும்

நீலத் திரைக்கடல் ஓரத்தில் நின்று நித்தம் தவம் செய்யும் குமரியைத் தன் தென் பகுதி எல்லையாகக் கொண்டு ஆட்சி செய்யும் தமிழன்னைக்குப் பாமகுடம் சூட்டிமகிழ்ந்த கவிஞர் பெருமக்கள் பலருள் "கவிமணி" என்னும் பட்டத்திற்கு உரியவராய்த் திகழ்ந்தவர் இருவர்.

ஒருவர், "கவிமணி" தேசிக விநாயகம் பிள்ளை; மற்றொருவர், "இறையருட் கவிமணி" பேராசிரியர் கா. அப்துல்கபூர் முன்னவர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்(1876) தோன்றி எளிய தமிழ்ப் பாடல்களால் தமிழர் இலக்கியத்திற்கு வளம் சேர்த்தவர்; பின்னவர், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்(1924) தோன்றி ஆன்மீகத்தளத்தில் நின்றும்,சொல்லேருழவராய்த் திகழ்ந்தும் இன் தமிழுக்கு இனிமை சேர்ந்தவர்.

கன்னியாகுமரி மாவட்டத் தலைநகர் நாகர்கோயிலில் இருந்து திருவனந்தபுரம் செல்லும் சாலையில் 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஊர் திருவிதாங்கோடு. ஒரு காலத்தில் வேணாட்டின் தலைநகர்.

**"நிலந்தருதிருவிற் பாண்டியன் அவையத்து**
**அறங்கரை நாவின் நான்மறை முற்றிய**
**அதங்கோட்டாசானிற்கு அரில் தபத்தெரிந்து"**

தொல்காப்பியம் அரங்கேற்றம் ஆனதாகப் பாயிரம் பகரும். அந்த அதங்கோட்டாசான் பிறந்த ஊரே திரு+அதங்கோடு=திருவிதாங்கோடு என உருமாறியதாகக் கூறுகிறார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை ஏசுபிரான் சீடர்களில் ஒருவரான புனிததோமயரின் திருக்கரங்களால் கட்டப்பட்ட புனித சிரியன் மாதாகோயில் என்னும் தேவாலயம்

திருவிதாங்கோட்டின் வரலாற்றுச் சிறப்புக்கு மற்றுமொரு சான்றாய்த் திகழ்கிறது.

திருவிதாங்கோட்டில் வாழ் இஸ்லாமியரின் குடியிருப்புக் பகுதி ''அஞ்சு வன்னம்'' என்றும் அழைக்கப்படுகிறது. அங்கு வாழ் இஸ்லாமியர் ''அஞ்சுவன்னத்தார்'' என அழைக்கப்படுகின்றனர் பிற்காலச் சோழர் வரலாற்றில் ''அஞ்சுவன்னத்தார்'' பற்றிய குறிப்பு உள்ளது.

வரலாற்றுச் சிறப்புமிகு அஞ்சுவன்னத்தார் குடியில் பிறந்த காட்டு பாவா சாகிப் என்னும் பெருமகனின் மூத்த புதல்வராய் 25-5-1924 அன்று பிறந்தவர், பேராசிரியர், கா அப்துல் கபூர். தாயார் பெயர் முகமதும்மாள்.

பேராசிரியர் கா அப்துல் கபூர் அவர்களுடன் பிறந்த சகோதரர்கள் மூவர் சகோதரிகள் இருவர்.

ஹபீப் முகம்மது, அப்துல் லத்தீப் என்னும் இரு சகோதரர்களும் வணிகர்கள்.

அடுத்து பிறந்த இளையசகோதரர் பேராசிரியர் கா முகம்மது பாருக், மூத்த தமையனைப்போல் தமிழைக் கற்றுத் தேர்ந்து நல்லா சிரியராய்ப் பணிபுரிந்தவர். பச்சையப்பன் கல்லூரியில் முதுகலைத் தமிழ்ப்பயின்று எம் ஏ தேர்வில் 1961 ஆம் ஆண்டு மாநில முதன்மை யராய் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேர்ச்சிப்பெற்றார் பல்கலைக் கழகப் பேச்சுப் போட்டிகளில் பங்கேற்று வாகைசூடிய வல்லுநர். பல் வேறு கல்வி நிறுவனங்களில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி பாளையங்கோட்டை சதகத்துல்லா அப்பா கல்லூரி தமிழ்த் துறைத் தலைவராகவும் முதல்வராகவும் இருந்து பணி ஓய்வு பெற்றவர்.

பேராசிரியர் கா. அப்துல்கபூர் அவர்களுடன் உடன் பிறந்த சகோதரிகள் இருவர் ஒருவர் பெயர், பாத்திமுத்து; மற்றொருவர், மைமூன்.

## கல்வி

தக்கலை ஆரம்ப பள்ளியில் மலையாள மொழியைப் பாடமொழி யாகப் கொண்டு பயின்ற பேராசிரியர் கா. அப்துல்கபூர் உயர்நிலைப்

பள்ளியில் ஆங்கிலவழிக் கல்வியில் அரபியை இரண்டாவது பாட மொழியாக எடுத்துப்பயின்றார்.

பள்ளிக்கூட வாழ்க்கையில் தமிழின் வாசனையே அறிந்திராத பேராசிரியர் கா.அப்துல்கபூர் திருவனந்தபுரம் மகாராசா கல்லூரியில் இடைநிலை வகுப்பு (Inter Mediate) பயின்ற போது இரண்டாவது பாடமொழியாகத் தமிழைத் துணிந்து எடுத்துப் பயின்று தேர்வு முடிவில் மாநிலத்திலேயே மிக அதிகமான மதிப்பெண்கள் பெற்று சிறப்பான முறையில் பல்கலைக் கழகத் தேர்வில் வெற்றிபெற்றார்.

மலையாளம், ஆங்கிலம், அரபி, தமிழ் இவற்றில் மொழி ஆளுமைத் திறன் இளம் வயதிலேயே வாய்க்கப் பெற்ற பேராசிரியர் கா. அப்துல் கபூர், தமிழில் தான் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து தமிழ்வழிக் கல்விக்குத் தாயகமாய்த் திகழ்ந்த சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஏ.தமிழ்(ஹானர்ஸ்) எடுத்துப் படிக்க துணிந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இவர் கல்வி பயின்ற காலக் கட்டத்தில் இவரோடு இணைந்து பயின்ற மாணவத் தோழர்களில் முன்னாள் தமிழக அமைச்சர்கள் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் க.அன்பழகன், முன்னாள் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் மதியழகன், முன்னாள் மராட்டிய மாநில ஆளுநர் பி.சி அலெக்ஸாண்டர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவாகள் ஆவர்.

திருவனந்தபுரத்திலும், சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்ற காலக்கட்டத்தில் ஏராளமான மொழி யறிஞர்களுடன் கலந்து பழகும் வாய்ப்பு கிடைக்கப்பெற்ற பேராசிரியர் கா.அப்துல்கபூர், அதனைப்பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் நான் ஈராண்டுகள் பயின்ற போது மலையாள இலக்கிய மேதைகள் சிலரின் தொடர்பு வாய்த்தது. அதன்பின்னர், தமிழில் சிறப்புப் பட்டம் பெறுவதற்காக அண்ணா மலைப் பல்கலைக்கழகம் சென்றபோது அக்காலத்தில் சிறந்திருந்த தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், கவிஞர்கள் ஆகியோரின் அறிமுகம் பெற்றேன். பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தகுந்தோர்"

## கல்விப்பணி

1946 இல் சென்னை அரசினர் முஸ்லிம் கல்லூரியில்(இன்றைய காயிதேமில்லத் அரசு பெண்கள் கலைக் கல்லூரி) முதன் முதலாக கா அப்துல்கபூர் தமிழ்ப் பேராசிரியராகத் தம் பணியைத் தொடங்கி னார்

அவர் அங்கு பணியாற்றிய காலக் கட்டத்தில் தமிழக முன்னாள் அமைச்சர் சாதிக் பாட்சா போன்றவர்கள் அவரது அன்பிற்குரிய மாணவர்களுள் குறிப்பிடத்தக்கவராய் இருந்தனர்

பேராசிரியர் கா. அப்துல் கபூர் அங்கு பணியாற்றிய காலக் கட்டத்தில் அறிஞர் அண்ணாவை இலக்கியச் சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்திருந்திருந்தார். அண்ணாவின் வருகை தேவையற்ற சலசலப்பை உருவாக்க, பணியில் சேர்ந்த ஓராண்டு காலத்திலேயே அரசுக் கல்லூரியின் பணிப் பொறுப்பிலிருந்து விலக வேண்டிய கட்டாயச் சூழல் கா அப்துல் கபூருக்கு ஏற்பட்டது.

சோதனைகளைக் கண்டு மனம் தளராத இயல்புடையவரான கா.அப்துல்கபூர் 1947 ஆம் ஆண்டு வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்துறைத் தலைவராகப் பணிப்பொறுப்பு ஏற்றார். அங்கும் தம் விருப்பத்திற்குரிய தமிழறிஞராய்த் திகழ்ந்த அறிஞர் அண்ணாவை வரவழைத்து தமிழ்மன்றத்தில் சொற்பொழிவாற்றச் செய்து மகிழ்ந்தார். அவ்விழாவில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றிய அறிஞர் அண்ணா, பேராசிரியர் கா.அப்துல் கபூர் பற்றிக் குறிப்பிடும் போது,

''தன் சிந்தனையோட்டத்தில் முகிழ்ந்தெழும் அரிய கருத்துக்களை, தீந்தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கோர்த்து, தனக்கே உரிய பாணியில் தமிழ் முழக்கம் செய்து வருபவர்'' என்று புகழாரம் சூட்டினார்.

வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் பணியாற்றிய காலக் கட்டத்தில் அக்கல்லூரியில் உருது மொழி பேராசிரியராகவும் சிறந்த கவிஞராகவும் திகழ்ந்த மௌலானா முஹம்மது ஜலால் கடப்பவீ என்பாரின் நட்புக்கு உரித்தானார்.

வாணியம்பாடி வட்டாரத்தில் ''முஷாயிரா'' என்னும் பெயரில் அடிக்கடி நடைபெற்று வந்த உருது மொழிக் கவியரங்குகள் அப்துல்

கபூரின் கவனத்தை ஈர்த்தன அதன் விளைவாக தமிழிலும் அதுபோல் கவியரங்கம் நிகழ்த்த அவர் உள்ளம் பேரவாக் கொண்டது. ஆர்வமிக்க மாணவர் சிலரைத் தேர்வு செய்து கவிதை எழுதுவதற்கு உரிய பயிற்சி அளித்தார். அதன் பயனாக ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் அவர் தொடங்கி வைத்த தமிழ்க் கவியரங்கம் பின்னர் பல்கிப் பெருகிய தமிழ்க் கவியரங்கு களுக்கு ஓர் அழகிய தொடக்கமாய் அமைந்தது.

## திருச்சியில் கல்விப்பணி

1947 ஆம் ஆண்டு முதல் 1952 வரை வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் தமிழ்ப் பணியாற்றிய கா அப்துல்கபூர் 1952 -56 காலக்கட்டத்தில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் கீழ்த்திசை மொழித்துறைத் தலைவராகச் சிறப்புடன் பணியாற்றினார்.

அவர் அங்கு கல்விப் பணியாற்றிய காலக்கட்டத்தில் அவரிடம் பாடம் கற்ற நன் மாணக்கர்களில் முனைவர் "சிற்பி" பாலசுப்ர மணியன், தமிழறிஞர் மணவை முஸ்தபா போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர்

ஒரு மாணவராய் அவரிடம் பாடம் பயின்ற அனுபவத்தை மணவை முஸ்தபா இவ்வாறு நினைவு கூர்கிறார்:

"திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்பில் சேர்ந்த முதல்நாள் முதல் வகுப்பை எடுத்தவர், பேராசிரியர்கா.அப்துல் கபூர் அவர்கள். அவர் மாணவர்களிடம் பேசிய தோரணை அவரைக் கூர்ந்து நோக்கவைத்தது புன்முறுவல் பூக்கும் பூஞ்சிரிப்புடன் துள்ளு தமிழில் நறுக்குத் தெறித்தாற்போல் பேசிப் பாடம் எடுத்த தோரணை ஆசிரியர்-மாணவர் இடைவெளியை வெகுவாகக் குறைத்து அவரோடு இணக்கம் கொள்ள வைத்தது. இலக்கிய மேடைகளில் இஸ்லாமிய இலக்கியங்கள் மக்கள் விரும்பிக் கேட்கும் வகையில் எடுத்துச் சொல்லி வந்த பெருமை பேராசிரியர் கா. அப்துல் கபூர்சாகிப் அவர்கட்கு உண்டு. இதற்குப் பெருந்துணையாக அமைந்தது, அவரது எடுப்பான தோற்றமும், துள்ளுதமிழ் நடைப்பேச்சும், சொல்லும் முறையுமாகும் "

மற்றொரு நன்மாணக்கரான முனைவர் சிற்பி பாலசுப்ரமணியன்,

''பேராசிரியராய், கல்லூரி முதல்வராய், செந்தமிழ்ப் பொழியும் செந்தமிழ்க் கொண்டலாய் மேடைத் தென்றலாய், வீணைநரம்பென மீட்டும் இசையென நெஞ்சை வருடும் கவிஞராய், நல்லறிஞராய் தமிழகம் அப்துல் கபூர் அவர்களை அறிந்திருக்கிறது; மாணவர் உலகம் நேசித்திருக்கிறது'' என்று தன் ஆசானை சிலாகிக்கிறார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் பேராசிரியர் கா அப்துல் கபூர் பணியாற்றிக் கொண்டிருந்த காலக் கட்டத்தில் திருச்சி வானொலி நிலையம் வழி அவர் ஆற்றிய உரைப்பொழிவுகள் கேட்பவர் இதயத்தைக் கொள்ளையிட்டன பின்னர் அவ்வுரைப் பொழிவுகள் யாவும் ஒருங்கு திரட்டப்பட்டு ''இலக்கியம் ஈந்த தமிழ்'' என்னும் பெயரில் நூல்வடிவப்படுத்தப்பட்டு அன்றைய சென்னைப் பல்கலைக்கழகக் கல்லூரிகளின் புகுமுக வகுப்பு மாணவர்களுக்குப் பாடநூலாக வைக்கப்பட்டது. அந்நூலுக்கு மதிப்புரை வழங்கிய தமிழறிஞர் மா.இராசமாணிக்கனார்,

''தமிழ் நடை படிக்கப் படிக்க இனிமை பயப்பதாக உள்ளது. பல நூல்களில் காணப் பெறாத எளிய - இனிய செந்தமிழ் நடையை இந் நூலில் கண்டு அகமகிழ்கின்றேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்

## உத்தம பாளையத்தில் தமிழ்ப் பணி

பேராசிரியர் கா அப்துல் கபூர் 1956 முதல் 1962 வரை மதுரை மாவட்டத்தில் உள்ள உத்தமபாளையத்தில் ஹாஜி கருத்த இராவுத்தர் கௌதிய்யா கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணி யாற்றிபின் கல்லூரி முதல்வராகவும் பொறுப்பேற்றார்.

**தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் முதன்முதலாகக் கல்லூரி முதல்வ ராகப் பணியாற்றிய பெருமையையும் பேராசிரியர் கா.அப்துல்கபூர் அவர்கள் தான் தொடங்கி வைக்கிறார்.**

பேராசிரியர் கா.அப்துல் கபூர் அவர்களின் செயல்திறனும் தோற்றப் பொலிவும் தமிழாசிரியர்களுக்கு ஒரு தனிப்பெருமையைத் தேடித்தந்த பாங்கை முனைவர் பேராசிரியர் கம்பம் சே.சாகுல் அமீது பின் வருமாறு குறிப்பிடுகிறார்

தமிழுக்கு முதலிடம் தந்து தமிழறிஞர்களைக் கௌரவிப்பதில் முன்னோடியாக இருந்தது. உத்தமபாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர்

கௌதியா கல்லூரி-இக்கல்லூரி நிர்வாகம் 45 ஆண்டுகளுக்கு முன்பே கா.அப்துல் கபூர் என்ற பேராசிரியரை கல்லூரி முதல்வராக்கிப் பெருமைப்படுத்தியது தமிழ் நாட்டின் கல்லூரி வரலாற்றில் முதன் முதலில் முதல்வரான தமிழ்ப் பேராசிரியர் அப்துல்கபூர்தான் சி.இலக்குவனார், ஏ.சி செட்டியார், வ.சுப.மாணிக்கம், சுப அண்ணாமலை, தமிழ்க்குடி மகன் போன்ற பல தமிழ்ப் பேராசிரியர்கள் இதன் பின்னரே கல்லூரி முதல்வராகிப் பெருமை சேர்த்தனர் என்பது எண்ணத்தக்கது''

கல்லூரித் தமிழாசிரியர்களுள் முதல்வர் பணியாற்ற முதன் முதலில் வாய்ப்புப் பெற்ற பேராசிரியர் கா. அப்துல்கபூர் அவர்கள் கல்லூரி தமிழாசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு பெற்ற இஸ்லாமிய அறிஞர்களின் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளதாக இளையான்குடி ஜாகிர் உசேன் கல்லூரி முன்னாள் முதல்வரும் தமிழறிஞருமாகிய கேப்டன் அமீர் அலி குறிப்பிடுகிறார்:

''திருச்சி கிறித்தவக் கல்லூரி ஒன்றில் புலவர் பிச்சை இபுறாகீம் பணியாற்றினார் அவர்தான் முதல் முஸ்லிம் தமிழ்ப் பேராசிரியர் இரண்டாவதாக, அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் பணி யாற்றியவர் பேராசிரியர் அப்துல்காதர். மூன்றாவதாக, இறையருட் கவிமணி''

## அதிராம்பட்டினத்தில் கல்விப் பணி

தஞ்சை மாவட்டம் அதிராம்பட்டினத்தில் உள்ள காதர் முஹ்யத்தீன் கல்லூரியில் 1962 முதல் 1967 வரை தமிழ்த் துறைத் தலைவராகவும் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றினார், கா.அப்துல் கபூர்.

அதிராம்பட்டினம் காதர் முகைதீன் கல்லூரியில் பேராசிரியர்கா அப்துல் கபூர் முதல்வராக இருந்தபோது நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அப்போதைய சென்னைப் பல்கலைக்கழக துணை வேந்தராக இருந்த திரு.நெ.து. சுந்தரவடிவேலு பங்கேற்றார். முதல்வரின் வரவேற்புரையால் கவரப்பட்ட நெ.து.சுந்தரவடிவேலு அவர்கள் தான் ஆற்றிய உரையில்,

''நான் எத்தனையோ அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். இன்று உங்கள் முதல்வர் நிகழ்த்திய சொற் பொழிவைப் போன்று வேறெங்கும் கேட்டதில்லை. மனம்விட்டுச்

சொல்கிறேன். சிறிது கூட தடையில்லாமல் சரளமாகவும் வேகமாகவும் எப்படி அவரால் பேசமுடிகிறது என்று வியந்து போனேன் தமிழ்ப் பேச்சாளர்களில் உங்கள் முதல்வரின் பேச்சு தனிப்பாணி; அவரது மொழியழகும் சொல்லழகும் நடையழகும் என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன,'' என்று புகழ்ந்துரைத்தார்.

## பிறைப்பள்ளியில் தமிழ்ப்பணி

ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் கல்லூரிப் பணியில் செல விட்ட பேராசிரியரின் கவனம், சின்னஞ்சிறார்களின் நலன் கருதி சென்னையைச் சேர்ந்த செல்வந்தர்கள் சிலரால் உருவாக்கப்பட்ட பிறைப்பள்ளியின் பக்கம் திருப்பப்பட்டது.

இஸ்லாமிய மாணவர்களின் பெற்றோர் பலர் வெளிநாடுகளில் பயணத்தில் இருந்ததால், அவர்களின் பிள்ளைகளின் பள்ளிப்பருவ வாழ்க்கை பாழடைய கூடாது என விரும்பி சமுதாயச் சான்றோர் சிலர் ஒன்று கூடி ஒரு முன் மாதிரி பள்ளியை பெரும்செலவில் உருவாக்க முயன்றபோது அதன் முதல்வராக இருந்து மாணவர்களை ஒழுக்கத்தின் பாதையில் வழிநடத்திச் செல்லும் தகுதி பேராசிரியர் கா. அப்துல்கபூர் ஒருவருக்கே இருப்பதாகத் தீர்மானித்து இறையருட் கவிமணியைப் பெருவிருப்பத்துடன் அணுகியபோது அவரும் கவுரவம் பார்க்காமல்-கல்லூரி முதல்வராக இருந்தவர் உறைவிடப் பள்ளிக்கூட முதல்வர் பணிக்குச் செல்லலாமா? என மனக்கிலேசம் அடையாமல்-அரும்புகளின் குறும்புகளை அருகில் இருந்து கண்டு மகிழும் பெருநோக்கில் பிறைப்பள்ளியின் முதல்வராய்ப் பணியாற்ற சம்மதம் தெரியப்படுத்தினார்.

முதலில் சென்னை சேத்துப்பட்டு ஹாரிங்டன் சாலையில் இயங்கிய பிறைப்பள்ளி, பின்னர் தற்போது உயிரியல் காட்சியகம் அருகில் வண்டலூரில் உள்ள பிரம்மாண்டமான வளாகத்திற்கு மாற்றப் பட்டது. இயற்கையின் மீது ஈடுபாடும், குழந்தைகள் மீது பிரியமும் வைத்திருந்த பேராசிரியருக்கு அவ்வளாகச் சூழல் மிகவும் பிடித்துப் போனது. குழந்தைகளோடு குழந்தையாய் கொஞ்சி மகிழ்ந்து ஏராளமான சிறுவர் பாடல்களை எழுதிக் குவித்தார் பின்னர் அப் பாடல்கள் யாவும், "அரும்பூ" என்னும் பெயரில் தொகுக்கப்பட்டு நூல் வடிவம் பெற்று குழந்தை இலக்கிய உலகில் ஒரு தனி முத்திரையைப் பதித்தது.

பிறைப்பள்ளி முதல்வராக இருந்தபோது அவரால் எழுதப்பட்டு நாகூர் ஹனிபாவால் பாடப்பட்டு இசைத்தட்டு வடிவில் வெளிவந்த "ஹஸ்பிரப்பி ஜல்லல்லாஹ்" என்றும் இறைப்புகழ்ச்சி இசைப்பாடல் பிறைப்பள்ளியின் கடவுள் வாழ்த்துப் பாடலாக ஒலித்ததோடு மட்டு மல்லாமல் உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்களை, தன் ஆற்றல் மிகு பாடல் வரிகளின் வசீகரத்தால் கவர்ந்து இழுத்தது என்பது குறிப்பிடத்தக்கது

1967 முதல் 1974 வரை சென்னை பிறைப்பள்ளி முதல்வராய்ப் பணியாற்றி அரும்புகளின் இதயத்தில் அன்பு வேர் பாய்ச்சி அவர்களின் மதிப்பீட்டில் ஆலமரமாய் பரந்து விரிந்து நின்றார், இறையருட் கவிமணியவர்கள்.

## கும்பகோணத்தில் கல்விப்பணி

சென்னையைச் சேர்ந்த சமுதாயச் சான்றோர் உருவாக்கிய பிறைப் பள்ளி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இஸ்லாமியப் பிரமுகர்கள் ஒன்றிணைந்து கும்பகோணத்தில் ஐந்து ஏக்கர் நிலப்பரப்பில் "அல் அமீன் உயர்நிலைப் பள்ளி" என்ற உறைவிடப் பள்ளி ஒன்றினை உருவாக்க முனைந்தனர் சென்னை பிறைப்பள்ளியில் முதல்வராய்ப் பணியாற்றிய இறையருட் கவிமணியின் தொண்டு தங்கள் பள்ளியிலும் தொடர வேண்டும் என்று உரிமையுடன் எதிர்பார்த்தனர்.

சமுதாயச் சான்றோர்களின் அன்புக்குக் கட்டுப்பட்டு 1976-80 காலக்கட்டத்தில் கும்பகோணம் அல்அமீன் உயர்நிலைப்பள்ளியில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி அப்பள்ளிக் கூடத்திற்கு தன் அளப்பரிய பணியால் சீரும் சிறப்பும் சேர்த்தார், இறையருட் கவிமணி.

இறையருட் கவிமணி கும்பகோணம் அல்அமீன் மெட்ரிக் மேனிலைப் பள்ளியில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய போது தான் பெற்ற அனுபவத்தை அப்பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணி யாற்றும் திரு புலவர் செ.ஜஃபர் அலி பின் வருமாறு எடுத்துரைக்கிறார்

"ஆரம்ப நிலையில் இருந்த பள்ளியை சிறப்பான ஆலோசனை கூறி முன்னேற்றத்திற்குக் கொண்டு வர பாடுபட்டவர்களுள் கபூர் சாஹிபும் ஒருவர்

அவரது எளிமைப்பண்பும், சுறுசுறுப்பான செயல்பாடுகளும் அனைவரையும் கவர்ந்தன. ஊக்கப்படுத்துவதில் உற்சாக மூட்டுவதில் அவர் தலைசிறந்தவராகத் திகழ்ந்தார்.

சொல்வதைத் தெளிவாக-தீர்க்கமாக-உறுதிபட மனம்கொள்ளக் கூறுவதில் அவருக்கு நிகர் அவரே, அவசியம் இல்லாமல் எவரிடமும் பேசமாட்டார், எப்போதும் சிந்தனைச் சிகரமாகவே தென்படுவார் முப் பதாண்டுகள் கடந்து விட்ட பிறகும் அவரைப் பற்றி எண்ணும்போது என்னுள் ஓர் உத்வேகம் புறப்படுகின்றது.''

இவ்வாறு, இறையருட் கவிமணியவர்களின் சிறந்த செயல்பாடுகள் இன்றளவும் கும்பகோணம் அல்-அமீன் மேனிலைப்பள்ளியில் அவரோடு இணைந்து பணியாற்றியவர்களால் நினைவு கூரப்படுகின்றன.

## இதழியல் பணி

இறையருட் கவிமணி கல்லூரிப்பணியிலிருந்தும் பள்ளிப் பணியிலிருந்தும் தம்மை விடுவித்துக் கொண்ட பின்னர், அவர்தம் முழு கவனத்தையும் தம்பக்கம் ஈர்த்துக் கொண்டது, இதழியல் துறை.

இதழியல் துறை அவருக்குப் புதிய அனுபவம் அல்ல. இளம் பருவத்திலேயே அவருக்கு இதழியல் துறையில் நாட்டம் இருந்தது என்பதற்குச் சில சான்றுகள் உள. இவரது உறவினரும் நண்பருமான உமர்க்கண் என்பார் நடத்திய ''நண்பன்'' என்னும் கையேட்டி தழில்தான் இவரது முதல் கவிதை வெளியாகியது.

'நண்பன்' கையேட்டிதழ் அச்சு வடிவம் பெற்றபோது அதன் கௌரவ ஆசிரியராய் இவர் பணியாற்றினார்.

**''வாயிழந்து வாழ்விழந்து**
**வாடுகின்ற வறிஞரின்**
**நோய்தடுக்கும் போர்தொடுக்க**
**வாய்த்ததின்று வாளடா''**

என்று அவ்விதழின் புதிய வடிவம் கண்டு குதூகலத்துடன் கவிதை எழுதி மகிழ்ந்தார்.

எண்பதுகளின் தொடக்கத்தில் தன் இளைய சகோதரர் பேராசிரியர் கா முகம்மது பாரூக் தந்த ஊக்கத்தின் அடிப்படையில் தானே சிறப்பாசிரியராய்ப் பொறுப்பேற்று ஓர் அற்புத இஸ்லாமியத் திங்களிதழை அவர் தொடக்கம் செய்தார். அதன் பெயர் -“ மதிநா”

மக்காவில் தோன்றி ஓரிறைக் கொள்கையை மக்களுக்கு எடுத்துரைத்த “இஸ்லாம்” என்னும் சத்திய மார்க்கத்தை உலகம் முழுமைக்கும் பொதுமையாக்கிய நபிகள் நாயகத்தின் பெருமைக்கு அணிகலனாய்த் திகழ்ந்த “மதினா” நன்னகரின் பெயரை இதழின் பெயர் நினைவுப்படுத்தினாலும் “மதிநா’ என்னும் பெயருக்கான காரணத்தை இதழின் முதல் தலையங்கத்தில் பேராசிரியர் இவ்வாறு விளக்குகிறார்.

“மதியைக் கூர்மைப்படுத்தி நாவைப்பாதுகாக்கச் செய்யும் நற் பணியில் மதிநா தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது

அனைத்துலக இஸ்லாமிய இலக்கியக் கருவூலங்களை இனிய தமிழில் எடுத்தியம்புவதும், இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபடு வோர்க்குத் துணைபுரிவதும் மதிநா மதிக்கும் பணிகளில் முதன்மையாகும்.”

“மதிநா” இலக்கியத் திங்களிதழ் சுமார் பத்தாண்டுகள் தங்கு தடையின்றி வெளிவந்தது. தரமான இலக்கிய ஆக்கங்களின் கருவூலமாய் அது திகழ்ந்தது.

குறிப்பாக,தோப்பின் முகம்மது மீரானின் சிந்தனைச் செறிவு மிக்க சிறுகதைகள் வெளிவர அது களம் அமைத்துத் தந்தது

இவ்விதழில் வெளிவந்த அரபி இலக்கிய வரலாறு, இறையருட் கவிமணியின் இனிக்கும் இறைமொழிகள், பேராசிரியர் ஏ'ஏ ரஹீமின் இஸ்லாமும் விஞ்ஞானமும் போன்ற தொடர்கள் கற்றவர் அவையின் கவனத்திற்குரித்தாயின

படைப்பிலக்கியத்துறையில் ஆர்வமுள்ள இளையவர்களை ஊக்கு விக்கும் வகையில் வெண்பாப் போட்டி, கட்டுரைப் போட்டி, சிறுகதைப் போட்டி போன்றவற்றை அடிக்கடி ‘மதிநா’ திங்களிதழ் நடத்தியது

இவ்விதழில் “சிறுவர்சோலை” என்னும் பகுதியில் ‘அபூஜமால்’ என்னும் புனைபெயரில் இறையருட் கவிமணி எழுதி வந்த

கவிதைகள் பின்னர் ''அரும்பூ'' போன்ற சிறந்த குழந்தை இலக்கியத்தின் உருவாக்கத்திற்குக் காரணியாய்த் திகழ்ந்தன

'மதிநா' திங்களிதழ் தந்த சுவையை மாந்தி மகிழ்ந்த, கலைமகள் ஆசிரியர் வாகீசகலாநிதி கி வா ஜகன்னாதன் அவர்கள், ''இறையுணர்வை உணர்த்துகின்ற அருமைக் கொள்கை குறைவில தாய்க் கொண்டுள்ள இத்திங்களிதழ் என்றும் கொழித்து வாழ்க'' என்று புகழந்துரைத்துள்ளார்

''இளம்பிறையாக மதிநா எழுந்துள்ளது, அதன் ஒளி தமிழகம் எங்கும் பரவவேண்டும்'' என்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் தா வே வீராசாமியும்,

''நல்லிதழ்கள் சில; அவற்றுள் இஃது ஒன்று'' என்று கோவை பு சா கோ கலை அறிவியற் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் ம.ரா போ குருசாமியும் வாழ்த்து வழங்கியுள்ளனர்

'''(இறையருட்கவிமணியின்) விரல்களின் சித்திர நடனம் செந் தமிழுக்குப் புதுப்புது வளம் சேர்க்கும்'' என்று கவிஞர் ஈரோடு தமிழன்பன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு, இதழியல் துறையிலும் தன் முத்திரையைப் பதித்தார், இறையருட்கவிமணி

## ஓய்வு காலத்துப் பணிகள்

கும்பகோணம் அல்அமீன் உயர்நிலைப்பள்ளியில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பேராசிரியர் கா அப்துல் கபூர் அவர்கள், தன்னை வருத்திய உடல்நலக் குறைவால் தாயகம் திரும்பினார் திருவனந்தபுரத்தில் உள்ள திராவிட மொழியியல் நிறு வனத்தில் நிருவாக அதிகாரியாக, சில காலம் பணிபுரிந்தார் பின்னர், தக்கலையில் உள்ள தம் சொந்த இல்லத்தையே மாபெரும் நூலகமாக உருவாக்கி பெரும்பகுதி நேரத்தை படிப்பதிலும் எழுதுவதிலும் செல விட்டார்

அவரது பிந்திய வாழ்க்கையில் ஏறத்தாழ இருபத்தியிரண்டு ஆண்டுகள் இறைதியானத்திலும், சமுதாய நலன் நோக்கிய எழுத் தாக்கங்களிலும் கழிந்தது. இந்தக் காலக்கட்டத்தில் இவர் உருவாக்கிய

''மிக்க மேலானவன்'' என்னும் உரைநடை நூல் ஆன்மீகத்துறையிலும் அறிவியல் துறையிலும் சிறந்து விளங்கும அறிஞர் பெருமக்களால் பெரிதும் வியந்து போற்றப்படுகின்றது

## குடும்பம்

இறையருட் கவிமணி கா அப்துல்கபூர் ஜமீலா பீவி என்னும் மங்கை நல்லாளின் கரம்பற்றி தன் இல்லற வாழ்வைத் தொடக்கம் செய்தார். பெண் கொடுத்த மாமனார் அகமது கண்சாகிப் நாடறிந்த சுதந்திரப் போராட்ட வீரர். காந்தீய வழியில் பெரும் ஈடுபாடு உடையவர். அவரது வீடு ''ஐக்கிய பவனம்'' எனப் பெயரிடப்பட்டிருந் தாலும் அங்குவாழ் மக்களால் ''காந்தி வீடு'' என்றே அடையாளம் காட்டப்பட்டது.

அகமதுகண் சாகிப் மிகச் சிறந்த மலையாள எழுத்தாளரும்கூட மலையாள மொழியில் அவர் எழுதிய ''குமரி ஸஃபியா'' என்னும் புதினம் பலரின் பாராட்டைப் பெற்ற ஒரு படைப்பு சமூக சீர்திருத்ததை அடிப்படையாகக் கொண்டு ஏராளமான சிறுகதைகளையும் மலையாளத்தில் எழுதியுள்ளார். அவரது மற்றொரு மலையாள நூலான ''இஸ்லாமியப் பொருளாதாரம்'' குறிப்பிடத்தக்க நூல்களில் ஒன்று.

பேராசிரியர் கா அப்துல்கபூர் - ஜமீலா பீவி தம்பதிகளுக்கு ஒரே மகன். பெயர். ஜமால் முஹம்மது. தான் பணியாற்றிய திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி நிறுவனர் பெயரை மகனுக்குச் சூட்டி மகிழ்ந்தார்.

தன் ஒரே மகனுக்கு தன் சகோதரி பாத்திமுத்து மகள் ஜுனைதா பீவியை 1979-இல் மணம்முடித்து வைத்தார் இவர்களுக்கு ஐனு சுக்ரியா ஜஸீலா என்னும் 23 வயது மகளும் அகமது முஸம்மில் என்னும் 17 வயது மகனும் உள்ளனர்

பேராசிரியரின் மகன் ஜமால் முஹமமது கணினித் துறையில் வல்லுநர் மின்னணுத்துறையில் பட்டம் பெற்று கேரள அரசு நிறு வனமான Keltron இல் பணியாற்றி பின்னர், துபாய், அபுதாபி, சவூதி அரேபியா போன்ற இடங்களில் Sony நிறுவனத்தின் மின்னணு மற்றும் கணினிப்பிரிவுகளில் பொறுப்பான பதவிகளில் பதினைந்து வருடங்களுக்கு மேல் பணியாற்றியவர்.

உடல்நலம் குன்றியிருந்த தன் தந்தையை அருகில் இருந்து கவனிக்க வேண்டும் என்ற பெருநோக்கத்துடன் அயல்நாட்டுப் பணி துறந்து பிறந்த ஊர்வந்து தந்தையின் அருகில் இருந்து தந்தைக்குப் பணி விடை செய்து வந்தார் தற்போது, **கணினி**, இணையதளங்கள் தொடர் பான பணிகளில் ஈடுபட்டு தக்கலையில் பேராசிரியர் வாழ்ந்த வீட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். ஏழை எளிய குடும்பங்களுக்கு உத வும் நோக்கில் பெற்றோர் பெயரில் "அப்துல்கபூர்-ஜமீலாபீவி அறக் கட்டளை" என்னும் அறநிறுவனம் நிறுவுவது தொடர்பான தொடக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளார்.

## *பிறபணிகள்*

இறையருட் கவிமணியவர்கள் தமிழ்ப்புலவர்க் குழு உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்

மதுரை, தஞ்சை மாவட்ட இலக்கிய ஆட்சிக்குழு உறுப்பினராய்ப் பணியாற்றியுள்ளார். திருச்சி அனைத்திந்திய வானொலி நிலைய ஆலோசனைக் குழு உறுப்பினராய்த் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சென்னைப்பல்கலைக்கழகத்தில் செனட் சபை உறுப்பினராகவும், கேரளப் பல்கலைக்கழகத்தில் பாடநூற்குழு உறுப்பினராகவும் சிறப்புடன் பணியாற்றியுள்ளார்

## *பட்டங்கள்*

"இறையருட் கவிமணி" என்னும் பட்டத்தால் எல்லாராலும் நன்கறியப்பட்டுள்ள பேராசிரியர் கா அப்துல்கபூர் அவர்கட்கு, சான்றோர் பெருமக்கள் "கன்ஜுல் உலூம்" (அறிவுக்களஞ்சியம்) "தீன் வழிச் செம்மல்," "நபிவழிச் செம்மல்" "தமிழ்ச் செம்மல்" என்னும் பட் டங்களையும் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்

அமெரிக்க கலிபோர்னியா மாநிலத்தின் அனைத்துலகக் கலைப்பண் பாட்டு மையம் 1992-ஆம் ஆண்டு டி லிட் (இலக்கிய கலாநிதி) பட் டம் வழங்கிச் சிறப்பித்தது

கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் குளச்சல் இஸ்லாமிய இளைஞர் முன்னேற்ற சங்கத்தினரால் இலக்கியச் சேவைக்காக பேராசிரி யருக்கு "தீன் வழிச் செம்மல்" விருது வழங்கப்பட்டது

பர்மா தேசத்தைச் சேர்ந்த இஸ்லாமியத் தமிழ் பெருமக்கள் "கன் ஜுல் உலூம்" என்னும் பட்டம் சூட்டி மகிழ்ந்தார்கள்

1971-ஆம் ஆண்டு அதிராம்பட்டினத்தில் நடைபெற்ற பேராசிரியரின் "இறையருள் மாலை" நூல் வெளியீட்டின்போது அவ்வூர்ப் பெருமக்களால் உவந்து வழங்கப்பட்ட "இறையருட் கவிமணி" என்னும் பட்டம் காலத்தால் மறையாது பேராசிரியரின் இனிய நினைவைச் சுமந்து அனைவர் நெஞ்சிலும் கல்வெட்டு வாசகமாய் நிலைப்பெற்றுள்ளது.

## அயலகப்பயணம்

இறையருட்கவிமணியின் முதல் நூலான "நாயகமே!. " என்னும் நபிபுகழ்ச்சிப்பாமாலை 1954-இல் இலங்கையில் உள்ள திருக்குர்ஆன் இயக்கத்தினரால் வெளியிடப்பட்டது

"நபிமொழிமாலை" என்னும் நூல் சிங்கப்பூரில் வெளியிடப் பட்டது உத்தம பாளையம் ஹாஜி கருத்தராவுத்தர் கௌதியா கல்லூரி யில் முதல்வராய் பணியாற்றியபோது பர்மா பயணம் நடைபெற்றது

மலேசியா 'தமிழ்முரசு' பெரியவர் சாரங்கபாணி செய்த ஏற் பாட்டின் அடிப்படையில் மலேசியாவில் நடைபெற்ற நபிகள் நாயகம் பிறந்தநாள் விழாவில் பேராசிரியர் கா. அப்துல்கபூரும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதனும் பங்கேற்றனர். இப்பயண அனுபவம் குறித்து சென்னை ஒய் எம்.சி ஏ பட்டிமன்ற வளாகத்தில் உரையாற்றிய கி.ஆ.பெ. விசுவநாதன் அவர்கள், "பேராசிரியர் கபூர் அவர்களோடு மேற்கொண்ட சுற்றுப் பயணம் மூலம் இஸ்லாம் மார்க்கம் பற்றி மேலும் தெளிவாக அறியும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததாகக்"கூறி மகிழ்ந்தார்.

## எழுத்துப்பணி

7 உரைநடை நூல்கள், 12 கவிதை நூல்கள், ஒரு குழந்தைப் பாடல், ஒரு பிரார்த்தனை நூல் - இவை பேராசிரியரின் ஆக்கங்களின் குறிப் பிடத்தக்க இடத்தினைப் பெற்றுத் திகழ்கின்றன

இளம் வயதில் 'மறதி நாயகம்' என்ற பாத்திரம் ஒன்றை இவர் நகைச்சுவைப் படைப்பாகத் தந்தார் என்பர்.

“இலக்கியம் ஈந்ததமிழ்” என்னும் நூல், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், கேரளப் பல்கலைக்கழ கங்களில் மாணவர்களுக்குப் பாடநூலாக வைக்கப்பட்டது.

“இஸ்லாமிய இலக்கியம்”, “வாழும் நெறி இஸ்லாம்”, “இனிக்கும் இறைமொழிகள்” (இரண்டு தொகுதிகள்), “அறவாழ்வு”, “மிக்க மேலானவன்” முதலியன பிற உரைநூல்களாகும்.

நாயகமே, அன்னை பாத்திமா, கௌதுல் அஃலம் முஹ்யத்தீன் மாலை, நபிமணி மாலை, இறையருள் மாலை, திருமறை மாலை, நபி மொழி நானூறு, மனவிளக்கு, பொன் மொழிமாலை, காஜா மாலை, பீரப்பா மாலை, கவியரங்கக் கவிதைகள் முதலியன பேராசிரியரின் கவிதை வடிவ நூல்களாகும்

“அரும்பூ” - குழந்தைகளுக்கான சந்தப்பாடல்களின் தொகுப்பு நூல்

“து ஆ நூறு” - பிரார்த்தனைக்காக உருவாக்கப்பட்ட நூல்

## மறைவு

78 ஆண்டுகள் வாழ்ந்து, வாழ்நாள் முழுவதையும் சமுதா யத்திற்கான எழுத்துப் பணியில் செலவிட்டு, பல பயனுள்ள நூலாக் கங்களைத் தந்த பேராசிரியர் இறையருட் கவிமணி கா. அப்துல் கபூர் அவர்கள் 11.2 2002 வெள்ளிக்கிழமை மாலை 5 15 மணிக்கு தக்கலையில் உள்ள தமது இல்லத்தில் காலமானார்.

# 2
# உரைநடை இலக்கியம்

"தமிழ் உரைநடையில் நீங்கள் விரும்புவது இலக்கிய நடையா, எளிய நடையா?'' என்று தீபம் நா. பார்த்தசாரதியிடம் வினா எழுப்பப்பட்டபோது, அதற்கு அவர் இவ்வாறு விடையளித்தார்

''இலக்கிய நடை என்றால் அது நிச்சயமாகக் கடுமையான நடையாகத்தான் இருக்க வேண்டும் என்றும் எளியநடை என்றால் அது நிச்சயமாக இலக்கிய நயமற்றதாகத்தான் இருக்க வேண்டும் என்றும் முடிவு செய்து கொண்டே நீங்கள் இக்கேள்வியைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. எளிய நடையே இலக்கிய நயமுள்ளதாகவும் இருக்க முடியும்.''

எளிமையும் இனிமையும் சம அளவில் குழைத்து உருவாக்கப் பட்டது, இறையருட் கவிமணியின் அழகுத்தமிழ் உரைநடை

உரை நூலாயினும், பாவாயினும இறையருட் கவிமணி தனக்கென ஒரு முத்திரை நடையை வகுத்துக் கொண்டிருந்தார்

அவரது உரைவீச்சிலும், பாநயத்திலும் மயங்கி நின்ற அறிஞர் பெருமக்கள் தரும் சில சான்றுகள் அவரது நடைத்திறத்திற்கு உரைகல்லாய்த் திகழ்வன.

''ஆற்றொழுக்குப் போன்ற அழகு தமிழில் ஆழிய கருத்துக்கள் அள்ளி வழங்கும்போது அவற்றைச் சுவைப்பதே ஓர் அரும்பேறாகி விடுகிறது'' என்கிறார், இஸ்லாமியத் தமிழறிஞர் மௌலவி எம்.அப்துல் வஹ்ஹாப்.

இவரது கட்டுரை ஆக்கங்கள், ''செந்தமிழ்ப் பனுவல், சிந்தனைக் கருவூலம், அறநெறிக் கொத்து, ஆய்வுரைச் சுரங்கம்!'' என அடுக்கியுரைக்கிறார், முனைவர் சு இன்னாசி

''பேராசிரியர் அப்துல்கபூர் அவர்கள் கருவில் திருவுடையார், பைந் தமிழ வளர்த்த பண்ணையாம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

அருந்தமிழ் பயின்றவர், அக்காலத்தே தமிழ்ப்புலமை நடாத்திய பேராசிரியப் பெருந்தகைகளிடம் தங்கிப்படித்தவர்; சான்றாண்மை நிறைந்த பண்பாட்டினர். சீலமுறு வாழ்வை நடாத்தும் கோலங்கொள் நெஞ்சினர், இலக்கியப் புலமைக்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்பவர்; கூரிய சீரிய சொற்கள் தொடுக்கும் வில்லாளர், 'செந்தமிழுக்கு ஒரு சேதுப்பிள்ளை என்பர்' இனி 'அழகுத் தமிழுக்கு ஓர் அப்துல்கபூர் எனத் தடையின்றிச் சொல்லலாம் ஏனெனில் இவர் நடை அப்படி'' என்கிறார், தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் சி பாலசுப்ரமணியம்

இறையருட்கவிமணியின் வீரிய எழுத்தாற்றலுக்கு சிறந்த எடுத்துக் காட்டாய் திகழ்வது, அவரது முதல் உரைநடைத் தொகுப்பான ''இலக்கியம் ஈந்த தமிழ்''.

## இலக்கியம் ஈந்த தமிழ்

தமிழ் வளர்த்த பண்பாடு, கவிஞர் நோக்கில் வையகப்பிரிவு, இலக்கியம் காட்டும் எழிலரசிகள், கவிதையில் உவமை, யாதும் ஊரே, ஆசுகவி, சீட்டுக்கவி, இலக்கியத்தில் நகைச்சுவை வெளிநாட்டு இலக்கியங்களில் இந்தியப் பண்பாடு, நாட்டுப் பாடல்களில் வரலாறு, புதுப்புனல் என்னும் பதினொரு விழுமியத் தலைப்புகளைக் கொண்டு விளங்கும் இந்நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளின் பெரும் பகுதி வானொலி உரைப்பொழிவுகளின் தொகுப்பாய் அமைந்துள்ளன.

எனவே கேட்பதற்கு இனிய ஒலிச் சித்திரங்களாய் இவை முதலில் தோற்றம் கொண்டு பின்னர் படித்தின்புறுவதற்குரிய உரைவடிவமாய் மாற்றம் பெற்றுள்ளன எனலாம் ''பழுதறக் கற்ற பெருமகனார் ஒருவரின் அழகு மொழியையும் ஆழ்ந்த அறிவையும் ஒருசேர நுகர்வ தற்குரிய அரிய வாய்ப்பாக'' இந்நூல் திகழ்வதாகக் குறிப்பிடுகிறார், முனைவர் சூ. இன்னாசி

இலக்கியம், கலை, நாகரிகம், பண்பாடு, என்னும் நான்கை முன்னிறுத்தி அமைகிறது ''தமிழ் வளர்த்த பண்பாடு'' என்னும் பெயரிய முதற் கட்டுரை.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்'' - இதுவே 'தமிழ்ப் பண்பாட்டின் தலையாய நிலை' என்றுரைக்கும் ஆசிரியர், 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்' என்னும் வள்ளுவப் பெருந்தகையின் சொல்லமுதையும்,

''ஒன்றே குலம்; ஒருவனே தேவன்'' என்ற திருமூலரின் மந்திர வார்த்தையையும் எடுத்துரைத்து, குகனுடன் தோழமை பூண்டு, சுக்ரீவனை அன்போடணைத்து, வீடணனையும் உடன் சேர்த்து உடன் பிறந்தோர் எழுவரெனக் கூறிய இராமனின் கதையை எடுத்தோதிய கம்பனைச் சுட்டிக்காட்டி, தமிழ்ப்பண்பாட்டின் அரணாகத் தமிழ் இலக்கியங்கள் திகழ்வதைக் கண்டு இறும்பூதெய்துகிறார்.

''மக்களின் ஒருமையையும் பெருமையையும் ஐக்கிய நாட்டவையினர் ஆராய்ந்து கூறுவதற்கு எத்தனையோ ஆண்டுகட்கு முன்னால் அவை தமிழர்களின் குறிக்கோளாய் இலங்கின'' என்னும் ஆசிரியரின் கருத்து கட்டுரையின் சாரமாய் அமைந்துள்ளது.

முதற்கட்டுரையின் இறுதியில் கவிதை வடிவில் ஆசிரியர் வடித்துள்ள முத்திரை வரிகள் வாழும் தமிழர்களின் இதயத்தில் ஏற்றி வைக்க வேண்டிய வெளிச்ச தீபமாய் அமைந்துள்ளது.

இதோ, அந்த உரைச்சித்திரம்:

**''பொற்சைவ வைணவமும்**
**புத்தபிரான் பொன்னுரையும்**
**நபிகள் பிரான் நல்லுரையும்**
**பைந்தமிழின் பண்பேற்றுக்**
**கற்போரைப் பிடித்திழுத்துக்**
**கனிதமிழின் சுவையூட்டி!**
**நாயன்மார் நாவமுதும்**
**நல்லாழ்வார் பாசுரமும்**
**மேயபுகழ் மேகலையும்**
**மேம்படு சிந்தாமணியும்**
**மாமுனி தேம்பா வணியும்**
**மாண்பேறு சீறாவும்**
**காமுறவே எல்லாரும்**
**கண்ணாரக் கண்டபோதும்**
**காவியமாய் இந்நாட்டில்**
**கதிர் வீசக் காண்கின்றோம்.''**

'கவிஞன் நோக்கில் வையகப்பிரிவு' என்னும் கட்டுரை ''எந் நாட்டுக் கவிஞனாயினும் அவனது பார்வையிலே ஒரு பரிவைக் காண

கிறோம் வையத்து மக்களுக்காக உயிருருக, உளமுருக, மெய்யுருக, வாயுருக பாடுகின்ற இயல்பு கவிஞர் நோக்கில் கவினார் பெருமையாய் அமைந்துவிட்டது இதுவே வையகப் பரிவு '' என்று கட்டுரையின் நோக்கத்தை குறிப்பிடுகிறது.

சோலை மலர்கள் தென்றலிலே ஆடுவதைக் கண்டு உள்ளம் வருந்திய உருதுப் பெருங்கவிஞர் அல்லாமா இக்பால், ''தென்றலில் ஓரிதழ் அசைந்தாலும் அது என் இதயத்தே எதிரொலித்துக் கண்ணீர்த் துளியாய் வருகிறது'' என வருந்தி நின்ற காட்சியையும்,

மலையமான் திருமுடிக்காரியின் பிஞ்சிள மைந்தர்களை கிள்ளி வளவன் பகைமை காரணமாக யானைக்காலில் இடறிக் கொல்ல விருக்கும் செய்தியறிந்து சீற்றமுடன் சென்ற கோவூர்கிழார் மன்னனின் மரபினையும், வள்ளலின் வண்மையையும் விளக்கக் கூறி சிறுவர்களைக் காத்து நின்ற திறத்தையும்,

மதுரை மாநகரில் கண்ணகிக்கு நேரவிருக்கும் துன்பத்தை உணர்ந்து அலைமோதிய இளங்கோவடிகள் அருளுள்ளம், ''வாராதே'' என்று வழிமறித்து நிற்கும் கோட்டைக் கொடியின் அசைவு வழியும், கண்ணீராகியத் தண்ணீரை நறிய மலராடையால் போர்த்து துக்கத்துடன் நழுவும் வைகையாற்றின் துயர ஓட்டம் வழியும் வெளிப்படும் திறத்தையும், உரிய இலக்கிய காட்சிகள் வழி உள்ளத்தில் அழுந்திப் பதியும் வண்ணம் சித்தரித்துக் காட்டியுள்ளார், பேராசிரியர்

இயற்கையின் எழிலையும், மங்கையர் அழகையும் பாவலர்ப் புனைத்துரைக்கும் பாங்கினைத் தக்க இலக்கியச் சான்றுகள் வழி எடுத்துரைக்கிறது,'' இலக்கியம் காட்டும் எழிலரசிகள்'' என்னும் கட்டுரை

மருத நிலத்தை நாடக அரங்காகப் பாவித்து கம்பர் பாடிய நய மிகு கவிதையும், இயற்கை சிரிப்பில் இதயத்தைப் பறிகொடுத்த பாவேந்தரின் பாட்டு வரிகளும், பாவை நாச்சியாரின் அழகுத் திருக் கோலம் கண்டு மனமுருகி நின்ற சுந்தரமூர்த்தி நாயனார் மெய்மறந்து கூறிய பரவசமொழிகளும் இக்கட்டுரைத் தலைப்பிற்கு அணி சேர்க்கின்றன.

உவமையால் புகழ்ப்பெற்ற கவிதைகளை சங்க காலம் முதல் இக் காலம் வரை அடையாளம் கண்டு அவற்றை அறிமுகப்படுத்தி மகிழ்கிறது ''கவிதையில் உவமை'' என்னும் கட்டுரை.

ஆசுகவி, சீட்டுக்கவி - இவற்றின் வரைவிலக்கணத்தை விளக்கி யுரைக்கின்றன, அடுத்துவரும் இரு கட்டுரைகள்

நகைச்சுவையுணர்வு தமிழ இலக்கியத்தில் பெற்றுள்ள இன்றியமையா இடத்தை வள்ளுவ மொழி முதல் வாய்மொழி இலக்கியம்வரை வரைந்து காட்டுகிறது ''இலக்கியத்தில் நகைச்சுவை'' என்னும் கட்டுரை

**''முள்ளூ முனையில் மூன்று குளம் வெட்டியதில்**
**இரண்டுகுளம் பாழு; ஒண்ணு தண்ணியே இல்லை''**

எனத் தொடங்கும் நாட்டுப்புறப்பாடலும்,

**தங்கப் பொண்ணே, தாராவே!**
**தட்டான் கண்டால் பொன்னென்பான்**
**தராசில் வைத்து நிறு என்பான்**
**எங்கும் போகாமல் இங்கு இரு''**

எனவரும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் ''மருமக்கள் வழி மான்மியம்'' பாடல் வரிகளும் தமிழ் இலக்கியத்தில் நகைச்சுவை பஞ்ச மின்றி தழைத்தோங்கியிருப்பதற்கு சில காட்டுகளாய் காட்சிப்படுத்திக் காட்டப்பட்டுள்ளன

''வெளிநாட்டு இலக்கியங்களில் இந்தியப் பண்பாடு'', என்பது குறிப்பிடத்தக்க ஒரு கட்டுரையாகும்

மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, சாலமன் தீர்க்கதரிசியின் காலத்தில் இருந்தே இந்தியாவிற்கும் மேலைநாடுகளுக்கும் இடையே இருந்துவந்த வணிக உறவையும் அது ஏற்படுத்திய பண்பாட்டு தாக்கத்தையும் தக்க சான்றுகள் வழி நிறுவுகிறது இக்கட்டுரை

இந்தியாவைக் குறிக்கும் ''ஹிந்த்'' என்னும் சொல்மீது அராபியர் கொண்டிருந்த காதலை விளக்கமாக எடுத்துரைக்கிறார், பேராசிரியர்.

''அராபியர், ''ஹிந்த்'' என்ற சொல் கூர்மையைக் குறிப்பதாகப் பொருள் கொண்டு கூர்மையான வாளை 'அல்-ஹிந்த்' என வழங்கினர், விரைப்பொருளாய் பயன்படுத்தும் ஒரு செடிக்கு 'ஹிந்த்' எனப்பெயர் சூட்டினர்

இந்திய நாட்டில் அராபியர் கண்ட புளி அவர்களுக்கு அவர்கள் நாட்டு பேரிச்சம்பழம் போல காட்சியளித்ததால் அதை 'தமருல் ஹிந்த்'

(இந்தியநாட்டுப் பேரிச்சம்பழம்) எனப் பெயரிட்டழைத்தனர் அதுவே பின்னர் ஆங்கில மொழியில் டாமரண்ட் (Tamarind) எனத் திரிந்தது என்பதுபோன்ற பல புதிய விளக்கங்களை இக்கட்டுரை வழி பெற முடிகிறது

"நாட்டுப் பாடல்களில் வரலாறு" என்னும் கட்டுரை - செஞ்சியை ஆண்ட தேசிங்குராஜனின் வீரவரலாற்றை 'தேசிங்குராஜன்' கதைப் பாடல் வழியும், திருமலை நாயக்கரின் தளபதி இராமப்பய்யன் பெற்ற வெற்றியை 'இராமப்பய்யன் அம்மானை' கதைப்பாடல் வழியும், வெள்ளையரை எதிர்த்து நின்ற கட்டபொம்மனின் வீரவரலாற்றை 'கட்டபொம்மன் கதைப்பாடல்' வழியும் உணர்ச்சி பொங்க எடுத்துரைக்கிறது.

"இலக்கிய உலகில் வறட்சி ஏற்படும் தருணத்தில் புதுமையெனும் புதுப்புனல் பாய்ந்து, செழுமையும் கொழுமையும் சேர்த்து வளமும் வனப்பும் ஊட்டுகிறது" என்று கருத்துரைக்கிறது, இந்நூலில் இறுதியாக அமைந்துள்ள 'புதுப்புனல்' என்னும் கட்டுரை

## அறவாழ்வு

இறையருட் கவிமணி வழங்கியுள்ள குறிப்பிடத்தக் கட்டுரைத் தொகுப்பு நூல்களில் ஒன்று - "அறவாழ்வு" பெயரே நூலின் உள்ளடக்கத்தைப் புலப்படுத்துகிறது அறநெறி வாழ எழுந்த அற இலக்கியங்களுள் இரண்டினை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு இது

"1977-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'அறவாழ்வு' என்னும் நூல் அளவில் சிறியதாயினும் அளப்பரும் கருத்துக்களைக் கொண்டிலங்கும் அரிய நூலாகும்" என்று குறிப்பிடுகிறார்; பேராசிரியர் கா. முகமது பாரூக்

நூலின் நோக்கத்தைப் பதிப்புரை பின்வருமாறு விளக்குகிறது.

"தாம் ஆராய்ந்தறிந்த அற நெறிகளைப் பிழிந்தெடுத்துச் சாராக்கித் தந்தவர், "அறநெறிச் சாரம்" நூலின் ஆசிரியர் முனைப்பாடியார் அச் சாற்றினைச் சுருக்கி ஆறுதலைப்புகளில் சுவைபடத் தருகிறார் பேராசியர் கா அப்துல் கபூர். அத்துடன் திருக்குறளில் இருந்து ஏழு குறட்பாக்களைத் தேர்வு செய்து அவற்றிற்கு அரிய விளக்கமும் அளிக்கப்பட்டுள்ளது "

''பேராசிரியர் இலக்கியப் புலமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பெருநூலாக'' இதனை அறிமுகம் செய்யும் திருநெல்வேலி ம.தி.தா இந்து கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் பி.தட்சிணா மூர்த்தி,

''பேராசிரியரின் உரைநடை தனி ஆய்வுக்கு உரியது ஒப்பாய்வு அறிஞராய்த் திகழும் பேராசிரியர் நல்கிய இந்நூல் ஒப்பாய்வு செய்வார்க்கு உறுதுணை செய்யும் என்பதில் ஐயமில்லை'' என்று குறிப்பிடுகிறார்

## இஸ்லாமிய இலக்கியம்

இந்நூலில் இடம் பெற்றுள்ள முதற்கட்டுரை ''இருபெரும் மொழிகள்'' என்னும் தலைப்பில் அமைந்து உலகத் தொன்மை மொழி களான தமிழ், அரபி மொழிகளின் தனித்தன்மைகளை அலசி ஆராய்கிறது.

இவ்விரு மொழிகளின் அமைப்பு நுட்பத்தை ஆய்ந்து தெளிந்த பேராசிரியர் ''மொழிக் குடும்பத்துள் 'செமிட்டிக் குழுவைச் சார்ந்தது அரபிமொழி' என்றும், 'திராவிடக் குழுவைச் சார்ந்தது தமிழ்மொழி என்றும் கூறி இவ்விரு மொழிகளும் பலகோடி மக்களால் பேசப் படுகின்ற உயர் தனிச் செம்மொழிகள், காலத்தின் வேகத்திற் சிக்கி கவினிழக்காமல் எளிமையும், இனிமையும், பழமையும், புதுமையும், வளப்பமும், வனமும் செறிந்திலங்கும் இம்மொழிகளுக்கிடையே உள்ள அடிப்படை ஒப்புமைகள் நம்மை வியப்பிலாழ்த்துகின்றன'' என்று கூறியுள்ளார்.

''இந்தியப் பண்பாட்டில் இஸ்லாமிய இலக்கியத்தின் பங்கு'' என்னும் இரண்டாவது கட்டுரையில், ''அரபி, பார்சீ மொழிகளுக்கும் இந்திய மொழிகளுக்கும் ஏற்பட்ட கூட்டுறவின் பயனாக உருது என்னும் ஒரு புது மொழியே உருவாயிற்று'' என்னும் 'மொழிநூல்' உண்மையைப் புலப்படுத்தியுள்ளார் '

''இஸ்லாமியத் தொடர்பால் தமிழிலக்கியம் பெற்ற பயனுள்ள பகுதிகளாகப் படைப்போர்களும், முனாஜாத்துகளும், கிஸ்ஸாக்களும், நாமாக்களும், இடம்பெற்றுள்ளன'' என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

பாரசீக இலக்கியத்தில் பரந்துகிடக்கும் நகைச்சுவையுணர்வு ''சிரிக்கத் தெரிந்த பாரசீகர்'' என்னும் கட்டுரை வழி சித்தரிக்கப் பட்டுள்ளது

முகலாய மன்னர்களின் இலக்கியக் கொடையினை உணர்த்துகிறது "கவிதையிற் பேசிய காவலர்கள்" என்னும் கட்டுரை

மன்னர் பாபரின் கவிதைத் துணுக்குகளுள் இரண்டின் தமிழாக்கமும், மன்னர் ஷாஜஹானின் மூத்த புதல்வர் தாராஷிகோ கவிதை வழி வெளிப்படுத்திய மெய்ஞ்ஞானச் சித்திரமும் இக் கட்டுரையில் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன

**"நீர் வீழ்ச்சியே! யாருக்காக நீ கவல்கிறாய்?**
**யாருக்காக நீ தலையைத்**
**தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறாய்?**
**என்னைப்போல் இரவனைத்தும்**
**தலையைப் பாறைகளில் முட்டி மோதிக் கொண்டு**
**அழுவதற்குக் காரணமான**
**உன் துயர்தான் யாது?"**

என்னும் முகலாயக் கவிப்பேரரசி ஜெய்புன்னிஸாவின் கவிதை, முகலாய அரச குடும்பத்தில் புதைந்து கிடந்த கவியுள்ளத்திற்கும் உணர்வுப் பொங்கலுக்கும் சிறந்த சான்றாய் அமைந்துள்ளது.

சீறாப்புராணம் என்னும் தமிழ்க் காப்பியத்தின் வழி சித்தரிக்கப்படும் நபிகள் நாயகத்தின் சீரிய வாழ்க்கையை "சீறா கூறும் நபிகள் வாழ்க்கை" என்னும் கட்டுரை உணர்த்துகிறது

இறை நம்பிக்கை, நிகரில்லா நேர்வழியின் ஆணிவேராய்த் திகழ்வதை "நிகரில்லா நேர்வழி" என்னும் கட்டுரை எடுத்தியம்புகிறது

சிந்தைக்கினிய சீறாவின் இலக்கியச் செவ்வியை எடுத்துணர்த்தும் வகையில் அடுத்து வரும் மூன்று கட்டுரைகள் அமைந்துள்ளன அண்ணல் நபியின் அதிசயத்தக்க பெருவாழ்வை உமறுப்புலவர் காட்சிப்படுத்தி காட்டியுள்ள நுட்பம் "சீறாவில் சில காட்சிகள்" என்னும் கட்டுரை வழியும், காப்பியத்திற்குரிய உவமைச் சிறப்பை உமறுப்புலவர் கையாண்டுள்ள திறத்தை "உமறுகண்ட உவமைகள்" என்னும் கட்டுரை வழியும், ஓசை நயத்தால் சிறந்து விளங்கும் சீறாப் பாடல்களை அடையாளம் காட்டும் வகையில் எழுதப்பட்ட "சீறாவில் ஓசை" என்னும் கட்டுரையும் கட்டுரையாசிரியரின் நுண்மான் நுழை புலத்திற்குச் சிறந்த சான்றாய் அமைந்துள்ளன

இஸ்லாமிய இறைநேசச் செல்வர்களின் ஒப்பரிய உயர்வாழ்வை உணர்த்தும் வகையிலும், கவி ஞானிகளாய்த் திகழ்ந்த இஸ்லாமியத் தமிழ்க் கவிஞர்கள் வழங்கிய ஞான இலக்கியங்களை அடையாளம் காட்டும் வகையிலும் பேராசிரியர் எழுதிய பல கட்டுரைகள், ''ஞான மேதை பீரப்பா பாடல் நயம்'', ''ஞானியார்சாகிப்'', ''திருமதீனத்தந்தாதி'', "கவ்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை'', ''செம்மல் செய்கு நூறுத்தீன் வலியுல்லாஹ்'' என்னும் தலைப்பில் அமைந்துள்ளன

## வாழும் நெறி இஸ்லாம்

பல்வேறு தருணங்களில் பேராசிரியர் ஆற்றிய பேருரைகளையும் எழுதிய கட்டுரைகளையும் ஒன்றாய்த் தொகுத்து உருவாக்கப்பட்ட நூல் ''வாழும் நெறி இஸ்லாம் ''

1983-ல் வெளியிடப்பட்ட இந்நூல், வாழும் நெறி இஸ்லாம், வையகம் போற்றும் வான்மொழி, அருமறை பகரும் அறிஞர் உயர்வு, இறையருள் இலக்கியம், அறிவுத்துறையில் முஸ்லிம்கள், பாரகம் போற்றும் நூலக முன்னோடிகள், இறைஞானம் என்றும் ஏழு தலைப்புகளைக் கொண்டு இலங்குகிறது

இஸ்லாம் வலியுறுத்தும் ஐம்பெரும் கடமைகளாகிய இறை நம்பிக்கை, தொழுகை, ஈகை, நோன்பு, ஹஜ் என்னும் புனிதப் பயணம் - இவற்றின் இன்றியமையா நடைமுறையை எடுத்தியம்புகிறது, முதற் கட்டுரை. Islam என்னும் ஆங்கிலச் சொல்லில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு தொழுகை நேரத்தை உணர்த்தி நிற்பதாக (Isha-Subah-Luhar-Asar-Magrib = Islam) ஆங்கில அறிஞர் ஒருவர் குறிப்பிட்டுள்ளதாக இடம்பெற்றுள்ள ஒரு செய்தி சிந்தனைக்குச் சுவையூட்டுகிறது.

''நிறத்தாலோ, மொழியாலோ, பணத்தாலோ, பகட்டாலோ, குலத்தாலோ, குடும்பத்தாலோ, பிறவகை ஆற்றல்களாலோ எத்தகைய உயர்வு தாழ்வும் கற்பித்தல் கூடாது என்பது இறை ஆணை'' என்று இஸ்லாமிய வாழ்க்கை முறையை அறிமுகம் செய்கிறார் பேராசிரியர்.

''இஸ்லாமிய நெறியில் துறவறத்திற்கு இடமில்லை. திருமணம் செய்து இல்லற வாழ்வை மேற்கொள்வது இறையாண்யும் நபிவழியு

மாகும்'' என்று இஸ்லாம் வரையறுத்துள்ள வாழ்வியல் இலக்கணத்தை வரைந்து காட்டுகிறார் ஆசிரியர்

''ஆட்சியில் நேர்மை, சட்டத்திற்கு முன் அனைவரும் சமம், பெண்ணுரிமை'' - இவை இஸ்லாம் வழங்கியுள்ள வாழ்வியல் கொடைகளாகத் தகுந்த சான்றுகள் வழிநின்று பட்டியலிட்டுக் காட்டுகிறது, முதற்கட்டுரை.

அரபு மொழியின் எழுத்து வளத்தையும், சொல்லாட்சியையும், உணர்த்துகிறது ''வையகம் போற்றும் வான்மொழி'' என்னும் இரண்டாவது கட்டுரை.

அரபி மொழி உலக மொழிகளின் மீது பெற்றிருக்கும் செல்வாக்கை தக்க சான்றுகள் வழி நிறுவுகிறது, இக்கட்டுரை, ''பழைய துருக்கி, பாரசீகம், உருது, மலேயா, சுவாஹிலி, காஷ்மீரி, சிந்தி, அரபுத்தமிழ், அரபு மலையாளம் ஆகிய மொழிகள் எழுதுவதற்கு அரபி லிபி பயன் படுத்தப்படுகின்றது'' என்று கூறும் பேராசிரியர், தென்னக மொழிகளில் அரபுச் சொற்கள் பெற்றுள்ள செல்வாக்கை, ''அசல், நகல், ஆபத்து, அமல், இனாம், அத்தர், ஹாஜர், தாக்கீது, ஸலாம், ராத்தல்'' போன்ற வழக்காற்றுச் சொற்கள் வழி அறியலாம் என்கிறார்

அரபிமொழியின் தனித்தன்மையை அடையாளமிட்டுக் காட்டுகிறது கட்டுரையின் இறுதிப்பகுதி

''ஒரு பொருளின் பல நிலைகளையும் பருவங்களையும் குறிப்பதற்கு அரபியில் தனித்தனி சொற்கள் அமைந்துள்ளன ''

''மானின் எட்டுப்பருவங்களைக் குறிக்க எட்டுச் சொற்கள் பகல் நேரத்தின் ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒவ்வொரு சொல். சந்திரன் தோன்றும் ஒவ்வோரிரவுக்கும் ஒவ்வொரு சொல் ஐந்து விரல் களுக்கும் ஐந்து தனிச் சொற்கள். கண்பார்வையின் ஏழு நிலைகளைக் குறிக்க ஏழு சொற்கள். காது மந்தமானவர்களைக் குறிக்க காற்செவிடு (வகர்), அரைச்செவிடு (ஸமம்), முக்காற் செவிடு (தறஸ்), முழுச் செவிடு (ளக்) என நான்கு சொற்கள் ''

''ஒரு பொருளே அதன் எதிர் பொருளையும் தருவது அரபியின் இன்னொரு தனிச்சிறப்பு, 'கஅத' என்றால் 'நின்றான்' என்றும், 'அமர்ந் தான்' என்றும் பொருள் தரும்.''

''மேகம், மழை, கிணறு, நீர், பாம்பு, சிங்கம், வாள், ஒட்டகம் போன்றவற்றைக் குறிக்க நூற்றுக்கணக்கான சொற்கள் உள்ளன ''

''மூன்று பொருட்களைத் தரும் 300 சொற்களும், நான்கு பொருட்களைத் தரும் 400 சொற்களும், இருபது பொருட்களைத்தரும் 200 சொற்களும் அரபுமொழிக்கு அணி செய்கின்றன'' என்கிறார், பேராசிரியர்

கல்வியாளர்களின் சிறப்புணர்த்தும் கட்டுரை - ''அருமறை பகரும் அறிஞர் உயர்வு ''

இறைமொழியும் நபிமொழியும் கல்வியாளர்களை எவ்வாறு உயர்வு படுத்துகின்றன என்பதற்கு அடுக்கடுக்காய் சான்றுகள் வழங்குகிறார், பேராசிரியர்.

''அறிவைப் பெறுவது ஆண்-பெண் அனைவர் மீதும் கடமையாகும்''

''அறிவென்பது காணாமல் போன ஒட்டகம்; அதை எங்கே காணினும் பிடித்துக் கொள் ''

''பொருகளக் குருதியினும் பேனாவின் ஒரு துளி மை உயர்ந்தது ''

-என்பன ஆசிரியரால் அடையாளம் காட்டப்படும் கல்வி குறித்த நபிமொழிகளுள் சில

இறைவனால் நபிகள் நாயகத்திற்கு அருளப்பட்ட திருக்குர்ஆன் என்னும் திருமறையின் பெருமையை எடுத்துரைக்கும் கட்டுரை - ''இறையருள் இலக்கியம் ''

ஒட்டுமொத்த அறிவின் சாரமாய் திருக்குர்ஆன் திகழ்வதைப் பின் வரும் தக்கலை ஞானமேதை பீரப்பா பாடல்வழி புலப்படுத்துகிறார், கட்டுரையாசிரியர்

**''அறிவுவகை எத்தனையென் றறியவகை இல்லை;
அத்தனையும் அவனுரைத்த அருமறையிலடக்கம்.
எத்தனையோ கோடிமறை இறையுரைத்ததெல்லாம்
எடுத்தொடுக்கி குர்ஆனை இறையிறக்கிக் கொடுத்தான்.''**

''திருமறையின் எளிமையும், இனிமையும், ஆழமுடைமையும் கட்டுக் கோப்பும், சொல்லாட்சியும் அரபிமொழிக்கு அழியாப்புகழை ஈந்துள்ளன '' என்றுரைக்கும் பேராசிரியர்,

“அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போன்று திருமறையின் ஓசை நயம் ஈடு இணையற்றதாகத் திகழ்கிறது. கேட்டாரைப் பிணித்து கேளாரும் வேட்பமொழிகின்ற சொற்களையும், தீம்பாலும், கற்கண்டும், தெளிதேனும், கனிச்சாறும் ஒன்றாகக் கூடினாற்போன்ற ஒப்பற்ற இனிமையையும் பெற்றிலங்குகின்ற காரணத்தால், அக்காலத்து மக்கத்துப் பகைவர்கள் திருமறைத்தொடர்கள் தங்கள் செவிகளிலே நுழைந்து விடாமலிருக்க காதுகளிலே பஞ்சு வைத்து அடைத்திருந்தனர்'' என்று திருமறையின் ஒலிநயத்தை எடுத்துரைக்கின்றார்.

அறிவியல் புரட்சியில் முஸ்லிம்களின் பங்கு கணிசமாக இருந்ததை எடுத்தியம்புகிறது ''அறிவுத்துறையில் முஸ்லிம்கள்'' என்னும் கட்டுரை.

''முற்கால விஞ்ஞானத்தையும் தற்கால விஞ்ஞானத்தையும் தொடர்புபடுத்தியவர்கள் முஸ்லிம்களே யாவர்'' என்னும் ஸர் ஆலிவர் லாட்ஜ் என்னும் அறிஞரின் கருத்தை மேற்கோளாக எடுத்துக்காட்டும் கட்டுரையாசிரியர் அதற்குச் சான்றாய் பல ஆதாரங்களைத் திரட்டித் தருகிறார்.

''கிரேக்கர்களின் மருந்து செடி வரிசையிலே அராபியர்கள் இரண்டாயிரம் தாவர வகைகளை அதிகமாகச் சேர்த்தனர் அர்ராஸி என்பாரின் ''அறுவை'' நூலும், இப்னுஸீனாவின் கானூனும், அலிஇப்னு அப்பாஸின் ''கிதாபுல் மாலிகி''யும் மருத்துவத் துறையிலே மாணிக்கங்களாக மிளிர்கின்றன.''

முதன்முதலில் குருடர்களுக்கும் குஷ்டரோகிகளுக்கும் ஆஸ்பத்திரி அமைத்தவர், அப்பாசிய வம்ச விளக்கு வாலிதே ஆவார்.

முஸ்லிம்களால் நிறுவப்பட்ட ஆஸ்பத்திரிகளில் பெண்களுக்காக தனிப்பகுதிகள் அமைந்திருந்தன; மருத்துவ நூல்நிலையங்கள் இருந்தன.

ஊர்ந்து செல்லும் மருத்துவ நிலையங்கள் முதல்முதலில் 11-ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்களாலேயே தொடங்கப்பட்டன

என்னும் பல அரிய தகவல்கள் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

''பாரகம் போற்றும் நூலக முன்னோடிகள்'' என்னும் கட்டுரை, இஸ்லாமியர்களின் அறிவுத்தாகத்திற்கு இன்னுமொரு எடுத்துக் காட்டாய் அமைந்துள்ளது

''காகிதம் செய்வதை முதன் முதலில் சீனர்கள் கண்டு பிடித்த போதிலும் அதனால் பிற நாட்டார் பயனடையாமலே இருந்து வந்தனர். ஒரு போரில் முஸ்லிம்களால் சிறை பிடிக்கப்பட்ட சீனர்கள் சிலர், காகிதம் செய்யும் முறையை வெளியிட்டபின்னர், முஸ்லிம்கள் அக்கலையை அனைவர்க்கும் எடுத்துக்கூறி பெரிய அளவில் காகிதம் உற்பத்தி செய்தனர்'' என்னும் ஒரு புதிய தகவல் இக்கட்டுரையில் இடம் பெற்றுள்ளது.

''நூல்களைச் சேகரிப்பதிலும் நூலகங்களை நிறுவுவதிலும் முஸ்லிம் அறிஞர்களும் ஆட்சியாளர்களும் காட்டிய ஆர்வம் நம்மை வியப்பிலாழ்த்துகிறது ''

என்று கூறும் பேராசிரியர், நூலக உருவாக்கத்தில் இஸ்லாமியர் பங்களிப்பை பல சான்றுகள் வழி நிறுவுகிறார் அவற்றுள் சில:

''இஸ்லாமிய உலகில் முதல் நூலகம் கலீபா மாமூனுர் ரஷீது காலத்திலேதான் உருவாயிற்றெனக் கூறலாம். பாக்தாதின் பைத்துல் ஹிக்மா நூலகத்திற்கு ஒரு தனி அதிகாரியும் துணை அதிகாரியும் நியமனம் செய்யப்பட்டனர்.''

''இஸ்லாமிய நூலகங்களில் ஒட்டுமொத்தமாக அக்காலத்திலே இரண்டு கோடி நூல்கள் இருந்ததாக மதிப்பிடப்படுகின்றது. இவற்றுள் அன்று ஆட்சி பீடங்களாக விளங்கிய கெய்ரோ, கொர்தாவா ஆகிய இடங்களில் மட்டும் 65 லட்சம் நூல்கள் இருந்தனவாம்.''

''எல்லா நூலகங்களிலும் மூன்று பெரும்பகுதிகள் இருந்தன. நூற்களைப் பாதுகாக்கும் பகுதி 'தாருல் குதுப்' எனப்பட்டது நூல்களைப் படியெடுக்கும் பகுதி 'தாருல்கிதாபத்' எனப்பட்டது. வாசகர்கள் அமர்ந்து படிப்பதற்குப் பயன்படுத்தும் பகுதி 'தாருல் முதாலஅ' எனப்பட்டது.

''நூலக அதிபர் பதவி அக்காலத்தில் மிக்க பொறுப்புடையதாகவும் சிறப்புடையதாகவும் கருதப்பட்டது நேர்மையாளர்களும் பேரறிஞர் களுமே அப்பதவியில் அமர்த்தப்பட்டனர். பெரும்பாலும் அவர்கள் புகழ்ப் பெற்ற நூல்களின் ஆசிரியராகவே இருந்தனர். அவர்கள் நூலக மேற்பார்வையை மட்டுமின்றி நூல்களைக் கண்ணை போல் போற்றிக்

காப்பதையும் வாசகர்களுக்கு வழி காட்டுவதையும் தங்கள் கடமையெனக் கொண்டிருந்தனர்.

''நூல்களைப் படியெடுக்கும் காத்தீப்கள் எல்லா நூலகங்களுக்கும் தேவைப்பட்டனர். ஒரு நூலகத்தில் மட்டும் 180 காத்தீப்கள் இருந்ததாகத் தெரிகிறது ''

''நூலகங்களில் அட்டைகள் கட்டுவதற்கும் பழைய நூல்களைப் பழுது பார்ப்பதற்கும் தனிப்பகுதிகள் இருந்தன. அப்பிரிவுகளில் பணியாற்றியோர், நூல்களுக்குச் செம்மையான அட்டைகள் கட்டியதோடு மட்டுமின்றி நூல்களின் தோற்றத்தைப் பல வகைகளிலும் சிறக்கச் செய்தனர் சில நூல்களுக்கு அட்டை கட்டுவதற்குப் பெரும் பொருள் செலவிட்டனர். சில நூல்களை பொன்னாலும் மணியாலும் அழகுபடுத்தினர் சில நூல்களுக்கு வெள்ளி முலாம் பூசினர் சிலவற்றில் முத்துக்களைப் பதித்தனர் ''

''அறிஞர் ஸஅதியின் குலிஸ்தான், பிர்தௌஸியின் ஷாநாமா, குஸ்ரூவின மஸ்னவி, எஸ்தியின் ஸபர்நாமா ஆகிய நூல்களின் கையெழுத்துப் பிரதிகள் பாபரின் நூலகத்திற்கு அணியாகத் திகழ்ந்தன.''

- இவ்வாறு நூலக உருவாக்கத்திலும் அதன் பயன்பாட்டிலும் அதனைப் பேணிக்காக்கும் திறனிலும் இஸ்லாமியர்களின் இன்றியமையாப் பங்களிப்பை இக்கட்டுரை வழி அறிய முடிகிறது

இறுதியாக அமைந்துள்ள 'இறைஞானம்' என்னும் கட்டுரை இறைவனின் கட்டளைகளை அறிந்துணரும் ஞானம் இறைதூதர்களுக்கு மட்டுமே உரிய ஒன்றாய்த் திகழ்ந்ததையும், நபிகள் நாயகம் மறைவிற்குப் பிறகு இறைநேசச் செல்வர்கள் உள்ளுணர்வு வாயிலாக இறைஞானச் செல்வத்தை அடைய முடிந்தது என்றும் எடுததுரைக்கிறது.

## இனிக்கும் இறைமொழி

இஸ்லாத்தை அறிவதற்கும் புரிவதற்கும் ஆசைப்படும் ஒவ்வொருவருக்கும் உதவும் துணைக் கருவியாய் அமையும் நூல் - 'இனிக்கும் இறைமொழி'

திருக்குர்ஆன் மொழியும் கருத்துக்களின் தெளிவுரையாய் அமைந்த 21 கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல்

'மதிநா' என்னும் இஸ்லாமியத் திங்களிதழில் தொடர் கட்டுரையாய் வெளிவந்து பின் நூல் வடிவம் பெற்றது.

'கலிமா' என்னும் நம்பிக்கையின் இன்றியமையாமையை உணர்த்துகிறது, முதல் கட்டுரை

"இறைவனைத் தவிர வணங்குவதற்கு உரியவர் எவருமில்லை; நபிகள் நாயகம் இறைவனின் திருத்தூதர்" என நம்பிக்கைக் கொள்வது ஒவ்வொரு முஸ்லிமின் முதற்கடமையாகும் இந்நம்பிக்கையே 'கலிமா' என்றழைக்கப்படுகிறது.

"கலிமா என்பதற்கு சொல், வாக்கு, மொழி, பொன்மொழி, நீதி மொழி,செல்வாக்கு, சிற்றறிக்கை, ஆணை, ஆதிக்கம், கனம், ஏற்றம் என்பதாகப் பலப் பொருள்கள் இருந்தாலும் இங்கு சொல், வாக்கு, என்னும் பொருளையே தருகிறது" என விளக்கம் தருகிறார் பேராசிரியர்.

'அஸ்ஸலாமு அலைக்கும்' என்னும் தலைப்பில் அமைந்த இரண்டாவது கட்டுரை, இஸ்லாமியர்களிடையே வழக்கில் இருக்கும் முகமன் கூறும் முறையை அலசி ஆராய்கிறது.

மனிதர் இருவர் ஒருவரை ஒருவர் சந்தித்தால் முகமன் கூறுவது உலக இயல்பு. இது இடத்திற்கு இடம் எவ்வாறு வேறுபடுகிறது என்பதற்கு ஒரு நீண்ட பட்டியலைத் தருகிறார், பேராசிரியர்.

"எனது நாவால் உனக்கு எந்த வித தீமையும் விளையாது" என்னும் கருத்துப்பட நாவை நீட்டிக் காட்டுவர், திபெத்து நாட்டு மக்கள்.

அடுத்தடுத்து நிற்கும் அசோக மரங்கள் காற்றில் அசைந்தபடி உராய்வதைப் போன்று மூக்குகளை உரசிக்கொள்வர், நியூஜிலாந்தின் பழங்குடிமக்கள்

இரும்புலக்கையை தூக்கிப் பிடித்தாற்போன்று மூடிய வலதுகையை உயர்த்திக் காட்டுவர், நைஜீரிய மக்கள்.

படிக்கத்தில் உமிழ்வதைப் போன்று உள்ளங்கையில் உமிழ்வர் சூடான் நாட்டின் ஒரு சாரார்."

இப்படி உலகில் நடைமுறையில் இருக்கும் விநோதமான முகமன் கூறும் முறைகளைப் பட்டியலிட்டுப் காட்டும் பேராசிரியர், இஸ்லாமியர்களிடையே வழக்கில் இருக்கும் முகமன் கூறும் முறைக்கு உரிய காரண காரியங்களை இக்கட்டுரை வழி ஆராயகிறார்.

''இஸ்லாம்'' என்னும் சொல்லுக்கு ''சாந்தி, சமாதானம், கீழ்ப்படிதல் என்பன பொருளாகும்' என விளக்கும் பேராசிரியர்,

''சாந்தியும் சமாதானமும் இஸ்லாமிய நெறியின் குறிக்கோள்'' என்றுரைத்து, அதன் அடிப்படையிலேயே இஸ்லாமியர்களுடையே முகமன் கூறும் வழக்கம் நிலவுவதாகக் குறிப்பிடுகிறார்.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமைக் காணுமிடத்து ''அஸ்ஸலாமு அலைக்கும்'' என முகமன் கூற வேண்டும். 'உமக்குச் சாந்தியும் சமாதானமும் உண்டாகுக' என்பது இதன் பொருள். பதிலுக்கு முகமன் கூறப்பட்டவர் 'வ அலைக்கு முஸ்ஸலாம்'' என்றுரைக்க வேண்டும். ''உமக்கும் அவ்வாறே ஆகட்டும்'' என்பது இதன் பொருள்.

ஒரு மனிதர் இன்னொரு மனிதரைப் பார்த்து இவ்விதம் கூற வேண்டியதன் அவசியம் யாது?

பேராசிரியர் விளக்கம் தருகிறார்:

''ஆள்பவனாக இருந்தாலும் ஆளப்படுபவனாக இருந்தாலும் அற நெறி வழுவா முறையிலேயே முஸ்லிம் ஒருவன் தன் அவனி வாழ்வை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்''

மனிதர்களுடன் கொள்ளும் எல்லா தொடர்புகளிலும் நீதி நேர்மையை கடைப்பிடிப்பது சாந்தியும் சமாதானமும் நிலைத்திருப்ப தற்குக் காரணம் ஆகின்றது.

ஆதி மனிதனாக ஆதத்தைப் படைத்த இறைவன் தன் படைப்பினத்தில் உயர்ந்த நிலையில் இருக்கும் வானவர்களை நோக்கி ''நீவிர் இவருக்குச் ஸலாம் கூறுக!'' எனக் கட்டளையிட, வானவர் களும் அவ்வாறே இறைவனின் கட்டளைக்கு அடிபணிந்து நடக்க அன்றிலிருந்து ஸலாம் கூறும் வழக்கம் உலகில்நடைமுறைக்கு வந்ததாக நபிமொழி ஒன்றினை மேற்கோள் காட்டி கூறுகிறார், பேராசிரியர்.

"விரட்டப்பட்ட சைத்தானை விட்டும் இறைவனிடம் காவல் தேட வேண்டும்" என்னும் கருத்தை வலியுறுத்துகிறது, மூன்றாவது கட்டுரை

"இறைவனின் திருப்பெயர் போற்றி எந்த ஒரு காரியத்தையும் தொடங்க வேண்டும்" என்னும் நடைமுறையை நயம்பட எடுத்துரைக்கிறது, நான்காவது கட்டுரை.

எந்த ஒரு செயலைத் தொடங்கினாலும் "பிஸ்மில்லா ஹிர்ரஹ் மானிர்ரஹிம்" என்று கூறுவது இஸ்லாமியரிடம் நிலவும் பொதுவான நடைமுறை. "அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடை யோனுமாகிய இறைவன் திருப்பெயரால் தொடக்கம் செய்கிறேன்" என்பது இதன் பொருள்.

இதனையே கவினார் கவிதை நடையில்,

**"அலகிலா அருளும் அளவிலா அன்பும்**
**இலகுமோ ரிறையின் இனிய பேர் போற்றி"**

என அறிமுகம் செய்த பெருமை, இறையருட் கவிமணிக்கு உரியது.

திருமறையின் தொடக்கமாக அமையும் முதல் அத்தியாயத்தின் முதல் வசனத்தின் சிறப்பை விரித்துரைக்கிறது, ஐந்தாவது கட்டுரை.

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இறைவனின் தனிப்பெரும் ஆளுமையை உணர்த்தும் வகையில் "அல்லாஹு அக்பர்" (இறைவன் மிகப்பெரியவன்) என்னும் தலைப்பில் ஆறாவது கட்டுரை அமைந்துள்ளது.

திருமறையின் முடிவுரையாகத் திகழும் கடைசி அத்தியாயத்தின் சிறப்பை ஏழாவது கட்டுரை எடுத்தோதுகிறது இக்கட்டுரையின் தொடக்கத்தில் இறையருட் கவிமணி கையாண்டுள்ள உரைநடை உத்தி படிப்பவரை வியப்பில் திகைக்க வைக்கிறது.

"பூவை நகையுறுத்தி, புல்லை வியப்பாக்கி எழுகின்ற கதிரவன்; பொற்குடத்தில் பாலேந்திச் சொரிவதைப் போன்ற முழு நிலா; எல்லை யற்றுக் கவிந்திருக்கும் வான்வெளி; அவ்வானளாவி நிற்கின்ற வனப்புமிகு மலைகள்; அம்மலைகளிலிருந்து பெருக்கெடுத்தோடு கின்ற பேராறுகள்; அப்பேராறுகளை அணைத்து நீண்டு விரிந்து கிடக்கும் நீலக்கடல், அக்கடலில் இருந்து நீராவியாக மேலெழுந்து வரண்ட நிலத்திற்கு வாழ்வளிக்கின்ற மழை, நீலக்கடலை பிளந்து

நிமிர்ந்து செல்கின்ற நாவாய்கள்; நட்ட நடுநிசியில் வானிலே மின்னுகின்ற விண்மீன்கள்; பல்வேறிடங்களிலும் பண்ணிசைத்துப் பறக்கின்ற பறவைகள்; கொடிகளிலும் செடிகளிலும் மரங்களிலும் அசைந்தாடுகின்ற வண்ணமலர்கள்; அம்மலர்களைப் புன்னகையால் வென்றுவிடுகின்ற குழந்தைகள், நீரிலும் நிலத்திலும் வாழ்கின்ற கோடிக்கணக்கான உயிரினங்கள் - இவற்றையெல்லாம் கூர்ந்து நோக்கு வோர் அனைத்தும் படைத்த அருளாளனின் படைப்பாற்றலை வியந்து போற்றுவதற்குத் தவறமாட்டார்கள்''

என்று இறைவனின் படைப்பு அற்புதத்தைப் பட்டியலிடும் பாங்கு படிப்போரை வியக்க வைத்து பரவசத்தில் ஆழ்த்துகிறது

''இறைவன் வரையும் இறை நம்பிக்கையாளனின் இலக்கணம்'' என்னும் பொருளில் அமையும் எட்டாவது கட்டுரை, ''இறைவனின் பிரதிநிதியாக விளங்கும் மனிதன் குறிக்கோளுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உரிய பயிற்சியை வழங்குவது அவனது பெற்றோரின் பொறுப்பு'' என்னும் கருத்தை வலியுறுத்துகிறது.

'நன்மைகளை ஏவி தீமைகளைத் தடுப்பதற்கு ஒரு குழு தேவை' என்னும் இறைமறை உரையின் விளக்கமாய்த் திகழ்கிறது. ''நல்லன ஏவி அல்லன தடுப்போம்'' என்னும் பெயரிய எட்டாவது கட்டுரை.

''வாழ்க்கைப் படகில் ஏறிப் பயணம் செய்யும் மாந்தர் துன்பச் சுழலில் சிக்காமல் இன்பத் துறையை அடைவதற்கு தொழுகை என்னும் வணக்கம் கலங்கரை விளக்கமாய்த் திகழ்கிறது'' என்கிறது, ''வெற்றியைப் பெற்றிட விரைந்து வாரீர்'' என்னும் ஒன்பதாவது கட்டுரை.

இரமலான் நோன்பு மனிதனுக்கு வழங்கும் ஆன்மீகப் பயிற்சி அனுபவத்தின் வெளிப்பாடாய் அமைகிறது, ''திருமறை ரமலான் திகழ்தருநோன்பு'' என்னும் பதினோராவது கட்டுரை.

ஈகையின் மேன்மையை எடுத்துரைக்கிறது'' பெற்றதில் இருந்து பிறர்க்களிப்பீர்'' என்னும் பன்னிரண்டாவது கட்டுரை.

மக்க மாநகரின் மையமாய் திகழும் 'கஃபத்துல்லா' என்னும் இறையில்லத்தின் பெருமையை எடுத்துரைக்கிறது, ''மாநில மார்பில் மாண்பிறை இல்லம்'' என்னும் பதின்மூன்றாவது கட்டுரை.

''வாழ்வின் நோக்கம் வணக்கமேயாகும்'' என்னும் பதினைந்தாவது கட்டுரை, மனிதன் இப்பூமியில் படைக்கப்பட்டதன் உன்னத நோக்கத்தை உணர்த்துகிறது.

தவறுகளுக்கு வருந்தி 'பாவ மன்னிப்பு' தேடவேண்டியதன் அவசியத்தை பதினைந்தாவது கட்டுரை எடுத்தியம்புகிறது

நபிகள் நாயகம் இறைவனுடன் கலந்துறவாடக காரணமாய் அமைந்த விண்ணேற்ற நிகழ்ச்சியின் சிறப்பை பதினாறாவது கட்டுரை எடுத்துரைக்கிறது

பெற்றோரிடம் அன்பு செலுத்த வேண்டியதன் அவசியத்தை திருமறை வெளிச்சத்தின் ஒளியில் நின்று அறிவுறுத்துகிறது 'பேணிக் காக்கும் பெற்றோர்க் கருள்வாய்' என்னும் பதினேழாவது கட்டுரை.

ஆடம்பரச் செலவுகள் செய்பவர்களைக் கடிந்துரைக்கிறது. 'வீண் செலவாளரை விரும்பான் இறையோன்'' என்னும் கட்டுரை.

இறைவனின் திருமறை இப்பூமிக்கு இறங்கிய புனிதமிகு இரவின் பெருமையுணர்த்துகிறது. ''மாமறை இறங்கிய மாண்பார் இரவு'' என்னும் இருபதாவது கட்டுரை.

இறைவனின் திருத்தூதர் முகம்மது நபிமீது புகழ்ச்சி கூறுவோர் அடையும் அளப்பரிய நன்மைகளை அடுக்கியுரைக்கிறது ''சாற்றுவோம் நபிமேல் ஸலவாத்து ஸலாம்'' என்னும் இறுதிக் கட்டுரை

## மிக்க மேலானவன்

இறையருட் கவிமணி தன் வாழ்நாளின் இறுதிக் கட்டத்தில் எழுதி வெளிவந்த திருமறை வசன விளக்கக் கட்டுரைகளின் தொகுப்பு, ''மிக்க மேலானவன்'' என்னும் உரைநூல்.

இறையருட் கவிமணி எழுதிய உரை நூல்களில் மிக உயரிய இடத்தை இந்நூல் பெற்றுத் திகழ்வதாக இந்நூலைப் படித்து இன்புற்ற சான்றோர் குறிப்பிடுகின்றனர்.

திருமறையின் ''அல் அஃலா'' என்னும் 87-வது அத்தியாயத்தின் கருத்துகளுக்கு விளக்கம்தரும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந் நூல் எழுதப்பட நேர்ந்த காரணத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார், இறையருட் கவிமணி

''உலக வரலாற்றில் மிகவும் நெருக்கடியான ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலக மக்கள் தொகை 600 கோடியை எட்டிப்பிடிக்கவிருக்கும் இத்தருணத்தில் எங்கும் கூச்சலும் குழப்பமும், போரும் பூசலும் நிறைந்து காணப்படுகின்றன. மக்களின் மனதில் மகிழ்ச்சி இல்லை, அமைதி இல்லை; வாழ்வின் குறிக்கோளை மறந்து, பார்வை பழுதுபட்டு, 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என எல்லோரும் அலைகின்றனர்

உலகமனைத்தும் அமைதியின்றி எங்கும் அழிவே பெருகிவரும் இக்காலத்தில் மனித நேயம் மிகுந்த சமுதாய நல்லிணக்கம் அமைவதற்காக, ஓரிறையின் ஒப்பற்ற உயர்வை, ஈடிணையில்லாத இயல்பை - அனைவரும் உணருமாறு எடுத்துரைப்பதே, ''மிக்க மேலானவன்'' என்னும் பெயரில் வெளிவரும் இந்நூலின் நோக்கமாகும் ''

''படைத்தல், ஒழுங்குபடுத்துதல், விதியை நிர்ணயித்தல், வழி காட்டுதல் ஆகிய நான்கு பண்புகளும் ஒருங்கே அமைந்த அல்லாஹ்வே மிக்க மேலானவன்'' என்னும் கருத்தை தக்க விஞ்ஞான ஆதாரங்களின் அடிப்படையில் எடுத்துரைக்கிறது, நூலின் முதல் கட்டுரை

இறைவனின் படைப்பில் புல்லினத்தில் 4500 இனங்கள்; பூச்சிகளில் ஆறு இலட்சத்திற்கும் அதிகமான இனங்கள், மரவகைகளில் 3500; எறும்புகளில் 5000; மீன்களில் 20000; வண்ணத்துப் பூச்சிகளில் 15000, வாழைமரத்தில் 200, குதிரைகளில் 150 இனங்கள்'' இருப்பதாக பட்டியலிடும் ஆசிரியர், இவை யாவையும் இறைவன் தன் அருளால் மனிதர்களுக்குக் கட்டுப்படுத்தி வைத்தான் என்பதற்கு பின்வரும் இறைமொழியைச் சான்று காட்டுகிறார்:

''அன்றி, வானங்களிலும், பூமியிலுள்ள அனைத்தையுமே அவன் தன்னுடைய அருளால் உங்களுக்குக் கட்டுப்படுத்தி வைத்தான்'' (திருக்குர்ஆன்: 45 13

இறைவனது படைப்பின் அற்புதத்தைப் பல்வேறு சான்றுகள் கொண்டு நிறுவுகிறார்.

சிறுமீன்சினையை விட நுண்ணிதாய் இருக்கின்ற ஒரு விதையில் இருந்து வெளிப்படும் ஆலமரம் விரிந்து 520 விழுதுகளுடன் மூவாயிரம்பேர் அமரத்தக்க நிழலைக் கொடுக்கும் அதிசயத்திற்குச் சான்றாய் அடையாறு ஆலமரம் திகழ்வதைக் காட்சிப்படுத்துகிறார்.

நாரை இறகின் நடுநரம்பின் உடபுறத்தில் எண்ணாயிரம் கொக்கிகள் இருப்பதும், தேனீயின் விழியில் 12000 ஆடிகள் (லென்சுகள்) இருப்பதும், மரங்கொத்திப்பறவை மணிக்கு 1500 மைல் வேகத்தில் மரத்தைக் கொத்துவதும், சிட்டுக்குருவி தன் குஞ்சுக்கு ஒரு நாளைக்கு 300 தடவை உணவு ஊட்டுவதும், சிலந்திப் பூச்சி ஒன்றரை மணி நேரத்திற்குள் 450 மைல் நீளமுள்ள நூலை உற்பத்தி செய்வதும் - வியகக வைக்கும் இறைவனின் படைப்பாற்றல் திறனுக்குச் சான்றாய் இவர் காட்டும் தரவுகளாய் அமைகின்றன "உயிரினங்களுக்கு வாழ்க்கையை நிர்ணயித்துள்ள இறைவன் வாழ்வதற்குரிய இடங்களையும் உயிரினங்களின் இயல்புக்கேற்றவாறு படைத்துள்ளான்" என்றுரைக்கும் ஆசிரியர் அதற்குரிய அறிவியல் சான்றுகளை பின் வருமாறு அடுக்கி வுரைக்கிறார்

"கட்டைவிரல் அளவேயுள்ள ரீங்காரச் சிட்டு அதற்குரிய சின்னஞ் சிறு கூடடைக் கட்டுகிறது. மிகப் பெரிய கூட்டினைக் கட்டுவது வழுககைத் தலை கழுகு அமெரிக்க ராபின் பறவை மண்ணால் கூடுகட்டும் மலேசிய மீன் கொத்தி தான் தின்ற மீன்களின் முட்களை ஓரிடத்தில் சேர்த்து வைத்துகூடுகட்டும், நியூகினியிலுள்ள பொன் பந்தல் குருவி தன் கூட்டின்மேல் மலர்களை வைத்து அலங்கரிக்கும். ஹோரட்சின் பறவை, குரங்குகளால் தீங்கு வராமலிருக்க, நீரோடையின் மேல் தொங்கு கூடமைக்கும் என்று பறவைகள் கூடமைக்கும் அழகைப்பட்டியலிட்டுக் காட்டுகிறார்

"உங்களுக்கு தூக்கத்தைச் சுகம் தருவதாகவும் ஆக்கினோம்" என்னும திருமறை கருத்தை (78 9) முன்னிறுத்தி. மனித வாழ்வில் தூக்கத்திற்குத் தரவேண்டிய இன்றியமையாத இடத்தைப் பின் வருமாறுப் பட்டியிலிடுகிறார்

"நூறாண்டுகாலம் வாழும் மனிதன் 23 ஆண்டுகளை தூக்கத்தில் செலவிடுகிறான் உடலும் மூளையுமசு வளர்ச்சியைப் பெறுவதற்கும் உடல்தளாச்சியை அகற்றுவதற்கும தூக்கம் இன்றியமையாததாகும். பிறந்த குழந்தை 18 மணிநேரம் தூங்குகிறது, ஒரு மனிதன் உறங்காம லிருந்தால் 14 நாட்களில் இறந்து விடுவான் இப்பொது விதிக்குப் புறம்பாக ஆண்டுக்கணக்கில் தூங்காதோரும் வாழ்ந்துள்ளனர்" என்று தூக்கத்திற்கும் மனிதனின் அன்றாட வாழ்விற்கும் இடையே உள்ள தொடர்பைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்

இவ்வாறு இறைவனது படைப்பாற்றல் திறனை நடைமுறை அறிவியல் எடுத்துக்காட்டுகளோடு பொருத்திக் காட்டி நம்விழிகளை வியப்பால் மலர வைக்கின்றது, 'மிக்கமேலானவன் மிகு நற்பண்புகள்' என்னும் முதல் கட்டுரை.

''வியத்தகு தாவர விலங்கு மீன் பறவைகள்'' என்னும் தலைப்பில் அமைந்த இரண்டாவது கட்டுரை, இறைவனால் படைக்கப்பட்ட உயிரினங்கள் ஒவ்வொன்றும் தனக்கென வடிவமைக்கப்பட்ட ஒரு வாழ்க்கை ஒழுங்கை கடைப்பிடித்து வாழ்வதை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து படைத்தவனின் ஆற்றலை, படிப்பவர்களை உணர வைத்து வியப்பில் ஆழ்த்துகிறது.

ஒட்டகம், வானம், மலை, பூமி, ஆகிய நான்கின் படைப்டைக் கண்டு மனிதன் படிப்பினைப் பெறவேண்டும் என்னும் திருக்குர்ஆர் கருத்தினை (88: 17-20) அடியொற்றி அறிவியல் நோக்கில் ஒட்டகத்தின் தனித்தன்மையை பேராசிரியர் விவரிக்கிறார்.

''அல்லாவின் அருட்கொடை என்று அரபிகளால் போற்றப்படும் ஒட்டகம் விசித்திரமான தோற்றத்தைக் கொண்டு முரட்டுத் தனமான உணவுகளை உட்கொண்டு, பல நாட்கள் பசியையும் தாகத்தையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றுள்ளது 225 கிலோ வரை யிலுள்ள சுமையைத் தாங்கி நாளொன்றுக்கு 40 கிலோ மீட்டர் வரை நடந்து செல்லும் வலிமை வாய்க்கப் பெற்றது. ஒட்டக முதுகில் உள்ள திமிலில் உள்ள கொழுப்பைப் பயன்படுத்திக்கொண்டு பத்து மாதங்கள்வரை ஒட்டகம் நீரில்லாமல் வாழ முடியும்'' என்று ஒட்டகத்தின் விந்தை குணங்களைப் பட்டியலிடும் பேராசிரியர் இறைவனது படைப்பாற்றலுக்குச் சான்றாய் அதனை அடையாள மிட்டுக்காட்டுகிறார்.

கால்நடைகள் வழி பெறும் பாலும், 'தேனீக்களின் வழி பெறப்படும் தேனும் இறைவன் மனித குலத்திற்கு வழங்கிய மாபெரும் நிவாரணங்களாய் இருப்பதை திருமறை மொழிகள் வழி உறுதிப்படுத்துகிறார்.

பல்வகைப்பட்ட தேனீக்களின் வாழ்க்கையை மிக விவரமாக எடுத்துரைக்கும் பேராசிரியர், அவற்றின் வழி பெறப்படும்தேன் உலக மக்களின் அன்றாட வாழ்வில் இன்றியமையாத உணவுப் பொருளாகவும் மருத்துவப் பொருளாகவும் பயன்படுத்தப்படுவதை எண்ணற்ற ஏதுக்கள் வழி நின்று எடுத்துரைக்கிறார்.

அவ்வாறே திருமறையில் கூறப்படும் திராட்சை, மாதுளை, பூண்டு, இஞ்சி, வெங்காயம், கடுகு, போன்ற தாவரங்களின் பயன்பாடுகளும் இக்கட்டுரையில் விவரித்துக் கூறப்பட்டுள்ளது.

வான்மழை நீரால் வையகம் செழிக்கும்'' என்னும் தலைப்பில் அமைந்த, மூன்றாவது கட்டுரை, உலகில் வாழ் அனைத்து உயிரினங்களுக்கும் ஜீவ ஆதாரமாய்த் திகழும் நீரின் இன்றிமை யாமையை உணர்த்தி, அதனை அருளிய இறைவனுக்கு நாம் நன்றிக் கடன் பட்டுள்ளதை நயமுடன் எடுத்துரைக்கிறது.

கருவில் திருவாகும் மனிதனின் உருவாக்கத்தை ''சிறு மாமனிதனின் சிறப்பும் இழிவும்' என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரை விஞ்ஞான ஒளியில் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது.

''இறைவனை இறைஞ்சுதல் இடர்களைப் போக்கும்'' என்னும் இறுதிக் கட்டுரை, 'துஆ' என்னும் பிரார்த்தனையின் வழி மனிதன் இறைவனின் கருணையைப் பெறுவதற்கான வழிமுறைகளை எடுத்தியம்புகிறது.

ஆன்மீகமும், அறிவியலும், வெவ்வேறு திசை நோக்கிப் பயணிப்பவை என்னும் கருத்தைப் பொய்ப்பித்து, வாழ்க்கை என்னும் நாணயத்தின் இருபக்கங்களாய் அவை திகழ்வதை கற்றறிந்த மக்களை உணரவைக்கும் நோக்கில் வெற்றி பெற்றுள்ளது ''மிக்க மேலானவன்'' என்னும் இறையருட் கவிமணியின் இறுதி உரைநடை நூல்

# 3
# சிறுவர் இலக்கியம்

“குழந்தை இலக்கியம் படைப்பது என்பது விதை தயாரிக்கின்ற வித்தை, அது, நாற்றங்கால்களுக்குப் பாய்ச்சப்படுகின்ற நீர் மண்ணுக்கு வளத்தையும், உப்புக்குச் சாரத்தையும் ஊட்டுகிற செயல்'' என்கிறார், எழுத்தாளர் திலகவதி.

தமிழில் குழந்தைகளுக்கான இலக்கியத்தின் தோற்றம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தொடங்குகிறது.

''சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய கவிமணியும்(1876), பாரதியாரும்(1882)இந்நூற்றாண்டுக் குழந்தைகளுக்குக் கிடைத்துள்ள பெறறகரும்பேறு'' என்கிறார், குழந்தை இலக்கிய ஆய்வாளர், டாக்டர் அம்புஜம் யுவச்சந்திரா.

கவிமணியவர்கள் கோட்டாறு என்னுமிடத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணிபுரியும்போது குழந்தையுலகில் தனித்த ஈடுபாடு கொண்டு மழலை இலக்கியம் படைக்க தலைப்பட்டார்.

இயற்கையை, தத்துவத்தை, சமயச் சான்றோரை, உலக உத்தமர் களை, நடைமுறை செய்திகளை, சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை, சாதாரண மனிதனின் மனநிலையை முன்வைத்துப் பாடப்பட்டவை, கவிமணியின் பாடல்கள்.

''பெரியவர்களுக்காக பாரதியார் பாடிய நானூறுக்கு மேற்பட்ட கவிதையின் சாரம் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு பாடலாக பாப்பா பாட்டு திகழ்வதாக'' குழந்தை கவிஞர் அழ வள்ளியப்பா கருத்துரைக்கிறார்.

''பாரதியார் குழந்தைகளுக்காகப் பாடிய இருபாடல்களிலும் குழந்தைகளை எதிரே வைத்துக் கொண்டு அறிவுரை கூறுவது போல் பாடியிருக்கிறார். ஆனால் கவிமணியோ பெரும்பாலும் குழந்தை களோடு குழந்தைகளாக அவர்கள் அணியிலே நின்று அவர்களோடு

ஒன்றிய நிலையிலேயே பாடியுள்ளார்'' என்பதும் அழ.வள்ளியப்பாவின் கருத்தாகும்

கவிமணிக்கும் பாரதியாருக்கும் அடுத்து குழந்தைகளுக்காகவும் இளைஞர்களுக்காகவும் அதிகமான பாடல்களைப் பாடிய பெருமைக்கு உரியவர் பாவேந்தர் பாரதிதாசன்.

இவர்களின் வரிசையில் அமர்வதற்குரிய முழுத்தகுதியும் பெற்றுத் திகழ்கிறார், இறையருட் கவிமணி கா.அப்துல் கபூர் அவர்கள்.

முன்னரே குறிப்பிட்டதுபோல இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாய் பல்வேறு கல்லூரிகளில் தமிழ்த்துறைத் தலைவராகவும், கல்லூரி முதல்வராகவும் பணியாற்றிய பேராசிரியர் கா அப்துல் கபூர் அவர்கள் சென்னையில் தொடங்கப்பட்ட பள்ளி மாணவர்களுக்கான பிறைப் பள்ளியில் முதல்வராகப் பணியாற்ற ஒப்புக்கொண்ட ஒரே காரணம் - குழந்தைகள் நலனில் அவர் கொண்டிருந்த அக்கறையும் ஆர்வமுமேயாகும்.

குழந்தைகள் மீது அன்பு பூண்டு இவர் இயற்றியப் பாடல்கள் யாவும் ''அரும்பூ'' என்னும் பெயரில் 1989 ஆம் ஆண்டில் நூல் வடிவில் மலர்ந்தது.

குழந்தைகளின் மனம் கவரும் வகையில் எந்தக் குழந்தைக் கவிஞரின் எழுத்திற்கும் சளைக்காத வண்ணம் இவர் எழுதிய குழந்தைப்பாடல்கள் காலத்தால் பிந்தி அச்சு வடிவம் பெற்றதால் குழந்தை இலக்கியத் திறனாய்வு உலகில் இவரது குழந்தை இலக்கியத் திற்கான பங்களிப்பு யாராலும் கண்டுகொள்ளப்படாதஅரிய பொக்கிஷ மாகவே இன்னும் இருந்து வருகிறது.

ஆயினும் இவரது குழந்தைப்பாடல்கள் திசையறியாப் பகுதி யெல்லாம் புகுந்து ஊடுருவி குழந்தைகளின் உள்ளத்தில் கோலோச்சுவதை அனுபவரீதியாகக் கண்டுணர்ந்த எழுத்தாளர் தோப்பில் முகமது மீரான் தான் பெற்ற அனுபவத்தை பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

''கேரளாவில் குளத்துப்புழை என்னும் இடத்தில் இலங்கை அகதிகள் மறுவாழ்வு திட்டத்தின் கீழ் உள்ள ரப்பர் எஸ்டேட்டில் வைத்து குழந்தைகள் திறனைச் சோதிக்கும் இருநாள் நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. அந்நிகழ்ச்சிக்கு நான் விருந்தினராகச் சென்றிருந்தேன்.

அங்கு குழுமியிருந்த தமிழ் மாணவர்களிடம் ஒரு குழந்தைப்பாடலை பாடி யார் இயற்றிய பாடல் என்று கேள்வி கேட்கப்பட்டது''

''இறையருட் கவிமணி கா அப்துல் கபூர்'' என்று சட்டென்று ஒரு தொழிலாளியின் குழந்தை பதில் சொன்னபோதுதான் கவிஞருடைய குழந்தைப் பாடல் திரட்டான ''அரும்பூ'' நினைவுக்கு வந்தது.

தமிழகத்திற்கு வெளியே நகர நாகரிகங்களில் இருந்து விலகி மரங்கள் அடர்ந்த காட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாக குடி வாழும் மக்கள் மத்தியிலும் சின்னஞ்சிறு குழந்தைகளின் உள்ளங் களிலும் கவிஞர் குடிவாழ்கிறார் என்று தெரிந்து நெகிழ்ந்து போனேன். என் அண்டைய ஊர்க்காரர், உறவினர், நெருக்கமானவர் என்று அந்தக் கூட்டத்தில் நான் சொன்னது எனக்கும் பெருமையாக இருந்தது ''

காலத்தால் பிந்தி தோன்றினும் எடுத்துரைக்கும் கருத்தில் பிஞ்சு உள்ளங்களின் இதயங்களைக் கவ்விப் பிடிக்கும் ஆற்றலை இறையருட் கவிமணியின் பாடல்கள் பெற்றுத் திகழ்வதற்கு தோப்பில் முகமது மீரானின் அனுபவ உரை சான்றாய் அமைந்துள்ளது.

குழந்தைகளுக்கான ஒரு இலக்கியம் படைக்க வேண்டும் என்பது இறையருட் கவிமணியின் நீண்ட நாள் இலட்சியமாக இருந்து வந்துள்ளது. தான் குழந்தைகளுக்கான பாடலை உருவாக்கியதன் காரணத்தை நூலின் தொடக்கத்தில் இறையருட் கவிமணி இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

''ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளாக பல்வேறு இடங்களில் பல்வேறு நிலைகளில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பினை யான் பெற்றேன். என்னைவிட வயதில் முதிர்ந்தவர்களுக்கும் சின்னஞ்சிறிய சிட்டுகளுக்கும் கல்வியூட்டும் அனுபவமும் அடைந்தேன். தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமின்றி பாருலகின் பல்வேறு பகுதிகளிலும் என் அருமை மாணவர்கள் உயர்ந்த நிலைகளில் சிறந்திருப்பது கண்டு இறும்பூதடைகின்றேன்''

'சுவனத்தின் மலர்' என்றும் 'இதயத்தின் துண்டு' என்றும் மாமதியாளர் பாராட்டிய பால்வாய்ப் பைங்குழவிகள் என் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள். அவர்களைக் காணும்போது எழுகின்ற பாசம் பல்லாண்டுகளாக உள்ளத்துள்ளே உறைந்திருந்தது. அது வாழ்க் கையின் பல்வேறு நிகழ்ச்சிகளுடன் பின்னிப்பிணைந்து வேரூன்றி வளர்ந்து, கவிமலர்களாகப் பூத்து வந்துள்ளது

## சிறுவர் இலக்கியம்

நமது குழந்தைகள் பண்பாட்டின் வாரிசுகள் நமதுபண்பாடோ தனிச்சிறப்புகள் பலவாய்க்கப்பெற்ற ஓர் ஒப்பற்ற பூச்செண்டு. வாச மிகு பூச்செண்டின் பொலிவு மலர்கின்ற இதயங்களில் இடம் பெற வேண்டும்.

நாள் வாழ்விலே நம் குழந்தைகள் காண்கின்ற இயற்கைச் செடிகள், மரஞ்செடி கொடிகள், மலர், காய், கனிகள், விலங்கு, பறவை உயிரனங் கள்-ஆகியவற்றிலிருந்து அவர்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். விரைந்து வளரும் விஞ்ஞானப் புதுமைகளை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். புதிர்களைப் போட்டு அவர்களின் அறிவை சாணை பிடிக்க வேண்டும். புதுப் புதுக் கவிதைகள் கூறி அவர்களைச் சிரிக்கவைத்து சிந்திக்க தூண்ட வேண்டும். இத்தகைய நோக்கத்துடன் உருவான நூல் - ''அரும்பூ''- என்று நூலுருவாக்கப் பின் புலத்தைத் தெளிவு படுத்துதுகிறார், பேராசிரியர்

'அரும்பூ' நூலில் இடம் பெற்றுள்ள அனைத்துக் குழந்தைப் பாடல் களையும் சுவைத்து மகிழ்ந்த கோவை அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர்க் கல்வி நிறுவனங்களின் துணை வேந்தர், டாக்டர் இராசம்மாள் தேவதாஸ்,

''குழந்தை இலக்கியத்திற்கு தேவையான அத்துணைப் பொருட் பொலிவும் இந்நூலில் இடம்பெற்றுள்ளது. குழந்தைகள் உடல், உள்ளம், உயிர் மூன்றும் மலர்ச்சியடைய இது ஒரு அருமையான படைப்பு. எதிர் காலத்தில் நம் குழந்தைகள் நாட்டுப்பற்று உடைய வீரர்களாய், ஆண்மையுள்ளவர்களாய், அன்பும் ஒற்றுமையும் தன் மானமும் உள்ளவர்களாய் கருத்துக்கோடல்கள், மொழி பக்குவம் பெற்றவராய், மகத்தான காரியங்களைச் செய்பவர்களாய் தன்னம்பிக் கையோடு விளங்க வேண்டுமானால் இம்மாதிரிப் பாடல்களை எல்லாக் குழந்தைகளும் ருசித்து அனுபவிக்க வேண்டும். ஆகவே,எல்லா பள்ளிகளிலும் குறிப்பாக, மழலைப்பள்ளிகளில் உள்ள நூலகங்களில் இந்நூல் இடம் பெற வேண்டும்'' என்று பரிந்துரைக்கிறார்.

இறையருட் கவிமணியின் 'அரும்பூ' என்னும் குழந்தைப்பாடல் நூல், 1.மழலை அமுதம், 2. இனிக்கும் உறவுகள், 3.ஊரும் பேரும், 4. இயற்கை இன்பம், 5 நாடுபோற்றும் நல்லோர், 6. அறிவுரைக் கொத்து, 7. கதை கதையாம், 8 புதிரோ புதிர் என்னும் எட்டுப் பகுதி

களை உடையது இந்த நூலை ஆசிரியர் வேண்டுகோளின்படி தொகுத்துத்தந்தவர் அவருடைய மாணவர் சிற்பி பாலசுப்பிரமணியம்

முதல் பகுதியான 'மழலை அமுதம்', இறைவா' என்னும் முதற் பாடலில் தொடங்கி 'ஆசை' என்னும் இருபத்தைந்தாவது பாடலில் முடிகிறது.

**'நல்லன செய்தல் ஆற்றீராயின்**
**அல்லன செய்தல் ஓம்புமின்''**

என்னும் புறநானூற்றுப் புலவனின் அறிவுரையை உள்ளடக்கி,

**இறைவா! உனக்கோர்**
**இணையே இல்லை**
**நிறைவே தருவாய்**
**நேர் வழி காட்டுவாய்**
**நல்லவை செய்யும்**
**நாட்டம் நல்குவாய்!**
**அல்லவைத் தவிர்க்கும்**
**ஆற்றல் அருள்வாய்''**

என, 'இறைவா' என்னும் முதற்பாடலுடன் நூல் துவக்கம் பெறுகிறது. இறைவனின் சன்னிதானத்தில் தானே ஒரு குழந்தையாய் கவிஞர் உரு மாறி மனம் உருகிப் பிரார்த்தித்து நிற்பதைப் பாடலின் ஊடாகக் காண முடிகிறது.

சின்னக் குழந்தைகளின் செவிக்கமுதாய்த் திகழும் ஓசைநயப் பாடல்கள் இப்பகுதியில் அணிவகுத்து உலா வருகின்றன.

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்னும் மூத்தோர் நல்லுரையை முன்னிறுத்தி குழந்தைகளுக்கு எண் பயிற்சியைத் சொல்லித் தரும் பாடலாய் இரண்டாவது பாடல் அமைந்துள்ளது. கூடவே அந்தந்த எண்ணுக்குரிய சிறப்புக்களை குழந்தைகளின் மனதில் பதியவைக்கும் முயற்சி போற்றத்தக்கதாய் அமைந்துள்ளது.

**''எண்ணத் தொடங்கு ஒன்று**
**என்றும் இறையை ஒன்று!**

**ஒன்றும் ஒன்றும் இரண்டு**
**ஒளிரும் கண்கள் இரண்டு!''**

எனத்தொடர்கிறது பாடல்.

**"ஆசைதரும் கோடி அதிசயங்கள் கண்டதிலே**
**ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ''**

என்ற பாரதியின் பாடல் மொழிக் கேற்ப ஓசை இனிமையுடைய பாடல் அடுத்து இடம் பெறுகிறது.

**"கலகல கலகல கண்ணம்மா!**
**கண்ணைத் திறந்து பாரம்மா!**
**கிலுகிலு கிலுகிலு கிட்டப்பா!**
**கிலுகிலுப்பையைத் தட்டப்பா!''**

என்னும் பொருளிலிப் பாடல்கள் (நர்ஸரி ரைம்ஸ்) வழியும் பொருள் பொதியும் கருத்துக்களை சுருக்கியுரைக்க முயற்சிப்பது இறையருட் கவிமணியின் தனிச்சிறப்பாகும்.

ஒவ்வொரு வரியின் ஈற்றிலும் 'ஆம்' என்னும் ஓசையைக் கொண்டிலங்கும் நான்காவது பாடல்,

**"ஆக்காலமே ஆக்கலாம்**
**அன்பை நெஞ்சில் ஆக்கலாம்''**

எனத் தொடங்கி, பொறாமையை நீக்கலாம், பசுமைக் காட்சி பார்க்கலாம், கேள்விஞானம் கேட்கலாம், நிந்தைப்பேச்சை நீக்கலாம், உண்மை, நேர்மை ஊக்கலாம், புதுமைப் பூவாய்ப் பூக்கலாம் எனப்பல நல்லுரைகளைக் குழந்தைகளின் காதில் எடுத்தோதுகிறது

"ஆடவா'' என்னும் பாடல், வீட்டுமுற்றத்தில் குழந்தைகள் பார்த்து மகிழும் காக்கா, குருவி, கோழி, பூனை போன்ற வீட்டுப் பிராணி களுடன் குழந்தைகளுக்கு ஒரு தோழமை உறவை உருவாக்கி, அப்பி ராணிகளைக் குழந்தைகளுடன் ஆடவருமாறு அழைத்து, எல்லா உயிரினங்கள் மீதும் அன்பு செலுத்தும் பக்குவத்தை இளம்பருவக் குழந்தைகளிடம் உருவாக்குகிறது.

சுவையுணர்வையும், வண்ணங்களையும் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்யும் பாங்கில் இரு பாடல்கள் எழுதப்பட்டுள்ளன.

குழந்தைகளின் அன்றாட நாள்பணிகளை அடையாளமிட்டுக் காட்டுகிறது இன்னொரு பாடல்.

முழுக்க முழுக்க ககர வரிசையில் கதை வடிவில் எழுதப்பட்ட பாடல் ஒன்று இறையருட் கவிமணியின் மனதில் ஊற்றெடுக்கும் கற்பனையுணர்வுக்குச் சான்றாய் அமைகிறது.

''காக்கை ஒன்று கடையிலிருந்து கேக் ஒன்றினை அலகில் கவ்வி வந்தது கொக்கு கேக்கை கேட்டது. காக்கை பெருந்தன்மையுடன் கேக்கினைக் கக்க கொக்கு மகிழ்ச்சியுடன் அதனைப் பெற்று எக்களித்து மகிழ்ந்தது'' என்னும் பொருள்பட அமைந்த இக்கதைப் பொதிபாடலை முழுக்க முழுக்க ககர வரிசை சொற்களைக் கொண்டு அமைத்துள்ளார், கவிஞர்

**''காக்கை கேக்கைக் கோக்க**
**கொக்கு கேக்கைக் கேக்க**
**காக்கை கேக்கை கக்க**
**கொக்கு கெக்கெக் கெக்கே''**

எனவரும் இப்பாடல், ஓசை நயத்தில் சிறந்து விளங்குவதோடு மட்டுமின்றி பல புதிய சிந்தனைகளையும் நம்முள் விதைத்துள்ளது.

குழந்தையுலகிற்கு நன்கு அறிமுகமான 'பாட்டி வடை சுட்ட கதையின்' மாற்றுவடிவமாக இதனை நோக்கலாம்.

பாட்டி சுட்ட வடையைக் காகம் தந்திரமாகக் கவ்வி வந்து மரக் கிளையில் அமர, காகத்தைப் பாடச் சொல்லி, தவறி விழுந்த வடையை நரி பறித்துச் சென்ற கதையை பள்ளிக்கூடத்தில் கேட்டு மகிழ்ந்த குழந்தைகள் உள்ளத்தில் 'திருட்டுத்தனமும் தந்திரமும் மிக்க ஓர் உலகம், காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

'காகம் வடையை காலில் எடுத்து வைத்துக் கொண்டு கரைந்து பாடி நரியை ஏமாற்றியது' எனவரும் மாற்று சிந்தனை வடிவத்திலும் 'தந்திரமும் ஏமாற்றமும்' நிறைந்த உலகையே அடையாளம் காண முடிகின்றது

ஆனால் இறையருட் கவிமணியின் இந்தப் பாடலிலோ பரந்த மனப்பான்மையுடன் தான் விரும்பிக் கொண்டுவந்த பொருளைக் கொக்கிற்கு விட்டுக் கொடுத்த காகத்தின் உயர்ந்த பண்பு நலன் பாராட்டப் பெற்றுள்ளது கூர்ந்து நோக்கத்தக்க ஒரு நல்ல உத்தியாய் அமைந்துள்ளது.

வல்லினச் சொற்களின் ஆரவார ஓசையை குழந்தைகளுக்கு உணர்த்தும் நோக்கில்,

**''கெடுபிடி ஊரில் எடுபிடியாட்கள்**
**ஒருபடி அவலை ஒருபிடியாக**
**ஒரு நொடிக்குள்ளே நொறுக்கித் தின்ன''**

எனத் தொடங்கும் பாடல் ஒன்று எழுதப்பட்டுள்ளது.

'மாலை மாற்றெனக்' கூறப்படும், 'சொற்களைத் திருப்பி படித்தாலும் அதே பொருள் தரும் வரிகளை உள்ளடக்கிய பாடல் ஒன்று-

**'வாத மாதவா**
**தேனு மீனுதே**
**மோக ராகமோ**
**மோரு தீருமோ**
**யானை சேனையா**
**வாடி ஆடிவா''**

என்று முயற்சி நோக்கில் எழுதப்பட்டுள்ளது

'ஜாக் அண்ட்ஜில்' என்ற புகழ்ப்பெற்ற ஆங்கில நர்ஸரிப் பாடலை அதே ஓசை நயத்துடன் தமிழ்ப்படுத்தும் முயற்சியில் 'ஜேக்கும் ஜில்லும்' என்னும் தலைப்பில் ஒரு பாடல் எழுதப்பட்டுள்ளது.

தமிழில் விளங்கும் ஓரெழுத்து ஒரு மொழிகளைக் குழந்தை களுக்கு அடையாளம் காட்டும் நோக்கில்

**''நறுமணத்தை வெளிப்படுத்தும்**
**நிலமகளின் புன்னகையே - பூ பூ பூ**

விறுவிறுப்பாய் நாம் மகிழ்ந்து
விளையாடும் சோலைகளே - கா கா கா''

என்று எழுதப்பட்டுள்ள பாடல் ஒன்று குறிப்பிடத்தக்கது.

## இனிக்கும் உறவுகள்

'இனிக்கும் உறவுகள்' என்னும் தொகுப்பில் 'எங்கள் தமிழ்மொழி' என்னும் பாடல் தொடங்கி 'அமுதா வரைவது' என்னும் மடல் வடிவக் கவிதைவரை 20 பாடல்கள் இடம் பெற்றுள்ளன

'இனிமைத் தமிழ்மொழி எமது - எமக்கு
இன்பம் ஊட்டும் நல்லமுது'

எனப் பாவேந்தர் பாரதிதாசன் வரைந்து காட்டியதற்கொப்ப தாய் மொழியாம் தமிழைக் குழந்தைகள் போற்றி நிற்கும் பாங்கினை வினா விடை வடிவில் எடுத்துரைக்கிறது முதற்பாடல்

'பாரில் சிறந்தது எம் மொழி?
சீரில் உயர்ந்த தமிழ்மொழி
பழமை வாய்ந்தது எம் மொழி?
மழலை மொழியும் தமிழ் மொழி'

எனத் தொடரும் இப்பாடல், பழமையும், இனிமையும், தூய்மையும், வளமையும் வாய்க்கப் பெற்ற தமிழ் மொழியோடு கொள்ளும் உறவில் குழந்தைகள் உள்ளம் குதூகலம் அடைவதைக் காட்சிப் படுத்திக் காட்டுகிறது

தமிழில் உள்ள சொற்களின் பொருள் உணர்த்தும் பாங்கில் எழுதப் பட்டுள்ள மற்றொரு பாடல்.

'அலைவதினாலே அலையாகும்
திரள்வதினாலே திரையாகும்'

என்று சொல்லுக்கும் பொருளுக்கும் உரிய காரண காரிய தொடர்பை குழந்தையின் மனம் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் உணர்த்துகிறது.

ஒலிவடிவில் ஒன்றுபோல் தோற்றமளித்து வரி வடிவில் வேறுபட்டு நிற்கும் ரகர றகர, ளகர லகர வேறுபாடுகளைக் குழந்தைகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில்,

‘ஆற்றின் ஓரம் கரையாகும்
ஆடையில் படுவது கறையாகும்
காட்டில் கொல்வது புலியாகும்
வீட்டில் கொள்வது புளியாகும்''

எனவரும் பாடல் வழி எளிதாக தெளிவுபடுத்துகிறார், இறையருட் கவிமணி

தமிழில் தொன்மைக் காலத்தில் இருந்து மண்டிக் கிடக்கும் இலக்கிய வளத்தை,

‘சங்க இலக்கியச் சிறப்புண்டு
சார்பெருங் காப்பியம் ஐந்துண்டு
பொங்கும் புராணம் பல உண்டு
புதுமைக் கவிதை நயமுண்டு’

எனவரும் பாடல் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

குழந்தைகளிடம் தேசப்பற்றை ஊட்டும் வகையில் எழுதப்பட்ட பாடல்கள் அடுத்து அணிவகுக்கின்றன.

“உலகில் உயர்ந்தது எந்நாடு?
கலைகள் வளரும் நம்நாடு!
வளங்கள் மிகுந்தது எந்நாடு?
விளங்கும் சீர்சால் நம்நாடு!''

என்று தேசத்தின் பெருமையுரைக்கிறது, ஒரு பாடல்,

‘விண்ணை முட்டும் மலைகளும்
விரிந்து பரந்த கடல்களும்
மண்ணைக் கிழிக்கும் நதிகளும்
மருவும் எங்கம் தாயகம்’

என்று குழந்தைகள் பெருமையுடன் உரிமை கொண்டாடும் வகையில் இந்திய தேசத்தின் வளங்களை அடுக்கியுரைக்கிறது, மற்றொரு பாடல்

அன்னையின் பெருமையை, தந்தையின் சிறப்பை, தாத்தாவின் அனுபவ வாழ்வை, பாட்டியின் கனிந்த உள்ளத்தை சித்தரித்து காட்டுகின்றன சில பாடல்கள்.

தான் வாழும் ஊரின் பெருமையையும் குழந்தைகளுக்கு வரைந்து காட்டுகிறார், இறையருட் கவிமணி.

**'ஊரின் மேற்கே மலைச்சாரல்;**
**ஓட்டிஓடும் ஓராறு;**
**பாரின் மரமும் செடி கொடியும்**
**பாங்காய் வளரும் பெருந்தோப்பு**
**தென்னை கமுகு வாழை பலா**
**தேமாவுடனே தருக்கள் பல;**
**முன்னே முல்லை மல்லிகையும்**
**மூக்கிற்கினிய விருந்தூட்டும்'**

குழந்தைகளின் அறிவுக்கண் திறக்கும் பள்ளிக் கூடத்தையும், அங்கு ஆண்டுவிழா நடத்தப்படும் அமர்க்களத்தையும் அடுத்து வரும் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

தான் பெற்ற அனுபவத்தைக் குழந்தைகள் தன் உறவினர்களுடன் கடித வடிவில் பகிர்ந்து கொள்வதாய் அமைகிறது 'அமுதா வரைவது' என்னும் பாடல்

இவ்வாறு குழந்தைகள் தம் மொழியோடும், தாய் மண்ணோடும், பெற்றோரோடும், பிற உறவினர்களோடும், பிறந்த ஊரோடும், கல்வி பயிலும் பள்ளிக் கூடத்துடனும் கொண்டிலங்க வேண்டிய நல்லுறவு களின் கோர்வையாய் இப்பாடல்கள் திகழ்கின்றன

## ஊரும் பேரும்

'ஊரும் பேரும்' என்னும் தொகுப்பில் இடம் பெற்றுள்ள 11 பாடல்கள் நவீன அறிவியல் கண்டு பிடிப்புகளால் நாம் பெற்றுள்ள நன்மைகளையும், இந்தியாவில் உள்ள பல்வேறு ஊர்களின் வரலாற்றுச்

சிறப்புகளையும், குழந்தைகளின் மொழியில் எடுத்துரைத்து அவர் களின் விழிகளை வியப்பில் விரிய வைக்கின்றன.

இதில் இடம் பெற்றுள்ள முதல் பாடலில் 'தொலைபேசி'யை குழந்தைகளுக்கு இவ்வாறு அறிமுகம் செய்கிறார், கவிஞர்;

**'கழுத்தைப் பிடித்து நெரித்தாலும்**
**காதில் வைத்துத் தேய்த்தாலும்**
**அழுத்திக் கையில் பிடித்தாலும்**
**அழுகையில்லாத் தொலைபேசி'**

'தொட்டாற் சிணுங்கியாய்' திகழும் பிள்ளைகளிடம் 'நாம் என்ன செய்தாலும் சமர்த்துப்பிள்ளையாய் அமைதி காக்கும் தொலை பேசியை' கவிஞர் குறும்புடன் அறிமுகம் செய்யும் பாங்கு படிப்போரை ரசிக்க வைக்கிறது

**'சிறிய பெரிய பறவைகள்**
**சிறகடித்துப் பறப்பதை**
**அறிந்து ரைட்டு சோதரர்**
**ஆய்ந்து கண்ட ஊர்தியாம்'**

என்று ஆகாய விமானத்தைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்கிறார், கவிஞர்

'செய்யும் தொழிலனைத்தும் உவந்து செய்ய வேண்டும்' என்னும் நன்னோக்கில், 'குலத்தை உயர்த்தும் கதிர்மணிகள் கொடுக்கும் உழவுத் தொழிலையும், பல்வகையான ஆடைகளால் நெஞ்சைப் பிணிக்கும் நிகரில் நெசவுத் தொழிலையும், விண்ணைமுட்டும் மாடம் கட்டும் கொத்தர் தொழிலையும், காட்டுமரத்தில் நாற்காலி செய்து நம்மைக் கவரும் தச்சர் தொழிலையும், ஆபரணங்களால் பாவையர்க்கு அழகு சேர்க்கும் பொற்கொல்லர் தொழிலையும் உயர்த்திப் பிடிக்கிறது 'தொழில் வாழ்க' என்னும் பாட்டு.

மின்சாரம் நம் அன்றாட வாழ்வில் பெறும் இன்றியமையா இடத்தைப் பட்டியலிடுகிறது மற்றொரு பாடல்.

நெல்லை ரெயிலில் ஏறி சென்னை வந்தடையும் வழியில் இடையில் குறுக்கிடும் ஊர்களையும் அந்த ஊர்களை கடந்து வரும்போது பயணிகள் அடையும் அனுபவங்களையும் சுவையுடன் அசைபோடுகிறது ஒரு பாடல்.

இந்தியாவில் உள்ள புண்ணியத்தலங்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டைகள், சுற்றுலா தலங்கள், போன்றவற்றைக் குழந்தைகளுக்கு அறிமுகம் செய்கிறது 'நகர் தரும் நினைவு' என்னும் பாடல்.

சென்னை மாநகரத்தின் ஆரவார வாழ்க்கையை சித்திரமாய்ப் படம் பிடித்துக் காட்டுகிறது ஒரு பாட்டு;

'அட்டைப் பெட்டிக் கட்டெனு
அமைந்த மாடி வீடுகள்;
தட்டி விட்டு ஏறவே
தக்க லிஃப்டு கூடுகள்

பொருட்கள் வாங்க நெருக்கடி
போகும் வழியில் நெருக்கடி
இருக்கும் இடத்தில் நெருக்கடி
எங்கும் கூவக் கொசுக்கடி'

மனித வாழ்வின் நோக்கினை
மறந்து வழும் மக்களோ
மனித உணர்வு இன்றியே
பொறிகள் போல இயங்குவர்'

என்று இறையருட் கவிமணி சென்னை வாழ்க்கையை காட்சிப்படுத்திக் காட்டுகிறார்.

இந்திய மாநிலத் தலைநகர்களின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கிறது 'தலைநகர் செல்வோமா?' என்னும் பாடல்.

'நற்றமிழ் நாட்டின் நலன்களைக் கண்டுணர சுற்றுலா சென்று வருக' எனக் குழந்தைகளுக்கு அறிவுரை கூறுகிறது 'சுற்றுலா' என்னும் பாட்டு.

## இயற்கை இன்பம்

இயற்கையழகை எடுத்துரைக்கும் பாங்கில் எழுதப்பட்ட 19 பாடல்கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

நம்மைச் சுற்றி வாழும் உயிரினங்களையும், சூழ்ந்த நிற்கும் தாவரங்களையும், நமக்கும் அவைகளுக்கும் இடையே உள்ள சமூகத் தொடர்புகளையும் குழந்தைகளுக்கு உணர்த்தும் நோக்கில் எழுதப்பட்ட பல பாடல்களின் தொகுப்பாய் இப்பகுதி அமைந்துள்ளது

"மானைப் போல ஓட வேண்டும்
மயிலைப் போல ஆட வேண்டும்
குயிலைப் போல பாட வேண்டும்
கிளியைப் போல பேச வேண்டும்
புறாவைப் போல அன்பு வேண்டும்
மீனைப் போல துள்ள வேண்டும்
மேலும் உனக்கு என்ன வேண்டும்?"

என்னும் பாடலின் வழி நம்மைச் சுற்றி வாழும் உயிரினங்கள் வழி நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடங்களை அடையாளம் காட்டுகிறது, இத்தொகுப்பின் தொடக்கமாய் திகழும் முதல்பாடல்.

வீட்டுத் தோட்டத்தில் முல்லைச் செடியை நட்டு வைத்தால் என்ன நடக்கும் என்பதைக் காட்சிப்படுத்திக் காட்டுகிறது, மற்றொரு பாடல்.

"இல்லத்தின் முற்றத்தைச் செப்பனிட்டேன்
இனிதாக நானொரு முல்லை நட்டேன்
நாள்தோறும் குடத்தினில் நீரெடுத்து
நன்றாக நிலத்தினை நனைத்து வந்தேன்
பச்சை பிடித்து வளர்ந்து வர
இச்சையில் நானுமே நோக்கி வந்தேன்
மொட்டொரு காலையில் முகிழ்ந்துவர
மட்டில்லா மகிழ்ச்சியில் துள்ளிவிட்டேன்.

என்று ஒரு குழந்தையின் மனநிலையில் நின்று முல்லைச் செடிமீது அன்பைப் படர விடுகிறது, இறையருட் கவிமணியின் பாடல்,

"பார் பார் ஆலமரம்!
படர்ந்து விரிந்திருக்கும்!
பருத்து வளர்ந்திருக்கும்!
பழுத்துப் பயன்கொடுக்கும்!

என்று சிறுவர் சிறுமிகளிடம் ஆலமரத்தின் பிரமாண்டமான தோற்றத்தைக் காட்டி அவர்களின் மனதை மயக்கும் இறையருட் கவி மணி,

"சிறுமீன் சினையை விட
சிறிதாம் விதைக்குள்ளே
உறுமொரு பெருமரமே
உரையும் அற்புதம் பார்!"

என்னும் முத்தாய்ப்பு வரிகளால் பாடலை முடிக்கும் போது குழந்தைகளைப் போலவே நமக்குள்ளும் வியப்புப் பொங்கி எழுகிறது

"மரங்களில் நான் ஒரு ஏழை!
என் பெயர் வாழை"

என்று வாழை மரத்தின் கதையை அதன் வடிவில் நின்று சுவைபடச் சொல்லிக்காட்டுவார், கவிஞர் மு மேத்தா.

"வாழை நல்ல வாழை!
வழவழப்பாம் வாழை!
கூழை மாந்தும் ஏழை!
குடி உயர்த்தும் வாழை!

என்று ஏழைகளின் தோழனாய் வாழையை அறிமுகம் செய்யும் கவிஞர்,

"நாரும் பூவும் இலையும்
நல்ல கனியும் காயும்
தாரும் தண்டும் ஈந்து
தழைக்க வைக்கும் வாழை"

என்பதன் வழி நாமும் பிறப்பு முதல் இறப்புவரை எல்லா நிலையிலும் சமுதாயத்திற்கும் பயன்பாடு உடையவராய் வாழ வேண்டும் என்று நாசுக்காக உணர்த்துகிறார்

**''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்''**

என்னும் குறள் மொழியை நினைவுபடுத்தும் வகையில்,

**''கற்றறியாச் சிறுவனவன்**
**கல்லெடுத்தே உனையடித்தும்**
**பற்றுடனே அவன் மகிழப்**
**பைங்கனியை நல்கிடுவாய்''**

என்று மாமரத்தின் பெருமையைப் போற்றுகிறார்.

நன்றியறிதலின் வெளிப்பாடாய் தென்னை தலை நிமிர்ந்து நிற்பதை,

**''தலையாலே தருகின்றாய்**
**தாளடியில் நீரருந்தி**
**நிலையான நன்றிக்கு**
**நீ நல்ல சான்றாய்''**

என்றுரைக்கிறது, ஒரு பாடல்,

''முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்'' என்னும் பழமொழிக்குச் சான்றாய் கடலை அடையாளம் காட்டி,

**''மூச்சொடுக்கி மூழ்கிவரும்**
**முயற்சிக்குப் பரிசாய்**
**தீச்சுடர்போல் பவழமுத்துத்**
**தேர்ந்தெடுத்துக் கொடுப்பாய்''**

என்று அதன் வள்ளன்மையை போற்றுகிறது ஒரு பாடல்,

சுவைமிகு தேனை வழங்கிடும் தேனீயின் அருந்திறன் புகழ்ந்து,

"இன்சுவைமிக்க உணவாக
ஈடிணையில்லா மருந்தாக
உன்சுவைத் தேனின் உயர்வாக
ஒன்றை ஞாலம் பெற்றுளதோ?"

என்று வியந்து நிற்கிறது மற்றொரு பாடல்.

"பூவானம் பொலிவது போல்
பூவெள்ளிச் சிதறல் போல்
நீ வான வெளியதனில் நீந்தி வலம் வருகின்றாய்"

என்று மின்மினிகளைப் பார்த்து கண்சிமிட்டுகிறது, ஒரு பாடல்.

குற்றாலத்துக் குரங்குகள் செய்யும் அட்டகாசத்தை எள்ளல் சுவையோடு எடுத்துரைக்கிறது ஒரு பாடல் பூங்காவின் அழகைக் கண்டு மனம் குளிர்கிறது மற்றொரு பாடல்

இப்படி இயற்கை தரும் இன்பத்தில் திளைத்து அதை கவிதை வடிவில் காட்சிப்படுத்தி குழந்தைகளின் சிந்தனைக்குப் பெருவிருந்தாய் ஊட்டி மகிழ்கிறார், கவிஞர்

## நாடு போற்றும் நல்லோர்

இத்தொகுப்பில் செத்தும் கொடை கொடுத்த வள்ளல் சீதக்காதி, தக்கலை மெய்ஞ்ஞானி பீரப்பா, தேசிய விடுதலைக்கு எழுச்சியூட்டிய எழுபெரும் தலைவர்கள், இந்தியப் பெருங்கவிகளின் புலமைத் திறன், தென்னாப்பிரிக்க சிறையில் அடைபட்டுக் கிடந்தபோது அண்ணல் காந்தியடிகள் வாழ்ந்த பெருமித வாழ்வு, நேருவின் இனிய வாழ்வு, அறிஞர் அண்ணாவின் ஆற்றல்மிகு பணிகள்-இவற்றைத் தனித்தனிப் பாடல்கள் வழி எடுத்துரைத்து இளைய தலைமுறைக்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய அழகிய நடைமுறைகளை அடையாளம் காட்டுகிறார், இறையருட் கவிமணி.

## அறிவுரைக் கொத்து

இப்பகுதியில், தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து திருக்குர் ஆனின் மொழிகள் 'அருள் நெறிப் பத்து' என்னும் பெயரிலும், பைபிள் அறிவுரைகள் 'கருணைப் பத்து' என்னும் பெயரிலும், வள்ளுவ நல்லுரைகள் 'பொய்யாப் பத்து' என்னும் பெயரிலும், அண்ணல் காந்தியின் அறிவுரைகள் 'காந்தி பத்து' என்னும் பெயரிலும், விவே கானந்தரின் சிந்தனைகள் 'விவேகப் பத்து' என்னும் பெயரிலும் பாடல் வடிவில் திரட்டப்பட்டுள்ளது

எத்துணையும் பேதமுறாது சமரச சன்மார்க்கப் பார்வை யுடையவராய் இறையருட் கவிமணி திகழ்கிறார் என்பதை மெய்ப்பிக்கும் அடையாளமாய்த் திகழ்கிறது -அறிவுரைக் கொத்து' என்னும் பாடல் தொகுப்பு.

## கதை கதையாம்....

இறையருட் கவிமணியால் பாடப்பட்ட கதைப் பொதிப் பாடல் கள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன 28 கதைப் பொதி பாடல் களைப் பாடி பழம் நழுவி பாலில் விழுந்ததைப்போல்' நல்ல கருத்துடைய கதைப் பழங்களைப் பாட்டுப்பாலில் ஊற வைத்து குழந்தைகள் விரும்பும் வண்ணம் ஊட்டி மகிழ்கிறார், இறையருட் கவிமணி.

தேனைச் சாப்பிட்ட சிறுவன் மீதியை சுவரில் தடவ அதனை ஈயொன்று மொய்க்க, பதுங்கியிருந்த பல்லி அதன் மீது பாய, அருகில் இருந்த கோழி பல்லியைக் கொத்தித் தின்ன, கோழியைப் பூனை துரத்த, பூனையை நாயொன்றுகவ்வ, நாயை அடித்து விரட்டிய வீட்டாருடன் நாய்க்கு உரிமையாளராய் உள்ள வீட்டார் சண்டை போட சிறு நிகழ்வு பெருங்கலவரமாய் உருவெடுத்து ஊரில் சண்டை ஏற்படுவதை நகைச்சுவையாகக் கூறுகிறது, 'தேனாம்பட்டி' என்னும் கதைப்பாடல் மெத்த படித்த ஐவர் சமையல் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு, ஒவ்வொருவரின் பொருந்தாச் செய்கையால் சமையல் பாழ் பட்டு போனதைக் கிண்டல் செய்கிறது ''அறப்படித்த ஐவர்' என்னும் கதைப்பாடல்

''மருந்து சாப்பிடும்போது குரங்கை நினைக்காதே'' என்று கூறிய போலி மருத்துவரின் கதையை எடுத்துரைக்கிறது, ஒரு பாடல்.

"உருவைக் கண்டு இகழக் கூடாது" என்று அறிவுரை பகர்கிறது, ஒரு கதைப் பாடல்

தப்பு செய்த மைத்துனன் தப்பிக்க தந்திர உபாயம் செய்த தெனாலி ராமனின் கதையை 'பிச்சிப்பூ மச்சினன்' என்னும் கதைப்பாடல் எடுத்துரைக்கிறது.

மனநோயால் பீடிக்கப்பட்ட இளவரசன் ஒருவனை அவிசென்னா என்னும் மருத்துவர் உளவியல் உத்தியைக் கொண்டு இயல்பு நிலைக்கு மீட்டுத்தந்ததை 'அவிசென்னா மருந்து' என்னும் கதைப் பாடல் வெளிப்படுத்துகிறது

இவ்வாறு கதைப்பொதி பாடல்களின் வழி அரும்புகளின் மனம் கவர்ந்து தான் கூற விரும்பிய கருத்துக்களை அவர்களின் இதயத்தில் பக்குவமாகப் பதிய வைப்பதில் வெற்றி பெற்றுள்ளது இறையருட் கவிமணியின் பாடல்கள்.

## புதிரோ புதிர்

'புதிரோ புதிர்' என்னும் இப்பகுதி குழந்தைகளின் அறிவைச் சாணைப் பிடிப்பதற்கான ஒரு முயற்சி' என்று இறையருட் கவிமணி குறிப்பிடுகிறார்.

இவற்றுள் பெரும்பகுதி விடுகதை பாணியில் அமைக்கப் பட்டுள்ளன. சான்றுக்கு ஒன்று

**"தன்னேரில்லாக் கனியீந்து**
**தமிழ் மூதாட்டியை நினைவூட்டும்**
**முன்னே கைத்துபின் இனிக்கும்**
**முதுகாய் அளிக்கும் மரம் எதுவோ?"**

என வினா எழுப்பும் பாடல், அதற்குரிய விடையாக, "நெல்லிக்கனியை" பாடல் முடிவில் குறிப்பிடுகிறது.

இதேபோல் அமையும் மற்றொரு பாடல்,

**"நற்புகழ் வாய்ந்த நகராகும்;**
**நடுவைக் குறைத்தால் மானாகும்**
**பொற்பெயர் குறித்த மீனவரின்**
**புகழைக் கூறும் பதி யாதோ?"**

என வினா தொடுத்து அதற்கு ''மதுரை'' என்னும் பதிலையும் தருகிறது

இவ்வாறு குழந்தைகளுக்குப் புதிர் போட்டு அதற்கு பதில் தரும் வகையில் பாட்டெழுதியுள்ள இறையருட் கவிமணியின் குழந்தை யுள்ளத்தைக் கண்டு மகிழும் முனைவர் சிற்பி பாலசுப்ரமணியன்

''ஒளிந்து விளையாடுவது குழந்தைகளின் இன்பப் பொழுது போக்கு. இந்தக் கண்ணா மூச்சி விளையாட்டில், கண்டுபிடிக்கச் சொல்லிக் குழந்தைகளோடு குழந்தையாகத் தானும் விளையாடுகிறார், நூலாசிரியர்,'' என்று கவிஞரின் குழந்தையுள்ளத்தை அடையாளம் காட்டுகிறார்.

காலத்தால் பிந்தி தோன்றினும் குழந்தை இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பதித்து நிற்கிறது இறையருட் கவிமணியின் பாடல்கள் என்பதற்கு ''அரும்பூ'' நூல் ஓர் அழகிய அத்தாட்சியாய்த் திகழ்கிறது.

இந்நூலில் ஆய்வு மேற்கொண்டு சென்னை பல்கலைக்கழகத்தில் எம்.ஃபில் பட்டம் பெற்றுள்ள ஆய்வாளர் இராம. இராஜா,

''திரைப்படம், தொலைக் காட்சி போன்ற நச்சுக் காற்றைக் சுவாசித்து, மின்னணுச் சூழலில் பல தடுமாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் இளைய தலைமுறையை நெறிப்படுத்தவும், மொழி மேம்பாட்டிற்கும் இத்தகைய குழந்தை இலக்கிய உருவாக்கங்கள் இன்றியமையாத் தேவையாக அமைந்துள்ளன''

என்று குறிப்பிடுகிறார்.

''அப்துல் கபூர் அவர்களின் பாடல்கள், அனைவரிடத்தும் அன்பாய் பழகுதல், உழைப்பு, அருளும், அடக்கமும், ஒற்றுமை, உண்மை, சகல உயிர்களையும் நேசிக்கும் பண்பு முதலிய பல நற் பண்புகளையையும் நற்பழக்கங்களையும் குழந்தைகள் உள்ளத்தில் இயல்பாக எழும்படி செய்யக் கூடிய கூறுகளைக் கொண்டுள்ளன. அவை மனித நேயத்தை வளர்க்கத் தூண்டுகின்றன. வளமாக வாழ்வதற்கான வழிகளைக் கற்பிக்கின்றன. தாம் காணும் சமுதாயத்தில் உள்ள நிகழ்வுகளை உணர்ச்சியோடு எடுத்துச்செல்கின்றன. குழந்தைகள் படித்துப் புரிந்து சுவைத்து மகிழத் தக்க விதத்தில் எளிமை யாகவும், இனிமையாகவும் நயங்களோடும் அமைந்துள்ளன'' என்கிறார், வல்லிக்கண்ணன்.

"மலரும் அரும்புகளுக்கு கிடைத்த மணி ஊஞ்சல்களாகவும், உயிருள்ள விளையாட்டு பொம்மைகளாகவும், பள்ளித் தோழர்களாகவும், பக்குவப் பலகாரங்களாகவும், புத்தகங்களில் மறைத்து வைக்கும் நீல மயிற் பீலிகளாகவும் கண்ணிமை ஓரம் பதுங்கிய கனவுகளாகவும், காலம் முற்றிலும் நீங்காத நினைவுகளாகவும்", "அரும்பு" பாடல்களை அடையாளம் காட்டி மகிழ்கிறார் தம் ஆசிரியருக்காக நூலைத் தொகுத்துத் தந்த முனைவர் சிற்பி பாலசுப்ரமணியும்.

# 4
# கவிதை வளம்

"கவிதை மனிதன் உணர்ச்சியில் பிறந்த உண்மை. உள்ளப் பாற் கடலில் பிறந்த அமுதக் கலசம். மனித உள்ளம் யதார்த்த உலகத்துடன் ஒன்றுபட்டோ, பிரிந்தோ கண்ட கனவு, அது உள்ளநெகிழ்ச்சியிலே உணர்ச்சி வசப்பட்டு வேகத்துடன் வெளிப்படுகிறது."

"கவிதை ஒரு அனுபவம். அதாவது அனுபவத்தை உணர்த்தும் சித்திரம். உண்மைக் கவிதைக்கு உரைகல் செவி. கவிதையின் உயர்வைக் காதில் போட்டுப் பார்க்க வேண்டும். கவிஞன் தனது உள்ளத்து எழுந்த ஒரு அனுபவத்தை சப்த நயங்களினால்தான் உணர்த்த முடியும்"

'கவிஞனுக்கு அவன் உள்ள அனுபவத்தை எடுத்துக்காட்டக் கூடிய நடை வேண்டும். கவிதை கேட்கப்படுவது உணர்ச்சி உத்வேகத்திற்குத் தகுந்ததுபோல் நடையின் நயமும் வேண்டும்."

"கவிதை" குறித்து சில கட்டுரைகள் வழி எழுத்தாளர் புதுமைப் பித்தன் மொழிந்துள்ள கருத்துக்கள் இவை

ஓசை இன்பத்தின் உன்னத வடிவம் கவிதை எனவே தான் 'பாட்டுத்திறத்தால் இவ்வுலகைப்பாலித்திட" காளியின் அருள் வேண்டி நின்றான், மகாகவி பாரதி.

கவிதையின் சந்தம் கேட்பவர்க்குப் பெருவிருந்தாய் அமைந்த காரணத்தால் "செவிநுகர் கனி" என்றிதனை அடையாளம் காட்டினான், விருத்த சாம்ராஜ்ஜியத்தின் முடிசூடா மன்னன், கம்பன்

'அறிவுப்பசி தீர்க்கும் ஆற்றல் மிகு கவிதையை "செவிக்குணவு" என்றுரைத்தான், வள்ளுவன்.

பாடுவதற்கும், கேட்டின்புறுவதற்கும் ஏற்ற சந்த அமைப்புடைய பாடல்களை மாலை வடிவில் கோர்த்துத்தந்துள்ளார், இறையருட் கவிமணி பேராசிரியர் கா. அப்துல் கபூர்.

இறையருள் மாலை, திருமறை மாலை, பொன்மொழிமாலை, காஜாமாலை, கௌதுல் அஃலம் முஹ்யித்தீன் மாலை என ஏராளமான மாலை இலக்கியங்களை உருவாக்கி இருபதாம் நூற்றாண்டின் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்கு மிகப் பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளார், இறையருட் கவிமணி.

இவரது மாலை இலக்கியப் பாடல்களில் பெரும்பகுதி நாகூர் ஈ.எம் ஹனிபாவால் வெண்கலப் குரலில் பாடப்பட்டு இசைதட்டு வடிவில் ஒலித்து இலட்சக்கணக்காக இஸ்லாமியர்களின் செவிநுகர் கனிகளாய் இன்றும் சுவைத்து மகிழப்படுகின்றன.

''எளிய ஓடை ஒன்று மெல்ல மெல்ல உச்சரித்துக் கொண்டே நகர்வது போன்ற நடை நம் பேராசிரியரின் தமிழ்க் கவிதை நடை'' என்று இறையருட் கவிமணியின் கவிதையின் போக்கைக் காட்சிப்படுத்திக் காட்டுகிறார் கவிஞர் முனைவர் ஈரோடு தமிழன்பன்.

இறையருட் கவிமணியின் உள்ளத்தில் புதைந்துகிடந்த வீரிய புலமை கிளர்ந்தெழக் காரணமாய் அமைந்தவை, அவர் படித்து நுகர்ந்த மாலை இலக்கியங்கள், அவை தந்த அனுபவத்தை அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

''இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் மாலைகளுக்குத் தனி மரியாதை உள்ளது. சீறா வழங்கிய செம்மல் உமறுப்புலவர் தந்துள்ள முதுமொழிமாலை முதலாக சதாவதானி சேகுதமபி பாவலரின் கல் வத்து நாயக இன்னிசையைப் பாமாலை ஈறாக பல்வேறு வடிவங்க ளில் பல மாலைகள் வெளிவந்துள்ளன. இராச மணிமாலை, பொன் னிரியமாலை, அகந்தெளியுமாலை, ஒசியத்து மாலை, போன்ற நூற் றுக்கணக்கான மாலைகள் உள்ளன.

ஈரடிக் கண்ணிகளால் ஆக்கப்படும் மாலைகள் எளிதில் இதயத்தைக் கவர்வன அவை அரபுமொழி பாசுரங்கள் போலவும்பாடி மகிழத்தக்கன அதபுமாலை, ரசூல் மாலை, ஹதீது மாணிக்க மாலை போன்ற பல மாலைகளை காயல் மாமேதை ஸாம் ஸகாபுதீன் வலியுல்லாஹ் பாடியுள்ளார்கள்

**'' கண்ணின்றிக் காண்பவனைக் காதின்றிக் கேட்பவனை**
**எண்ணில் அடங்கானை எப்போதும் யான் புகழ்வேன்''**

என்னும் பாடலின் எளிமையும் பொருளும் நெஞ்சை அள்ளுவன.

பாவையர் இதழ்களை எளிதில் பற்றிப்பிடிக்கும் பழமையான இரமலான் மாலை இதயங்களைக் கவர்வது.''

என்று மாலை இலக்கியத்தின் பெருமையை எடுத்துரைக்கும் பேராசிரியர் உரிய காலம் கனிந்தபோது தன்னுடைய பங்களிப்பாக ஏராளமாக மாலை இலக்கியங்களை வடிவமைத்தில் வியப்பேதும் இல்லை.

மலையாள மொழியில் சிறப்பான இடம் பெற்றுள்ள மாப்பிள்ளை பாட்டுக்களிலும் மாலை இலக்கியங்களுக்குப் பஞ்சம் கிடையாது அவற்றுள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுத் திகழும் முஹ்யித்தீன் மாலையும், பத்ருமாலையும் தன் இதயங்கவர்ந்த மாலை இலக்கியங்களாய் அடையாளம் காட்டுகிறார், பேராசிரியர்

சின்னஞ்சிறு வயதில் இருந்தே தன் சிந்தையைக் கொள்ளைக் கொண்ட மாலை இலக்கியங்கள் எப்படி தன்னைப் பாட்டாளியாக்கியது என்பதை அனுபவபூர்வமாய் எடுத்துரைக்கிறார், பேராசிரியர்

''அரை நூற்றாண்டிற்கு முன்னால் ரபிவுல்லவ்வல் 12 இல் (நபிகள் நாயகம் பிறந்த தினத்தில்) எங்கள் இல்லத்தில் மிகச் சிறப்பாக நடை பெற்ற மௌலூது மஜ்லிசில்(நாயகப் புகழ்ச்சிப் பாக்கள் பாடும் சபை) பங்கு கொள்வதற்கு வட்டாரப் பாட்டாசான்கள் எல்லாம் திரண்டு வருவர். அவ்வமயம் அரபுப் பாசுரங்களுடன் தமிழிலும் பதம் பாடிப் பார்ப்பார்கள். இச்சூழலில் வளர்ந்த என் வாயும் முணுமுணுக்க தொடங்கியது. நான் எழுதிய பாடல்கள் என் பதினெட்டாம் வயதிலேயே அச்சேறத் தொடங்கின ''

எனத் தான் ''பாட்டாளி'' யான கதையை விவரிக்கிறார், இறையருட் கவிமணி.

இவரால் இயற்றப்பட்ட முதல் கவிதை நூல் ''நாயகமே!'' என்னும் சந்தப்பாமாலை இந்நூல் பெற்ற வெற்றியை இறையருட் கவிமணி இவ்வாறு குறிப்பிடுகிறார்,

''முறையாக நான் இயற்றிய 'நாயகமே' என்னும் பாடல் 1954இல் இலங்கையில் உள்ள திருக்குர்ஆன் இயக்கத்தினரால் வெளியிடப் பட்டது. சிறார் முதல் முதியோர் வரையில்- மாதர்கள் முதல் அறிஞர்கள் வரையில் அனைவரது இதயங்களையும் அப்பாடல்கள் எளிதில் பற்றிப் பிடித்தன

பத்தாண்டுகள் அதன் பதிப்புகள் பல வெளிவந்தன.

அல்லாமா அப்துல் வஹ்ஹாப் விளக்கத்துடன் கலைமாமணி இசை முரசு நாகூர் ஹனிபா 'அருளாளன் அன்புடையோன்' எனத் தொடங்கிப் பாடி முதலில் வெளியான இசைத்தட்டு இசையைப் பெருக்கியது.''

இசைத்தட்டு வடிவில் நாகூர் ஹனிபா குரல் ஒலிப்பில் வெளியான இவரது பாடல்கள் யாவும் கற்றிந்த மக்களை மட்டுமின்றி பாமரர் உள்ளங்களையும் கொள்ளையிடும் ஆற்றலைப் பெற்றிலங்கின.

இறையருட் கவிமணியின் இசைப்பாடல்கள் தன்னைக் கவர்ந்த அனுபவத்தைப் பின்வருமாறு பதிவு செய்கிறார், தோப்பில் முஹம்மது மீரான்:

''இறையருட் கவிமணியின் மும்மணிமாலை தான் அவருடைய படைப்புகளில் நான் வாசித்த முதல் கவிதை நூல். முதல் வாசிப்பில் பாத்திமா நாயகி(நபிகளின் மகளார்) மீது தனக்கிருந்த பக்தி மயக்கத்தால் இயற்றப்பட்ட மேலோட்டமான ஒரு பக்திப் பாடலாக அதை எண்ணினேன். அது ஏனோ என்னை ரொம்பவும் ஈர்க்கவில்லை. இசைத்தட்டு மூலம் சிலப்பகுதிகள் திரும்ப திரும்ப ஒலிக்கக் கேட்டபோது ஒரு மறுவாசிப்புக்காக நூலை எடுத்தேன். பலமுறை வாசித்தேன். கையாளப்பட்ட சொல்நயம், தாளலயம், இலக்கியச்செறிவு என்னை வெகுவாகக் கவர்ந்தது. அதன் ஈர்ப்பு என்னை அக்கவிதை நூலை மொழி பெயர்க்கத் தூண்டியது. மலையாளத்தில் மொழிபெயர்த்தேன்''

இவ்வாறு இசைவடிவில் கேட்போர் இதயங்களை ஈர்க்கும் ஆற்றலை இறையருட் கவிமணியின் இசைப்பாடல்கள் பெற்றுத் திகழ்ந்தன.

## வானொலி கவியரங்கம்

கல்லூரி அரங்குகளில் தமிழ்க் கவியரங்கைத் தொடங்கி வைத்த இறையருட் கவிமணி, பின்னர் வானொலிக் கவியரங்குகளிலும் பங்கேற்று தன் வித்தகப் புலமையை வெளிப்படுத்தினார்.

வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரியில் பணியாற்றிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் திருச்சிவானொலியில் ஆர்.கே. சண

முகம் செட்டியார் தலைமையில் நடந்த பொங்கல் கவியரங்கில் பங்கேற்று 'பொங்கல்' என்னும் சொல்லுக்கு அவர் அளித்த விளக்கம் ஈண்டு படித்து இன்புறுத்தக்கது:

"இறையுணர்வாம் நுகத்தடியில் அறிவெருதைப் பூட்டி
முறைதெரிந்த உழவர்களாய்
முயன்று முது காட்டி
ஒழுக்கமெனும் உயர் விதையை
ஊக்கமுடன் ஊன்றி
அழுக்காறு முதலிய
தீக்களைகள் நீக்கி
பல்வகையாம் கலையுணர்வை
பண்புரமாய்ப்போட்டு
பல்லாசை பகை விலங்கு
நண்ணாமல் காத்து
துன்பநிலை அடித்தோட்டும்
தீம்பொங்கல் வந்தால்
பசிவீழும் பிணி வீழும்
பஞ்சமெலாம் வீழும்
நசியாமல் உயிர் வாழும்
நாடெல்லாம் வாழும்
குளம் பொங்கும் நிலம் பொங்கும்
குலம் பொங்கும் நல்ல
வளம்பொங்கும் மனம் பொங்கும்
வாழ்வெல்லாம் பொங்கும்"

பொங்கல் திருநாளன்று மக்கள் உள்ளத்தில் பொங்கி எழும் மகிழ்ச்சியை இப்படிச் சித்திரமாகக் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளது, இறையருட் கவிமணியின் கவிதை.

## கவியரங்கக் கவிதைகள்

இறையருட் கவிமணி தலைமையேற்று நடத்திய கவியரங்கங்களில் அவர் பாடிய தலைமைப் பாடல்களின் தொகுப்பு "தலைப்பா" என்னும் தலைப்பில் நூல் வடிவம் பெற்றுள்ளது.

அவற்றில் சிந்தனைக்கு விருந்தாய் அமையும் நயமான சில **கவிதை** வரிகள் ஈண்டு இடம் பெறுகின்றன.

1958 இல் சென்னைப் புதுக்கல்லூரியில் நடைபெற்ற கவியரங்கில் 'நபிகள் நாயகத்தின் நற்குணங்களை' பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்டுகிறது. அவரது தலைமைக் கவிதை:

**"மண்ணகமும் விண்ணகமும்**
**மகிழ்ந்தேத்தும் பெருநிதியை**
**அண்ணலென அனைத்துலகும்**
**அணைத்தெடுக்கும் ஆரமுதை**
**பெண்ணுரிமை தன்னுரிமை பேச்சுரிமை மூச்சுரிமை**
**மண்ணுரிமை யனைத்தினையும் மதித்திட்ட நல்லவரை**
**வேரழிந்த ஏழைகளும் விதவைகளும் அனாதைகளும்**
**சீரழிந்த துயர்போக்கி சிறப்பளித்த சீரியரை**
**பாலும் தெளிதேனும் பாகும் பழச் சுவையும்**
**நாலும் தோற்றுவிடும் நற்றமிழில் பாடிடுவோம்"**

மற்றொரு கவியரங்கில் நபிகள் நாயகத்தின் நல்லுரைப் பெருமையைக் குறிப்பிடும்போது,

**"பொற்கொல்லர் உரைகல்லால்**
**பொன்மதிப்பை உணர்தல் போல்**
**நற்கோமான் உரை முன்னால்**
**நம் வாழ்வை ஒப்பிட்டால்**
**நம்முளத்தின் இழிநிலையை**
**நாமுடனே அறிந்திடலாம்"**

என்று குறிப்பிடுகிறார்

இறைவனால் அருளப்பட்ட திருமறையின் பண்புகளை எடுத்துரைக்கிறது பின்வரும் கவியரங்கப்பாடல் ஒன்று

**"ஆய்ந்திருக்கும் அறிஞருக்கோ**
**அரும்புதையல் வாய்த்திருக்கும்!**
**தோய்ந்திருக்கும் அன்பருக்குத்**

தோண்டுமன்பு ஊற்றிருக்கும்!
தேய்ந்திருக்கும் எளியவரைத்
தேற்றிவிடும்திறம் இருக்கும்!
சாய்ந்திருக்கும் முதியவர்க்குச் சரணளிக்கும் சால்பிருக்கும்!!"

இறைவனின் பெருமையை வார்த்தைகளால் அளந்துரைக்க முடியாது என நினைக்கும் கவிஞர் அதைப் பொருத்தமான உவமை ஒன்றைக் கையாண்டு பின்வருமாறு புலப்படுத்துகிறார்.

"மரமனைத்தும் கோலாக்கி
மாகடலை மையாக்கி
உறுபுகழை வரைந்தாலும்
உரைப்பதற்கே இயலாத
இறைவனின் இயல்புகளை
இனிதுரைக்கும் ஆரணம்."

என்று திருமறையின் சிறப்பை மீண்டும் உணர்த்துகிறார். சென்னைப் புதுக்கல்லூரியைப் பற்றிக் குறிப்பிடும்போது-

"கலையாட்சி செய்கின்ற
கவினாறும் சென்னையிலே
உடலின் கண் விழியைப் போல்
உடையிடையே பாகைப்போல்
கடலின் கண் முத்தைப் போல்
கவின் பொய்கைத் தாமரைப்போல்
நகர் நடுவண் தலைநிமிர்ந்து
நல்லறிவு மாமலையாய்
திகழ்கின்ற கல்லூரி..."

என்று பெருமிதத்துடன் புகழ்மாலை சூட்டிமகிழ்கிறது இவரது மற்றொரு கவியரங்கக் கவிதை

மனிதனின் இன்றைய சூழ்நிலையை எண்ணிப்பார்த்து மனம் வெதும்பும் இறையருட் கவிமணி உலைக்களமாகப்பொங்கும் தன் உள்ளத்து உணர்வை கவியரங்கப்பாடல் ஒன்றில் இவ்வாறு வெளிப்படுத்திக் காட்டுகிறார்:

"விண்ணிற் பறக்கத் தெரிந்த மனிதன்
மண்ணிற் நடக்க தெரிந்தானில்லை
........
ஊசியின் தலையில் ஓட்டையைப் பாரென
சல்லடை இகழ்வதே இன்றைய நிலமை"

கவிதையின் இலக்கணம் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஏற்கனவே கோடிட்டுக் காட்டியுள்ளார்.

"உள்ளத்தில் உள்ளது கவிதை – இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்– உண்மை
தெரிந்துரைப்பது கவிதை"

என்பது கவிமணி வரைந்து காட்டும் கவிதையின் கோட்பாடு.

இறையருட் கவிமணி தனது பார்வையில் கவிதை குறித்தும், கவிஞன் குறித்தும் பின்வருமாறு விளக்கம் தருகிறார்:

கடையிலே தாள் வாங்கி
காகிதப்பூ செய்துமங்கை
சடையிலே சூட்டுகின்ற
சரக்கல்ல கவிதை மலர்
உள்ளத்தின் அடித்தட்டில்
உந்தியெழும் உண்மைகளை
பள்ளத்தில் வெள்ளம்போல்
பாய்ந்துவரும் உணர்வுகளை
துள்ளியெழுந்து வரும்
தூய்தான இன்சொல்லில்
அள்ளித் தருபவனே
அருங்கலையார் பெருங்கவிஞன்"

என்று கவிதைக்கும் கவிஞனுக்கும் தரும் விளக்கம் வளரும் கவிஞர்கள் தன் மனதில் வரைந்து வைக்க வேண்டிய பாடமாகும்.

பேராசிரியர் ஒரு சிறந்த கவிஞராய்த் திகழ்வதற்கு வித்திட்டவர், அவரது தந்தை வழி பாட்டனாரின் சகோதரர் ஷாஹுல் ஹமீதுகாதிர் என்று ஒரு குறிப்பு கிடைக்கிறது.

'காதிரிய்யா' என்னும் ஒரு ஞான வழித் தடத்தின் தலைமைப் பொறுப்பில் (கலீபா) இருந்த அந்தப் பெரியவர், தான் சார்ந்திருக்கும் பகுதியிலுள்ள இறைநேசச் செல்வர்களைப்பற்றி ஏராளமான கவிதைகள் பாடியுள்ளார்

பேராசிரியர் மீது அவர் தனிப்பிரியம் வைத்திருந்தார். அவர் கவிதை இயற்றுவதைக் காணும் வாய்ப்பினைப் பெற்ற பேராசிரியரும் தானும் கவிதை இயற்ற ஆர்வம் கொண்டார்.

## இறையருட் கவிமணியின் மாலை இலக்கியங்கள்

முன்னரே குறிப்பிட்டுள்ளதுபோல், இறையருட் கவிமணியின் பாடல் உருவாக்கத்தில் பெரும்பங்கு வகிப்பவை அவரது மாலை இலக்கியங்களாகும்.

அவரால் இயற்றப்பட்ட மாலை இலக்கியங்கள் யாவும் ஒன்று திரட்டப்பட்டு "பாமாலை - 18" என்னும் பெயரில் 1999-இல் வெளியிடப்பட்டுள்ளது.

அவற்றுள் குறிப்பிடத்தக்க மாலை இலக்கியங்களாகப் பின் வருபவனவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

1 திருமறைமாலை

2. நபிமொழி மாலை

3. நாயக மாலை

4 நபிமணி மாலை

5. பாத்திமா மாலை

6. முஹ்யித்தீன் மாலை

7 இறையருள் மாலை.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள மாலை இலக்கியங்கள் பலவும் நாகூர் ஹனிபாவால் பாடப்பட்டு இசைத்தட்டு வடிவில் வெளிவந்து கேட்போர் உள்ளத்தைக் கிரங்க வைத்த பெருமைக்குரியன என்பது குறிப்பிடத்தக்கது.

## திருமறை மாலை

"ஆதியருள் கனிந்திலங்கி
அமரர் கோன் வழியாக
நீதிநபி மாமணிக்கு
நிறைவளித்த திருமறையாம்"

எனத் தொடங்கும் இப்பாடல் நபிகள் நாயகம் மூலமாக இறைவன் வான் வழி வழங்கிய திருக்குர்ஆன் என்னும் திருமறையின் உயர் பெருமைகளை எடுத்தியம்புகிறது.

இந்நூலின் அரங்கேற்றம் அதிராம்பட்டினத்தில் நடைபெற்றபோது ஊர்ப்பொதுமக்களும் அறிஞர் பெருமக்களும் ஒன்றிணைந்து உவப்புடன் வழங்கி மகிழ்ந்த பட்டமே "இறையருட் கவிமணி" என்பது குறிப்பிடத்தக்கது.

இன்பத்தமிழும் இஸ்லாமியத்திருநெறியும் கைக்கோர்த்து உறவாடும் "திருமறை மாலை" 313 கண்ணிகளால் ஆனது. (நபிகள் நாயகம் இஸ்லாத்தைக் காக்கும் முயற்றியில் 'பத்ரு' என்னும் இடத்தில் பகைவர்களுடன் போரிட்டபோது, அவர்களோடு இணைந்து கைக் கோர்த்து போரிட்ட வீரத்தோழர்களின் எண்ணிக்கை 313 என்பது குறிப்பிடத்தக்கது )

திருக்குர்ஆன் வாசகங்கள் கேட்பவர் உள்ளத்தில் கிளர்ச்சியை உருவாக்கும் ஆற்றல் மிக்கவை

நபிகள் நாயகத்தின் நெருங்கிய தோழர்களில் ஒருவராய்த் திகழ்ந்தவரும், நாயகத்தின் மறைவுக்குப் பிறகு இரண்டாவது கலீபாவாக ஆட்சிப்பொறுப்பு ஏற்றவருமாகிய வீரர் உமர் தொடக்காலத்தில் நபிகள் நாயகத்தின் கடும் எதிரியாய் திகழ்ந்தவர், நாயகத்தைக் கொல்வதை தன் வாழ்நாள் இலட்சியமாகக் கொண்டு உருவிய வாளுடனும் கொலை வெறிக் கண்களுடனும் அலைந்து திரிந்த உமர் தன் சகோதரி இல்லத்தில் உள்ளம் உருக திருக்குர்ஆன் வாசகங்களை ஓதுவதைக் கேட்டார் பாறையாய் இறுகிக்கிடந்த அவர் இதயம் பனி மலையாய் உருகத் தொடங்கியது ஓங்கிய வாளை நபிகள் நாயகத்தின் காலில் போட்டு சரணடைந்து இஸ்லாத்தை உவந்து ஏற்று நபிகள் நாயகத்தின் இறுதிநாள் வரை அவர்களின் பிரியத்திற்குரிய அணுக்கத் தோழராய்த் திகழ்ந்தார்

இந்த நிகழ்ச்சியை உள்ளம் தொடும் வகையில் உணர்த்துகிறது.

**"எரிமலையாய் குமுறிவந்த**
**ஏந்தலுமர் நெஞ்சினையே**
**விரிமலராய் மாற்றிவிட்ட**
**விந்தைமிகு திருமறையாம்"**

எனத் திருமறை மாலையில் இடம் பெற்றுள்ள பாடல்வரி ஒன்று.

திருமறை மாலையின் உள்ளடக்கச் சிறப்பைப் பின்வருமாறு பட்டியலிட்டுக் காட்கிறார், வடகரை பக்கர் என்னும் திறனாய்வாளர்

"1. திருமறை கூறும் அறிவுரைகளை 50 கண்ணிகளுக்கு மேலாய்த் தொகுத்துத் தந்துள்ளது.

2 திருமறைக்குரிய சிறப்புப் பெயர்கள் அவ்வவற்றிற்குரிய காரணங்களுடன் அழகிய முறையில் காட்டப்பட்டுள்ளன.

3. நூலின் இறுதிப் பகுதியாக அமைந்துள்ள இறைவேட்டல் உள்ளத்தை உருக்கும் வகையில் அமைந்துள்ளது.

4. திருமறைப் பிரார்த்தனைகளின் அடிப்படையில் அமைந்துள்ள இப்பாடல்கள் இறைவனிடம் இருகரம் ஏந்தி இறைஞ்சுவதற் கேற்றமுறையில் அமைந்துள்ளன "

## நபிமொழி மாலை

நபிகள் நாயகத்தின் நல்லுரைகள் நானூற்றை உள்ளடக்கிய "நபி மொழி மாலை" சிங்கப்பூரில் அரங்கேற்றம் பெற்றது

"நபிமொழிகளைப் பிஞ்சுநெஞ்சங்கள் மனனம் செய்வதற்கு ஏதுவாக தான் இம்மாலை இலக்கியத்தை உருவாக்கியதாகக்" குறிப்பிடுகிறார், இறையருட் கவிமணி

அருளியல், பொருளியல், வாழ்வியல், ஒழுக்கவியல் என்னும் நாற் பெரும் பிரிவுகளுக்குக் கீழ் இயலுக்குப் பத்து அதிகாரங்களாகவும், அதிகாரத்திற்குப் பத்துப் பாடல்களாகவும் நானூறு நபிமொழிகள் இந் நூலில் இடம் பெற்றுள்ளன

இறையருட்கவிமணி குடந்தையில் உள்ள அல்-அமீன் என்னும் உறைவிடப்பள்ளியில் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றிய காலத்தில் ஆக்கம் பெற்ற நூல் இது

நபிகள் நாயகம் கல்வி குறித்து வழங்கிய சில சிந்தனைகள்,

**"சீனா நாட்டிற் சென்றேனும்**
**சீரிய ஞானம் தேடிடுவீர்**
**தேனாயினுக்கும் தெளிவுரைகள்**
**தெவிட்டாதீந்த நபிமொழியாம்"**
**"பயனில் கல்வி ஈகையறப்**
**பல்கிய செல்வம் போலாகும்**
**உயரிய உரைகள் பொழிகின்ற**
**உத்தமர் அண்ணல் நபிமொழியாம்"**

என்னும் பாடல்வரிகள் வழி விளக்கம் பெறுகின்றன

அறத்தின் வழியில் நின்று வாய்மை வழுவா முறையோடு பொருளீட்ட வேண்டும் என்னும் நபிகள் நாயகத்தின் நல்லுரை,

**"திடமாய் அறத்தின் வழிநின்று**
**திரவியம் தன்னைத் தேடுவது**
**கடமையில் உயர்ந்த கடமையென**
**கவினே சிறக்கும் நபிமொழியாம்"**

**வாய்மை வழுவா முறையோடு**
**வருவாய் தேடி வாழ்வோரை**
**தூய்தாம் இறைமிக விரும்பிடுவான்**
**துன்பம் போக்கும் நபிமொழியாம்"**

எனவரும் பாடல் வரிகள் நயமாய் எடுத்தியம்புகின்றன.

இவ்வாறே,

**"வியர்வை உலருமுன்னாலே**
**வேலைக் கூலியைக் கொடுத்திடுவீர்"**
**"ஒன்றாய்க் கூடி அருந்திடுவீர்**
**ஒருவர் தனித்தே உண்ணாதீர்"**

"மனைவியைப் பகலில் துன்புறுத்தி
மகிழ்வாய் இரவில் நேசிப்போர்
மனித இயல்பின் எதிராவார்"

என்பன போன்ற நபிகள் நாயக நல்லுரைகளில் மனிதாபிமான சிந்தனைகளின் ஒளி வீச்சைக் காணலாம்

## நாயகப் பாமாலை

"அருளாளன் அன்புடையோன்
அல்லாஹுவின் கருணை
பெருங்கொடையாய் வந்துதித்த
பெருமானே, நாயகமே!

எனத்தொடங்கும் "நாயகப் பாமாலை" இறையருட் கவிமணிக்குப் பெரும் புகழ் ஈட்டித்தந்த இன்னிசைப் பாமாலையாகும்.

நாகூர் ஹனிபா முதன் முதலாகப் பாடிய இசைத்தட்டுப் பாடலாகவும் இப்பாடல் குறிப்பிடப்படுகிறது.

முன்னோர் தொடங்கிவைத்த மரபின் தொடர்ச்சியாக தமிழலக்கியத்திற்கு பேராசிரியர் கா. அப்துல்கபூர் வழங்கிய அறிவுக் கொடையாகத் திகழும் இந்நூல், உமறுப்புலவர் சீறாப்புராணக் காப்பியத்தில் மூன்று காண்டங்களில் பாடி முழுமை காணமுடியாத நபிகள் நாயகத்தின் பெருமித வாழ்வை நூற்றி இருபது கண்ணி வரிகளில் 960 சீர்களில் இனிய சந்தத்தில் அழகுறப்பாடி நம்மை அசத்துகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

"ஒன்றிறைவன் ஒன்று குலம்
ஒன்று நிறை என்றருளி
மண்பதைகள் பிணி நீக்கும்
மருந்தாகும் நாயகமே!"

எனவரும் பாடல், உலக மக்களை ஒன்றிணைய விடாமல் துண்டு துண்டாய் கூறுபோடும், இனவேற்றுமையை, நிற வேற்றுமையை,

மொழி வேற்றுமையைக் கலைந்து எறிந்து ஓரிறை என்னும் ஒரு கொடிக்குள் அவர்களை ஒன்றுதிரட்டி அன்பினால் நபிகள் நாயகம் கட்டியாண்ட திறத்தை வெளிப்படுத்துகிறது.

**"செங்கதிரும் தண்மதியும்**
**சேர்ந்துகையில் தந்திடினும்**
**எம்கொள்கை விடமாட்டோம்**
**என்றுரைத்த நாயகமே"**

என்று, கொண்ட கொள்கையை விட்டுத்தராத குணக் குன்றாய்க் காட்சி தரும் நபிகள் நாயகத்தைக் கவிஞர் புலப்படுத்தி காட்டும் அழகு நோக்கத்தக்கதாய் அமைந்துள்ளது

அரசியல், சமயம், சமூகம், பொருளியல், அனைத்திற்கும் வழி காட்டும் தலைமகனாய் வாழ்ந்த நபிகள் நாயகத்தின் தூய நன்னெறி வாழ்வை எளிய பாடல்வழி இனிய சந்தஓசையுடன் மக்களிடம் எடுத்துச் செல்வதில் பெருவெற்றியை ஈட்டியுள்ளது, இறையருட் கவி மணியின், "நாயகப்பாமாலை" என்னும் இந்நன்னூல்.

## நபிமணிமாலை

**"ஆளும் இறைவன் தூதர் நபி!**
**அன்பே வடிவாம் நாதர் நபி!"**

எனத்தொடங்கும் நபிமணி மாலை, கவிஞருக்குப் பெருமை சேர்க்கும் மற்றொரு முத்தாரமாகும்.

இப்பாடலும் இசைத்தட்டுப் பாடலாய் வெளிவந்து நாகூர் ஹனிபாவால் பாடப்பட்டு அனைவரது வரவேற்பையும் பெற்றுள்ளது

126 கண்ணிகளால் அமைந்த இப்பாடல் நாயகத்தின் நற்பண்பு களைப் பட்டியலிட்டுக் காட்டும் நோக்கில் புனையப்பட்டுள்ளது.

**"அன்பால் நெஞ்சை உழுத நபி"**
**"பண்பாம் உரத்தைப் போட்டநபி"**
**"அடிமைத் தளையை அறுத்தநபி"**

"அரசச் செல்வம் வெறுத்த நபி"

எனவரும் வரிகள் நயம்பட நாயகத்தின் நற்பண்புகளை இரத்தினச் சுருக்கமாய் வெளிச்சப்படுத்திக் காட்டுகின்றன.

## பாத்திமா மாலை

நபிகள் நாயகத்தின் திருமகள் பாத்திமாவின் ஒப்பற்ற உயர் வாழ்வை எளிய நடையில் எடுத்தியம்பும் இனிய சந்தப் பாமாலை இது.

**"விண்ணகமும் மண்ணகமும்**
**வியந்துரைக்க வந்துதித்த**
**அண்ணலான நபிமகளார்**
**அருமையான பாத்திமா"**

எனத் தொடங்கும் இப்பாடல் மாநிலப் பெண்களுக்கெல்லாம் மணிவிளக்காய்த் திகழ்ந்து ஒளிவீசிய மாநபி மகளார் அன்னை பாத்திமா வாழ்ந்த எளிய வாழ்வை, சோதனைகளைக் கண்டு அஞ்சாமல் அவற்றை உறுதியுடன் அவர் எதிர்கொண்ட திறத்தை, உள்ளம் உருக்கும் வகையில் எடுத்துரைக்கிறது.

மாதவ நபிக்கு மகளாய்ப் பிறந்து நற்குணங்கள் நிரம்பப் பெற்று மண்ணகப் பெண்ணரசியாய்த் திகழ்ந்தவர், பாத்திமா.

நபிகள் நாயகத்தின் மறைவிற்குப் பிறகு கலீபாவாக ஆட்சி செய்த மாவீரர் அலியின் மனைவியாக இல்லற வாழ்வை இனிது நடத்தியவர்.

மார்க்கத்திற்கு போராடி தன் இன்னுயிரை இழந்த ஹஸன் - ஹுஸைன் என்றும் பெருமிதத்திற்குரிய ஆண் மக்களைப் பெற்றெடுத்த வீர அன்னை.

இச் சிறப்புகள் யாவையும் சுருக்கமாய் இருவரிகளில் பின் வருமாறு எடுத்துரைக்கிறது இறையருட்கவிமணியின் பாடல்.

**"பெருநபியின் புதல்வியாகி**
**பேரறிஞர் துணைவியாகி**

பெருமை சான்றோர்
அன்னையாகும்
பேறு பெற்றீர் –
பாத்திமா!''

கைசிவக்க மாவரைத்து, கண்சிவக்க அடுப்பெரித்து, மெய்வியர்க்க வீட்டு வேலை செய்து'' சராசரிப் பெண்களுக்குரிய இல்லறக் கடமை களை சளைக்காமல் ஆற்றிய பாத்திமாவின் எளிய செயல்பாடுகளைக் கண்டு வியந்து நிற்கிறது ஒரு பாடல். கடுங்குளிரில் நடுங்கும் ஏழை கவலை போக்க மண உடையைக் கொடையளித்து பழைய ஆடை புனைந்து நின்ற அருஞ்செயலையும், பசிதணிக்க கிடைத்த ரொட்டி பரிதவிக்க வந்த ஏழை புசிப்பதற்குக் கொடுத்துப் புகழடைந்த ஈகையுணர்வையும், வரிசையாகப் பட்டியலிட்டுக் காட்டி ''பாத்திமா'' என்னும் பெண் நாயகியை அறியாதவரும் அறிந்து உணர்ந்து போற்றும் வண்ணம் அவரது வாழ்க்கைச் சித்திரத்தை அற்புதமாய் வரைந்து காட்டியுள்ளது, இறையருட் கவிமணியின் ''பாத்திமா மாலை'' என்னும் இப்பனுவல்.

உலகம் முழுவதும் உறங்கியபோதும் தான் மட்டும் விழித்திருந்து இறைவனின் திருமறையை உள்ளம் உருக ஓதி இறைவனின் வெல்லம் நிகர் கருணையை பாத்திமா நாயகி வேண்டிநின்ற காட்சியை,

**''பூவுறங்க புள்ளுறங்க**
**புவன மெல்லாம் ஆழ்ந்துறங்க**
**நாவுறங்கா திருந்திறையின்**
**நாமமோதும் பாத்திமா''**

என்று அழகு சந்தத்தில் அறிமுகம் செய்கிறது, ஒரு பாடல் இப்பாடல்வரியில் நாட்டுப்புறத் தாலாட்டின் இனிய இசை இழையோடுவதையும் உயர்த்துணர முடிகிறது

## முஹ்யத்தீன் மாலை

அருளும் அன்பும் உடைய இறைவனின் ஞானச் சுடரொளியின் ஒரு கீற்றாய்ப் பொலிந்து, ஈரானில் பிறந்து, ஈராக்கின் தலைநகராம் பாக்தாத்தில் அடக்கம் பெற்றுள்ள முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி

என்னும் இறைநேசச் செல்வரின் அன்பில் தோய்ந்து அன்புசுரந்து இறையருட் கவிமணியால் எழுதப்பட்ட 75 கண்ணிவரிப் பாடல்களின் தொகுப்பு -

''முஹ்யத்தீன் மாலை''

**''ஈரான் நாட்டு தப ரீஸின்**
**இலங்கும் ஜீலான் நகரத்தின்**
**பேராம் நீபுச் சிற்றூரில்**
**பிறந்தார் ஷெய்கு முஹ்யத்தீன்''**

எனத் தொடங்கும் இப்பாடல், முஹ்யத்தீன் என்னும் இறைநேசச் செல்வரின் புனித வரலாற்றை எளிய நடையில் எடுத்துரைக்கிறது

நபிகள் நாயகத்தின் பதினான்காவது தலைமுறையைச் சார்ந்தவராய், ஈரான் மண்ணில் பிறந்து, ஈராக்கில் தன் ஆன்மீக ஆட்சியை நிலைநிறுத்திய இறைநேசச் செல்வர் காஜா முஹ்யத்தின், நபிகள் நாயகத்திற்கு அடுத்தநிலையில் ஈரான், ஈராக், இந்தியா, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் சார்ந்த இஸ்லாமியப் பெருமக்களால் பெரிதும் உவந்துப் போற்றப்படும் பெருமைக்குரியவர் ஆவார்

இவரது பெருமையுணர்த்தும் புகழ்ச்சிப் பாமாலைகள் ஏராளமாய் பாரசீகம், உருது மொழிகளில் தோற்றம் பெற்றுள்ளன அவற்றை அடியொற்றி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய உலகிலும், 'முகைதீன் ஆண்டவர்'' எனப் போற்றப்படும் இப்பெருமகனின் புகழ்முழக்கும் பனுவல்கள் ஏராளமாய் இயற்றப்பட்டுள்ளன அவ்வரிசையில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுத்திகழ்கிறது, இறையருட் கவிமணியின் ''முஹ்யித்தீன் மாலை''

## இறையருட் மாலை

பிணியில் சிக்கி பெருந்துன்பத்தில் **மனம் உழன்ற போது** இறைவனின் அருள் வேண்டி இறையருட் கவிமணியால் புனையப் பட்ட இறைவேட்டல் பாமாலை ''இறையருள் மாலை''

இறைவனை உள்ளம் உருக வேண்டிநிற்கும் வகையில் இயற்றப்பட்டுள்ள இப்பாமாலையில்,

"பிரார்த்தனைகளில் என்னென்ன அம்சம் பொருந்தியிருக்க வேண்டும் என்று இஸ்லாமியச்சட்டம் சொல்கிறதோ அந்த அம்சங்கள் யாவும் பொருந்தியுள்ளதாகக்" குறிப்பிடுகிறார், இஸ்லாமிய மார்க்க அறிஞரும், திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு ஆசிரியர்களில் ஒருவருமாகிய எஸ்.எஸ். முகமது அப்துல் காதிர் சாகிப் பாக்கவி.

இறைவனின் திருநாமத்தைப் புகழ்ந்து தொடங்கும் இப்பாடல் பின் இறைவனின் தன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. பின், பாடலாசிரியரின் குறையை இறைவனிடம் உரைத்துப்பிரார்த்திக்கிறது, இறுதியில் நபிகள் நாயகப் புகழ்ச்சியுடன் நிறைவு பெறுகிறது.

**"அருளன்பு பண்பின்**
**அளவற்ற உந்தன்**
**திருநாமம் போற்றி**
**திறக்கின்றோம் அல்லாஹ்"**

எனப்பாடல் தொடக்கம் பெறுகிறது.

இஸ்லாமியர்கள் தம் நடைமுறை வாழ்வில் எந்த ஒரு நற்காரியத்தை செய்தாலும் இறைவனின் ஒப்பற்றப் பண்புகளைப் புகழ்ந்துதொடக்கம் செய்வது வழக்கம். அரபியில் "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹிம்' என்று கூறப்படும் இதற்கு "அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய இறைவனின் திருப்பெயரால் தொடக்கம் செய்கிறேன்" என்று பொருள். இந்தப் பொருளின் இன்னோரு வடிவாகவே பாடலின் தொடக்கம் அமைந்துள்ளது என்பது கூர்ந்து நோக்கத்தக்கது.இதே பொருளை உணர்த்தும் மற்றொரு கவிதை வடிவத்தையும்,

**"அலகிலா அருளும்**
**அளவிலா அன்பும்**
**இலகுமோ றிறையின்**
**இனியபேர் போற்றி"**

என்னும் பா வடிவில் இறையருட் கவிமணி யாத்து அளித்துள்ளார் என்பதையும் அவரது இலக்கியங்களில் தோய்ந்தவர்கள் நன்கறிவர்.

இப்பாமாலையில் காணப்படும் மற்றொரு வியக்கத்தக்க சிறப்பு என்னவெனில், திருமறையின் தோற்றுவாயாகத் திகழும் முதல் அத்தியாயத்தின் பொருள் முழுவதையும் மிக எளியதமிழ்ப்பாடல் வடிவில் இறையருட் கவிமணி அறிமுகம் செய்துள்ள பாங்காகும்.

**"எல்லா உலகும் ஏகமாய்க் காக்கும்**
**வல்லான் உனக்கே வான்புகழ் அல்லாஹ்"**

எனத் தொடங்கி,

**"நின் கோபம் கொண்டோர் நெறிவிட்ட கன்றோர்**
**செல்நெறி தன்னில் செலுத்தாதே, அல்லாஹ்"**

என்று முடியும் பாடலின் வரிகள் முழுவதும் இறைமறையாம், *திருமறையின் முதற் அத்தியாயத்தின் திரண்ட கருத்தை* உள்ளடக்கித் திகழ்கிறது

பாமாலை 18 இல் அளவில் பெரிதாக அமைந்திருப்பது - "இறையருள் மாலையே" ஆகும் இது 736 கண்ணிகளில் தொடுக்கப்பெற்றுள்ளது.

இறைவனின் பெருமையை உணர்த்தும் திருப்பெயர்களின் எண்ணிக்கை 99

"இறையருள் மாலையின் ஒவ்வொரு கண்ணியிலும் அல்லாஹ்வின் திருப்பெயர் ஒன்றை அப்பெயர்க்குரிய பொருள் நுட்பம் விளங்குமாறு அமைத்து பாடியுள்ள கவிஞரின் திறன் போற்றத்தக்கது" என்று புகழ்ந்துரைக்கிறார், பேராசிரியர் மு இ அகமது மரைக்காயர். இறைமறையில் இடம் பெற்றுள்ள இறைவனின் திருத்தூதர்கள் இருபத்தைந்து பேர்களுக்கு இறைவன் அருள் புரிந்த திறத்தை இப்பனுவல் உருக்கமுடன் எடுத்துரைக்கிறது.

வானவர் பதின்மர் பெயர் சுட்டப்பட்டுள்ளது. நாயகத் தோழர்களும், மெய்ஞ்ஞான மேதைகளும் இறைவனின் கனிந்த அன்புக்கு உரிமைப் பெற்றுத் திகழ்வதை இப்பனுவல் நயமாகச் சுட்டுகிறது பாமாலையின் இறுதியில் எல்லா உயிர்களுக்கும் அரசனாய்த் திகழும் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, தன் குறை இரந்து, இறைவனின் அருள் வேண்டி நிற்கிறது. தனக்காக மட்டும் குறை இருக்காது உலகமக்கள் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு -

**"வன்முறை ஊழல் வளர்கின்ற உலகில்**
**நன்முறை ஓங்க நயந்தருள் அல்லாஹ்!**

வெருளும் புயலால் வெள்ளப் பெருக்கால்
மருளும் நிலையில் மாட்டாதே, அல்லாஹ்!
சேர் நீர் நெருப்பால் செல்வா கனத்தால்
நேர்கின்ற விபத்தை நீக்குவாய், அல்லாஹ்!''

என்று மானுட வர்க்கத்தின் பிரதிநிதியாய் இறைவனின் திருச்சபையில் நின்று உருக்கமுடன் மன்றாடும் கவிஞரின் 'இறை'யருள் மாலை' இவ்வுலகின் மீதும் சகஉயிரினங்கள் மீதும் கவிஞர் கொண்டுள்ள அன்பின் வெளிப்பாட்டைப் புலப்படுத்துகிறது.

மாலை இலக்கியத்தால் தமிழை மணக்க வைத்த கவிஞரின் ஆளுமைத் திறனை ஆராய்ந்தறிந்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்ஃபில் பட்டம் பெற்றுள்ள ஆய்வாளர் ஜோதிராணி,

''மனித வாழ்வை மேம்பாடுடையதாக்கும்
நோக்கமே இவரது கவி இலட்சியமாக இருக்கின்றது''

என்று குறிப்பிட்டுள்ளது, நம் கவனத்திற் கொள்ளத்தக்கது.

# 5
# பன்முக ஆளுமை

**சி**றந்த கல்வியாளராக, பன்மொழி வல்லுநராக, இஸ்லாம் குறித்த தெளிந்த சிந்தனை மிக்கவராக, இறைமறையை நபிமொழியை புதிய நோக்கில் மக்களுக்கு திறம்பட அறிமுகம் செய்தவராக, அறிவியல் தாகம் மிக்கவராக, நூலகக்காவலராக, ஞானமார்க்கத்தில் தேர்ந்த பயிற்சிப் பெற்றவராக, பண்பாட்டுப்போதகராக, மனிதநேயச் சிந்தனை யாளராக, நல்லாசிரியராக, சொல்லேருழவராக, தோற்றப்பொலிவு மிக்கவராக, இசைத்தமிழ்ப்புலவராக, குழந்தைக்கவிஞராக, சிறந்த நிர்வாகியாக, கவியரங்க முன்னோடியாக, தமிழிலக்கியப்பயிற்சி மிக்கவராக, பன்முக ஆளுமைத் திறனைப் பெற்றுத் திகழ்பவர், இறையருட் கவிமணி பேராசிரியர் கா அப்துல் கபூர்.

அவருள் புதைந்து கிடக்கும் ஆற்றலை, வீரியச் செயல்பாட்டை, அன்புள்ளத்தை, பல்வேறு நிலைகளில் நின்று நாம் அடையாளம் காண முடியும்

‘தோள் கண்டார் தோளே கண்டார்’ எனக் கம்பன் மொழிவதைப் போல், ஒவ்வொருவரும் ஒவ்வொரு தளத்தில் நின்று அவரது வித்தகத் தன்மையை உரசிக் காட்டுகின்றனர் சான்றாய் சில நிகழ்வுகள், அனுபவங்கள், மதிப்பீடுகள்-இவற்றின் உள்ளடக்கமாய் அமைகிறது இப்பகுதி

## கவிஞர் பார்வையில்....

‘கவிஞர்’ என்ற அடையாளத்தால் இலக்கிய உலகில் தன் இருப்பை நிலைநிறுத்தியவர், ‘இறையருட் கவிமணி’ பேராசிரியர் கா.அப்துல்கபூர்.

தமிழர் இதயவானில் எழிலார் தோற்றம் தரும் வானவில்லாய் இவரை அடையாளம் காட்டுகிறது. கவிஞர் முனைவர் ஈரோடு தமிழன்பனின் கவிதை

அடங்கக் கற்ற மலையாய்
அமைதி காத்த கடலாய்
ஒடுங்கி நின்ற விசும்பாய்-நான்
உத்தமர் கபூரைக் கண்டேன்

அதட்டத் தெரியாத் தென்றல்
அவரின் மெல்லியப் பண்பு
கொதிக்கத் தெரியா நிலவு-அவரின்
குளிர்ச்சி ததும்பும் நடத்தை!

உலர்ந்துப்போகாப் பனியாய்
உள்ளம் அன்பு பொழியும்
மலர்ந்து வாடா முறுவல் -அவர்
வட்ட முகத்தில் வாழும்!

புனையும் குழந்தைப் பாட்டில்
பொன்னால் தொட்டில் கட்டிக்
கனிகள் கொய்து தருவார்-அவரே
சுளையாய் கனிந்து வருவார்

தபலா அதிர்வு போலத்
தாளம் பிசகாச் சுதியால்
சபையில் ஒலிக்கும் பேச்சில் - கபூர்
சந்தனம் கமழச் செய்வார்.

என்னும் தமிழன்பனின் இக்கவிதை இறையருட் கவிமணியிடம் இயல்பாகக் குடியிருக்கும் பன்முகத்தன்மையைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது

"இறையருட் கவிமணி! இலக்கிய மாமணி!
அப்துல் கபூரை அறியார் எவருளர்!
கம்பீமான கவிதைக் குயில் அது!
களங்கமில்லா பௌர்ணமி நிலவது!
வண்ணத்தமிழ்பயிர் வளர்த்த வயலது!
செருநர் நடுங்கிய செந்தமிழ்ப்புயலது!
தாள்தோய் தடக்கை தகை மாண் வழுதிபோல்
உருவமும் உள்ளம்போல் ஓங்கி உயர்ந்தது!

என்று இறையருட் கவிமணியின் வியத்தகு செயல்பாடுகண்டு வியந்து நிற்கிறார், கவிஞர் மு.மேத்தா.

"அருவி தாங் கேட்டாலும் அழகுயாழ் குழலென்னும்
கருவிதாங் கேட்டாலும் கான வானம் பாடிக்
குருவிதாங் கேட்டாலும் கூடிவந்து பாராட்டும்
திருவிதாங் கோட்டு செழும்புலவர்"

என்று இறையருட் கவிமணியின் சந்தப் பாடல் இனிமைக்குக் கவிதையால் சாமரம் வீசி மகிழ்கிறார், கவிக்கோ முனைவர் அப்துல்ரகுமான்.

இறையருட் கவிமணியின் பாட்டழகில் சொக்கி காரைக்காலில் வாழும் கவிஞர் ஒருவர் தன்பெயரை மாற்றிக் கொண்டார் - "கபூர் தாசன்" என்று. வாப்பு மரைக்காயர் என்னும் இயற்பெயர் கொண்ட இக்கவிஞர் பாரதிக்கு ஒரு பாரதிதாசன் அமைந்ததுபோல், பாரதி தாசனுக்கு ஒரு சுப்புரத்தினதாசன் என்னும் சுரதா அமைந்தது போல், தன்னை "கபூர் தாசன்" என அடையாளம் காட்டிக்கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறார்.

"சொல்லும் செயலும்
விரலும் ரேகையாய்
விளங்கிய வித்தகர்!

நாக்குத்திரியில்
மறைச்சுடர் ஏந்தி
தீன்நெறி காட்டிய
மனித விளக்கு"

என்று தன் குருநாதரைப் பாடலால் அடையாளம் காட்டுகிறார், கபூர்தாசன்

## சொல்லேருழவர்

அறிஞர் அண்ணாவுக்கு நிகரான சொல்லேருழவராய் அடையாளம் காட்டப்பட்டவர், இறையருட் கவிமணி அப்துல்கபூர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்றபோது அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பை பெற்ற பேராசிரியர் கா அப்துல் கபூர் அவர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புதான் இலக்கிய உலகில் தான் ஏற்றம்பெற உதவியதாய் நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார்

தான் எந்தக் கல்லூரியில் பணியாற்றினாலும் அந்தக் கல்லூரியில் உள்ள தமிழ்மன்றத்தில் அறிஞர் அண்ணாவைச் சொற்பொழிவாற்றச் செய்யும் பேரவாக் கொண்டவர், பேராசிரியர் கா அப்துல் கபூர். அதனால் சென்னை அரசினர் முஸ்லிம் கல்லூரியில் பணியாற்ற கிடைத்த நல்வாய்ப்பை இழந்தவர். ஆயினும் அதனைப் பொருட் படுத்தாது தான் அடுத்துப் பணியாற்றிய வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரி தமிழ்மன்றத்திற்கும் அண்ணாவை வரவழைத்துச் சொற்பொழி வாற்றச் செய்து மகிழ்ந்தவர். இதனை அண்ணா நகைச்சுவையுணர் வுடன், ''பேராசிரியர் கா. அப்துல்கபூர் நிறைய கல்லூரிகளில் பணி யாற்றச் செல்ல வேண்டும். அப்போதுதான் அவர் பணியாற்றும் கல்லூரிகளில் பேசுகின்ற வாய்ப்பு எனக்கு கிடைக்கும்'' என்று குறிப்பிட்டுள்ளது அண்ணாவுக்கும் கபூருக்கும் இடையில் இருந்த அன்பை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் க. அன்பழகன், மதியழகன் போன்ற சொல்வன்மை மிக்க திராவிட இயக்க முன்னோடிகளுடன் நெருங்கிப்பழக அண்ணாமலைப் பல்கலைக்கழகம் உருவாக்கித் தந்த வாய்ப்பும் பேராசிரியரின் நாவன்மைக்கு ஒரு காரணமாய் அமைந்துள்ளது

வாணியம்பாடி இஸ்லாமியா கல்லூரி தமிழ் மன்றத்தில் உரை நிகழ்த்திய அறிஞர் அண்ணா, ''தன் சிந்தனையோட்டத்தில் முகிழ்ந்தெழும் அரிய கருத்துக்களை, தீந்தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கோர்த்து தனக்கே உரிய பாணியில் தமிழ் முழக்கம் செய்து வருபவர்'' என்று புகழாரம் சூட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதிராம்பட்டினத்தில் பேராசிரியர் கா. அப்துல்கபூர் முதல்வராய்ப் பணியாற்றியபோது அங்கு நடந்த விழா ஒன்றிற்கு சிறப்பு விருந்தினராய் வருகை புரிந்த சென்னைப் பல்கலைக் கழக துணை வேந்தர் நெ.து சுந்தரவடிவேலு முதல்வர் கபூரின் வரவேற்புரையில் மயங்கி, ''நான் எத்தனையோ அறிஞர்களின் சொற்பொழிவைக் கேட்டிருக்கிறேன். இன்று உங்கள் முதல்வர் நிகழ்த்திய சொற்

பொழிவைப் போன்று வேறெங்கும் கேட்டதில்லை இதைப் பாராட்ட வேண்டும் என்ற மரபுக் கருதிச் சொல்லவில்லை மனம்விட்டுச் சொல்கிறேன். சிறிது கூட தடையில்லாமல் சரளமாகவும் வேகமாகவும் எப்படி அவரால் பேச முடிகிறது என்று வியந்து போனேன். தமிழ்ப் பேச்சாளர்களில் உங்கள் முதல்வரின் பேச்சு தனிப்பாணி, அவரது மொழி யழகும், சொல்லழகும், நடையழகும், என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளன '' என்று புகழ்ந்துரைத்துள்ளது இவரது சொல் வன்மைக்கு மற்றொரு சான்றாகும்

இளையான்குடி ஜாகிர் ஹூசைன் கல்லூரி முன்னாள் முதல்வரும் தமிழறிஞருமான கேப்டன் அமீர் அலி, தான் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் மாணவராய் இருந்த காலத்தில் இறையருட் கவிமணியின் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்த அனுபவத்தை இவ்வாறு நினைவுபடுத்துகிறார்;

''1953 ஆம் ஆண்டு பேராசிரியர் கா அப்துல்கபூர் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தார் நான் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் இடைநிலை இரண்டாம் ஆண்டு பயின்றேன் அக்கல்லூரி திருவள்ளுவர் கழகத்தில் நான் செயலாளராக இருக்கும்போது பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்களைத் தொடக்கவுரை நிகழ்த்த அழைத்திருந்தோம்

ஆற்றொழுக்கு என்பார்கள் மடை திறந்த வெள்ளம் என்பார்கள் இதைவிட உவமைகள் கூற வேண்டும். எனக்குச் சொல்லத் தெரியவில்லை பரந்துவிரிந்த அவரது தமிழ் இலக்கியப் புலமை கேட்டோரை வியக்க வைத்தது''

இவ்வாறு சொல்லேருழவராய் பேராசிரியர் மேடைப்பேச்சில் திறன் பெற்றுத் திகழ்ந்தமைக்கு அறிஞர்களின் நல்லுரைகள் சான்றாய் அமைகின்றன.

## நல்லாசிரியர்

தான் பணியாற்ற சென்ற இடங்களில் எல்லாம் மாணவர்கள் நினைவில் நீங்கா முத்திரைப் பதித்த நல்லாசிரியராய்த் தன்னை அடையாளம் காட்டிக் கொள்வதில் பெருமையுறுபவர் பேராசிரியர் கா. அப்துல்கபூர்

அவரிடம் கல்விபயின்ற மாணவர்களில் அவரைவிட வயதில் மூத்தோரும் இருந்தனர்; மிகச் சிறிய இளஞ்சிறாரும் இருந்தனர்.

அனைவரையும் சமமாய் நோக்கி கல்விப்பணி வழங்கி தான் அனுபவித்த இன்பத்தை இவ்வாறு நினைவு கூர்கிறார், பேராசிரியர் கா. அப்துல் கபூர்,

"ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகளாகப் பல்வேறு இடங்களில் பல்வேறு நிலைகளில் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பினை யான் பெற்றேன். என்னைவிட வயதில் முதிர்ந்தவர்களுக்கும் சின்னஞ்சிறிய சிட்டுகளுக்கும் கல்வியூட்டும் அனுபவமும் அடைந்தேன். தமிழ்கூறும் நல்லுலகில் மட்டுமின்றி பாருலகின் பல்வேறுப் பகுதிகளிலும் என் அருமை மாணவர்கள் உயர்ந்த நிலைகளில் சிறந்திருப்பது கண்டு இறும்பூதடைகிறேன் இன்றும் அவர்கள் என் மீது பொழிகின்ற அன்பை எண்ணி அகமகிழ்கின்றேன் "

வாணியம்பாடி இஸ்லாமியக் கல்லூரியில் பேராசிரியர் கா. அப்துல்கபூர் பணியாற்றியபோது அவரிடம் மாணவராய் இருந்த மு அப்துல் குத்தூஸ் (மறைந்த தமிழக அமைச்சர் சாதிக்பாட்சாவின் அணுக்கச் செயலராய்ப் பணியாற்றியவர்) பேராசிரியருக்கும் மாணவருக்கும் இடையே நிலவிய நல்லுறவை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

"பேராசிரியர் மாணவர்களிடையே இணைந்து நெருங்கிப் பழகிடும் சிந்தனையாளர். அவர்களின் கருத்தோட்டங்களைக் கணித்து தகுந்த பாதைகள் வகுத்துக்காட்டி தமிழ் உணர்வையும் ஊட்டி தமிழ் மணம் கமழச் செய்தார்

பேராசிரியர் கல்லூரி விடுமுறை நாட்களில் சொந்த ஊர்களுக்குச் செல்லாமல் விடுதியில் தங்கிவிட்ட மாணவர்களுக்கு இரமலான் போன்ற பெருநாட்களில் விருந்தளித்து மகிழ்வார். மாணவர்கள் அவரைத் தங்கள் குடும்பத்தில் ஒருவராகவே கருதி உறவாடினர்."

பேராசிரியர் கா. அப்துல்கபூர் அவர்களின் நன்மாணக்கர்களாய் திகழ்ந்தவர்களுள், கோவை பாரதியார் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராய்ப் பணியாற்றி ஓய்வு பெற்ற, சாகித்ய அகாடமி பரிசு பெற்ற கவிஞர் 'சிற்பி' பாலசுப்ரமணியன், யுனஸ்கோ கூரியர் ஆசிரியர் கலைமாமணி மணவை முஸ்தபா, முன்னாள் தமிழக அமைச்சர் (மறைந்த) திரு. சாதிக்பாட்சா, அதிராம்பட்டினம் காதர்

முகைதீன் கல்லூரி முன்னாள் முதல்வரும் இந்நாள் தமிழ்த்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் எம் ஏ. அப்துல் காதர், உச்சநீதிமன்ற குற்றவியல் வழக்கறிஞர் திரு நடராசன், சென்னை விமான நிலைய முன்னாள் துணை கலெக்டர் மு. கண்ணன், ஐ.ஆர்.எஸ் பள்ளிசாரா மாணவர் கல்விக் கருவூல இயக்குநராய்ப் பணியாற்றிய பேராசிரியர் இரத்தின நடராசன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்

## நல்ல நிர்வாகி

எழுத்தாளராக, பேச்சாளராக, கவிஞராக இருப்பவர்கள் பொதுவாக நல்ல நிர்வாகியாக இருப்பதற்கான சூழல் அமைவதில்லை. எப்போதும் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டு இருப்பதாலும், புதிய ஆக்கங்களுக்கான சிந்தனையில் மூழ்கிவிடுவதாலும், அன்றாட நிர்வாக நடை-முறைப் பணியில் அவர்கள் சிறந்து விளங்குவது மிக அரிதான நிகழ்வாகும்.

அத்தகைய அரிதான ஒரு சிலரில் அடையாளம் காட்டத்தக்க சிறந்த நிர்வாகியாக தான் பணியாற்றிய இடங்களில் தனி முத்திரைப் பதித்தவர், இறையருட் கவிமணி கா. அப்துல்கபூர்.

இறையருட் கவிமணியின் நிர்வாகச் செயல்பாடு எப்படியிருந்தது என்பதை அனுபவ ரீதியாக உணர்த்துகிறார், புதுக்கல்லூரி முன்னாள் முதல்வரும் சென்னை சதக் கலை அறிவியல் கல்லூரி இந்நாள் முதல் வருமான டாக்டர் மேஜர் மு.ஜெய்லானி;

''அனைவரையும் அன்பால் அரவணைத்துப் பிரச்சனைகள் எழுவதற்கே வாய்ப்பளிக்காது அமைதியுடன் செயல்படுவதே சிறந்த மேலாண்மைத் திறன் என்பதை செயல்படுத்திக் காட்டிய கல்லூரி முதல்வர் பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்கள். இவர் காட்சிக்கு எளியவர்; கடுஞ் சொல்லர் அல்லர் அதனால்தான் இவரால் நிர்வகிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் அமைதிப் பூங்காவாகச் செயல்பட்டன. கல்லூரி முதல்வர்களின் சர்வாதிகாரப் போக்கினால் கல்லூரிகள் போர்க்களங்களாக மாறிவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தார். தன்னுடைய உயரிய பண்புகளால் இவர் பணியாற்றிய கல்லூரிகளில் ஆசிரியர்களும் மாணவர்களும் கருத்துபரிமாற்றம் செய்கின்ற கருத்தரங்குகளாக மாற்றிக்காட்டினார். இவ்வகையில் அவர் கல்லூரி முதல்வர்களுக்கெல்லாம் ஒரு நல்ல முன் உதாரணம்.''

இவ்வாறு ஒரு கல்லூரி முதல்வரின் மதிப்பீட்டில் மிக உயர்ந்த இடத்தில் ஒரு படைப்பாளி இருப்பது இலக்கிய உலகம் பெருமைப்பட வேண்டிய ஒரு விஷயமாகும்.

## தோற்றப்பொலிவினர்

இளம் பருவத்தில் அழகியத் தோற்றப் பொலிவினை உடையவராய்த் திகழ்ந்தவர், இறையருட் கவிமணி கா. அப்துல்கபூர். தலைப்பாகையும், வரித்து கட்டிய வேட்டியும், வெற்றிலைக் குதப்பிய வாயும், ஆத்திரத்தில் புடைத்துத் துடிக்கும் மூக்கும், பாரதிபோல் ஒரு அழுக்குக் கோட்டும், கையில் ஒரு நீண்ட பிரம்புமாய் கற்பனை செய்யப்படும் பழங்கால தமிழ்ப் புலவரைப்போல் அல்லாது, ஒரு கலெக்டருக்குரிய எடுப்பும் மிடுக்கும் பொலியும் வகையில் கோட்டு சூட்டுடன் வகுப்பறைக்கு வந்து பாடம் நடத்தி இளம் பருவ மாணவர்களை அப்துல் கபூர் அசத்தினார் என்று அவரிடம் பாடம் பயின்ற மாணவர்கள் பெருமையோடு குறிப்பிடுகின்றனர்.

''பேராசிரியர் அணியும் எடுப்பான ஆடைகள் மாணவர் கூட்டத்தை ஈர்க்கும் சிங்கப்பூரிலிருந்து வந்த ரேயான் கோட்டும் பேண்டும் பேராசிரியருக்குத் தனி மவுசைக் கொடுக்கும். ஆசிரியர் கூட்டம் பேராசிரியர் புன்னகையில் பேரானந்தம் கண்டு திகைத்திருக்கும்''

என்று தான் கண்டு ரசித்த அனுபவத்தை, பேராசிரியரின் நடையுடை, பாவனையை நினைவுபடுத்திக் காட்டுகிறார், திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி முன்னாள் மாணவர், பொறியாளர் முகம்மது அன்வர் அலி.

''உத்தமபாளையும் ஹாஜி கருத்தராவுத்தர் கௌதியா கல்லூரிக்கு வருகை தந்த தமிழ்வேள் பி டி ராஜன் மாணவர்கள் கல்லூரி தலைவர் அப்துல் கபூர் போன்று கம்பீரமாய் உடை அணிய வேண்டும் என்று அறிவுறுத்தினார்'' என்று குறிப்பிடுகிறார், அக்கல்லூரியுடன் நெருங்கிய தொடர்புடையவரான உத்தமபாளையம் வழக்கறிஞர் எம். காதர்சுல்தான்.

உத்தமபாளையம் கல்லூரியில் 45 ஆண்டுகளுக்கு முன்னால் பேராசிரியர் கா அப்துல் கபூர் முதல்வராக இருந்த நேரத்தில், அப் போதைய தமிழக ஆளுநர் திரு விஷ்ணுராம் மேதி ஒரு மருத்துவ

மனையைத் திறப்பதற்காக கம்பம் வந்தார் அந்த நேரத்தில் ஆளுநரின் ஆங்கில உரையைத் தமிழில் மொழிபெயர்த்தவர், அப்துல் கபூர், பேராசிரியர் சிறப்பாக உடையறிந்திருந்ததைக் கண்ட அவ்வூர் மக்கள் இவர்தான் ஆளுநர் என்று பேசக்கூடிய முறையில் மிடுக்கான உடையில் தோன்றியிருந்தார்

இவ்வாறு கருவில் திருவுடையவராய் மட்டுமின்றி உருவில் பொலிவுடையவராகவும் திகழ்ந்தவர் இறையருட் கவிமணியவர்கள்.

## நூலகக் காவலர்

ஒரு கல்விக்கூடத்தில் காணப்படம் நூலகம்போல் தம் இல்லத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட அரிய நூல்களைக் கொண்ட ஒரு தனி நூலகததைப் பராமரித்து வந்தார், இறையருட் கவிமணியவர்கள்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்களுக்கு தேடும் பொருள்கள் எளிதில் கிடைக்கும் அறிவுச்சுரங்கமாக அது திகழ்ந்தது. இஸ்லாமியப் புதுவகை இலக்கியத்தில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்ற முனைவர் கம்பம் சே.சாகுல் அமீது "தனது ஆய்விற்கு இறையருட் கவிமணியின் இல்ல நூலகம் பெரிதும் உறு துணையாய்த் திகழ்ந்ததை" நன்றியுடன் குறிப்பிடுகிறார்

கேரளப் பல்கலைக் கழகத்தில் "இஸ்லாமியத் தமிழ்ப் படைப்போர் வீரப்பாடல்கள்" குறித்து ஆய்வு செய்த திருவனந்தபுரம் பல்கலைக் கழகக் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திருமலர் மீரான் பிள்ளை தனது ஆய்வுக்கு இறையருட் கவிமணி நூலகம் எவ்வாறு உதவியது என்பதை இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"1977 இல் கேரளப் பல்கலைக் கழகத்தில் நான் 'இஸ்லாமியத் தமிழ்ப் படைப்போர் வீரப்பாடல்கள்" பற்றி ஆய்வு செய்த தருணத்தில் மூல நூற்கள் கிடைக்குமா என்பது பற்றிக் கவலைப்படவே இல்லை. காரணம், அன்று அபூர்வமான இஸ்லாமிய இலக்கியங்களின் குவியல் பேராசிரியடம் இருந்தது தமிழகம் முழுவதும் பயணம் செய்தும் கிடைக்கப் பெறாத பல நூற்களை ஒரே நாளில் எனக்குந் தந்து என்னை வியப்பில் ஆழ்த்தி என் முன்னால் இமயமாக நின்றவர் அவர். இந்நூல்களை நான் திருப்பியளிக்க முயன்றபோது "பரவா யில்லை, நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். சரியான இடத்தில் சரியான ஆளிடம்தானே இருக்கிறது" என்று கூறியபோது என்னால் நம்பவே முடியவில்லை "

பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் அறிவு தாகம் தணிக்கும் சுனை நீராய் பேராசிரியரின் நூலகம் திகழ்ந்ததற்குச் சில சான்றுகள் இவை

"எப்போதும் நூல்களைப் படித்துக் கொண்டு இருப்பது அவர்கள் பழக்கம். மருத்துவ நூல்கள் அதிகமாகப் படிப்பார்கள் அதனால் அவர்களிடம் மருத்துவ ஞானம் மலிந்து இருந்தது" என்கிறார், இறையருட் கவிமணியின் நெருங்கிய தோழர் மல்லவி என் ஹமீது முஹம்மது ஆலிம்

இறையருட் கவிமணி மறைவுக்குப் பிறகு அவர்களின் விருப்பப்படி பேராசிரியர் சேகரித்து வைத்திருந்த நூல்கள் யாவும் திண்டுக்கல் நைனார் முகம்மது நினைவுப்பள்ளிக்கு வழங்கப்பட்டு விட்டது.

## சிலேடைச் செல்வர்

இறையருட் கவிமணி சிலேடையாகப் பேசுவதிலும் வல்லவராய்த் திகழ்பவர் என்பதற்கு எடுத்துக்காட்டாய் ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்கிறார், பாளையங்கோட்டை சதகத்துல்லா அப்பா கல்லூரி தாளாளர் பத்ஹுர் ரப்பானி.

"சிலேடையாக உரையாற்றுவதிலே பேராசிரியர் உன்னதமானவர். ஒருமுறை பேராசிரியரைக் காண அவர்கள் வீட்டிற்கு சென்றிருந்தேன். அவர்களது இறுதி நாட்களில் காலில் ஏற்பட்ட மூட்டுவலியின் காரணத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தார்கள். இதையறியாத நான் அவர்களிடத்தில் உடம்பெல்லாம் நன்றாக இருக்கிறதா? என்று வினவினேன் அவர்கள் சிலேடையாக உடம்பில் முக்கால் பாகம் நன்றாக இருக்கிறது; கால் பாகம்தான் நன்றாக இல்லை என்றார்கள்."

துன்பம் வந்து சூழ்ந்தபோதும் சிரிப்பெனும் இன்பயாழ் எடுத்து மீட்டத் தெரிந்த மனப்பக்குவமும் சகிப்புத்தன்மையும் நகைச் சுவையுணர்வும் மிக்கவராய் பேராசிரியர் இருந்தார் என்பதற்கு இந் நிகழ்ச்சி சான்றாய் அமைகிறது.

## பன்மொழி வித்தகர்

இறையருட் கவிமணி ஆரம்பப் பள்ளியில் பயின்றது மலையாளம் உயர்நிலைப்பள்ளியில் ஆங்கிலத்துடன் இணைந்து

பயின்றமொழி அரபி. திருவனந்தபுரம் மகாராசா அரசினர் கல்லூரியில் இடைநிலை வகுபபு படித்த போது பயின்ற மொழி- தமிழ். சிதம்பரம் அண்ணாமலைப் பலகலைக்கழகத்தில் படித்தது பி ஏ தமிழ்(ஹானர்ஸ்) இவ்வாறு தமிழ், அரபி, மலையாளம் ஆங்கிலம் என்னும் நான்கு மொழியிலும் புலமைசான்ற பெருநதகை இறையருட் கவிமணியவர்கள்

## நகைச்சுவை உணர்வாளர்

இறையருட்கவிமணியிடம் குடிகொண்டிருந்த நகைச்சுவை உணர்வுக்கு எடுத்துக்காட்டாய் ஒரு சான்று வழங்குகிறார், அதிரை கல்லூரியில் அவரிடம் பயின்ற மாணவரும் அதிரை காதிர் முகைதீன் மேல்நிலைப் பள்ளி முன்னாள் தலைமையாசிரியருமான திரு எஸ்.கே எம். ஹாஜாமுகைதீன், அவர் குறிப்பிடுகின்றார்

“பாடவகுப்பிலும் சரி மேடை சொற்பொழிவிலும் சரி பேராசிரியர் உரையில் எளிய இனிய நகைச்சுவை இழையோடிக் கொண்டிருக்கும். நகைச்சுவை துணுக்குகளில் பல, காலத்துக்கு ஏற்ப அவர்கள் கற்பனையில் உருவானவை.

சான்றுக்கு ஒன்று, ஒரு கிராமத்து முதியவர் நகரம் ஒன்றிற்கு சென்றிருந்தபோது ஒரு காட்சியைக் கண்டார் அடுக்குமாடி கட்டிடம் ஒன்றின் லிப்ட் மூலம் ஒரு கிழவி மேல் தளத்திற்குச் சென்றார். அதே லிப்ட் கீழ்த்தளத்திற்கு திரும்பி வந்தபோது ஒரு இளம் பெண் அதி லிருந்து வெளியே வந்தார். அதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கிராமவாசி சொன்னார். “நான் அடுத்தமுறை வரும் போது என் மனைவியையும் அழைத்து வந்து இந்த இயந்திரத்தில் ஏற்றி இளமையாக்க விரும்புகிறேன் ”

## மனச்சான்றாளர்

இறையருட்கவிமணி ஓர்ந்து கண்ணோடாத இயல்பினர். மனச் சான்றுக்கு மதிப்பளித்து வாழ்ந்தவர் அதனால் பலரின் மனக் கசப்பிற்கும் அதிருப்திக்கும் ஆளானவர் இதை உத்தம பாளையம் ஹாஜி கருத்த ராவுத்தர் கல்லூரி முன்னாள் முதல்வர் (மறைந்த) பேராசிரியர் எஸ் ஏ அப்துல்லா நாசுக்காக இப்படிக் குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

''ஒரு தமிழ்ப் பேராசிரியராக இருந்து முதன் முதலில் கல்லூரி முதல்வராகப் பதவி வகித்த பெருமை அவரைச் சார்ந்தது. அவருடைய பேச்சும் மூச்சும் சமுதாயப் பணியாக இருந்தது அதற்கு ஊறு நேரிட்டாலும், ஊக்கம் அளிக்கப்படா விட்டாலும் 'அனிச்சமலர்' போன்ற அவர் உள்ளம் அவற்றைத் தாங்கிக் கொண்டதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் யாருக்கும் தெரியாமல் நபிகள் நாயகத்தைப் போல இரவோடு இரவாக ஹிஜ்ரத் (இடப்பெயர்ச்சி) செய்து விடுவார் ''

பேராசிரியர் அப்துல்லாவின் கூற்றை உறுதிப்படுத்தும் வகையில் பேராசிரியரின் இயல்பான குணநலத்தை அளந்துரைக்கிறார், இறுதி நாள் வரை பேராசிரியர் அருகில் இருந்து அவரது அன்பிற்குப் பாத்திர மாய்த் திகழ்ந்த திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரி தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் திருமலர் மீரான்பிள்ளை·

''முகஸ்துதியை ஒருபோதும் விரும்பாதவர்; செய்யாதவர்; பேராசிரியர் அவர் நினைத்திருந்தால் சற்று இலட்சியத்தைத் தளர்த்தி யிருந்தால் உன்னத உயர்பதவிகள் பல வந்து சேர்ந்திருக்கும்.

அவரோடு ஒரு சாலை மாணாக்கர்களாய் இருந்த முன்னாள் மகாராஷ்டிரா ஆளுநர் டாக்டர் அலெக்சாந்தர், முன்னாள் தமிழக அமைச்சர்கள் பேராசிரியர் அன்பழகன், டாக்டர் நெடுஞ்செழியன் போன்றவர்களை அவர்கள் பதவியில் இருக்கும்போது - சிபாரிசுக்கு வந்ததாக நினைத்து விடுவார்களோ எனக் கருதி - சென்று காண மறுத்து விட்டார்கள்.

சிபாரிசு என்னும் பக்கவாத நோய் தகுதியும் திறமையும் உடையவர்களைப் பாதித்து விடக்கூடும் என்று அவர்கள் அஞ்சினார்கள்

நிஜமாகவே தகுதியும் திறமையும் உடையவர்களை மனம் திறந்து பாராட்டும் பண்பு அவரிடம் ஓங்கியிருந்தது.''

இவ்வாறு இறையருட்கவிமணி பேராசிரியர் கா. அப்துல்கபூர் பன்முக ஆளுமைத்தன்மை கொண்டவராய், அன்பு வடிவத்தவராய், இனிய பண்பினராய், மிடுக்குத் தோற்றத்தினராய், புன்னகை சிந்தும் ஒளிநிலா முகத்தவராய் அவருடன் நெருங்கியப்பழகிய தோழமை உள்ளங்களில் இன்னும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறார்

இசைத்தட்டுகளில் நாகூர் ஹனிபாவின் பாடல்கள் ஒலித்துக் கொண்டு இருக்கும்வரை, தமிழன்னைக்கு அவர் உவந்து சூட்டிய பாமாலை இலக்கியங்கள் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கும்வரை,

அவரது எழுத்தாலும், பேச்சாலும், பாட்டுத்திறத்தாலும், சொல் செயல், சிந்தனையாலும் கவரப்பட்ட ஒரு சமூகம் அவரது நினைவைப் போற்றிக் கொண்டிருக்கும்வரை,

இலக்கியச் சோலையில் வாடா மலராய் அவர்புகழ் மலர்ந்து என் றென்றும் ஒளிவீசி ஜொலித்துக் கொண்டிருக்கும்.

# பின் இணைப்பு - 1

## உதவிய நூல்கள்/ஆய்வேடுகள் இதழ்கள்


1 இறையருட் கவிமணி பேராசிரியர் கா அப்துல்கபூர் எழுதிய அனைத்து நூல்கள்

2. இறையருள் கவிமணியின் இலக்கியம் - ஓர் ஆய்வு பதிப்பாசிரியர் பேராசிரியர் கா.முகம்மது பாரூக், நன்னெறிப்பதிப்பகம், திரு விதாங்கோடு, 1986.

3. இறையருட்கவிமணி தமிழ்ச் செம்மல் பேராசிரியர் கா அப்துல் கபூர் முதலாண்டு நினைவுமலர், பதிப்பாசிரியர், பேராசிரியர் கா. முகம்மது பாருக் நன்னெறிப் பதிப்பகம், திருவிதாங்கோடு, 2003.

4. இறையருட் கவிமணி பேராசிரியர் கா அப்துல்கபூர், பதிப்பாசிரியர் கா முகம்மது பாருக், நன்னெறிப் பதிப்பகம், திருவிதாங் கோடு,2003

5. இந்திய இலக்கியச் சிற்பிகள் புதுமைப்பித்தன் - வல்லிக் கண்ணன், சாகித்திய அகாதெமி, புதுதில்லி 1995

6. இந்திய இலக்கியச் சிற்பிகள் · நா. பார்த்தசாரதி - திருப்பூர் கிருஷ்ணன், சாகித்திய அகாதெமி,புது தில்லி, 2001.

7. குழந்தை இலக்கியமும் குழந்தைக்கவிஞர் வள்ளியப்பாவும், டாக்டர் அம்புயம் யுவச்சந்திரா, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை- 5, 1989

8. கா அப்துல்கபூரின் "அரும்பூ" - ஓர் ஆய்வு, இராம இராஜா எம்.ஃபில் ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1996.

9. இறையருட் கவிமணியின் மாலைகள் - ஓர் ஆய்வு, இரா ஜோதி ராணி, எம்.ஃபில் ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1999

10. மணிவிளக்கு, திங்களிதழ், ஜனவரி - 1972
11 தினமணி, ஈகைப் பெருநாள் மலர் - 2001
12. 'மதிநா' - இதழ்கள்

## உதவிய உள்ளங்கள்

13 தேவைப்பட்ட வாழ்க்கைக் குறிப்புகளை உடனுக்குடன் அனுப்பி வைத்து உதவிய பேராசிரியர் கா.அப்துல்கபூரின் மகன் அ ஜமால் முஹம்மது, பேராசிரியர் கா. அப்துல்கபூரின் இளைய சகோதரர் பேராசிரியர் கா முஹம்மது பாரூக், தேவைப் பட்ட நூல்களை வழங்கியுதவிய புதுக்கல்லூரி தமிழ்த் துறைப்பேராசிரியர் மு கலீல் அகமது - ஆகியோர்க்கு உளமார்ந்த நன்றி முகப்பட்டையில் பொலியும் பேராசிரியரின் படத்தை வழங்கியுதவிய "முஸ்லிம் முரசு" இதழிற்கும் நன்றி உரியது

# பின் இணைப்பு -2

## வாழ்க்கைச் சித்தரம்

பிறப்பு - கன்னியா குமரி மாவட்டம நாகர்கோயில் அருகில் உள்ள திருவிதாங்கோடு(25-5-1924)

பெற்றோர் - தந்தை காடடுபாவா சாஹிப்

தாய்· முகம்மதும்மாள்

கல்வி 1.தக்கலை - தொடக்கப்பள்ளி மற்றும் அரசினர் ஆங்கிலப் பள்ளி

2 திருவனந்தபுரம் - மகாராசா கலைக்கல்லூரி - இடைநிலை வகுப்பு

3 சிதம்பரம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - பி.ஏ. தமிழ (ஹானர்ஸ்)

பணி - 1 பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லிம் அரசினர் கல்லூரி, சென்னை, 1946-1947

2.தமிழ்த் துறைத் தலைவர், இஸ்லாமியக் கல்லூரி, வாணி யம்பாடி 1947-1952

3.கீழ்த்திசை மொழித்துறைத்தலைவர், ஜமால் முகம்மது கலலூரி, திருச்சி, 1952-1956

4 தமிழ்த்துறைத் தலைவர் கல்லூரி முதல்வர், ஹாஜி கருத்த இராவுத்தர் கௌதிய்யா கல்லூரி,உத்தம பாளையம், 1956-1962

5.தமிழ்துறைத் தலைவர், கல்லூரி முதல்வர், காதிர் முஹ யத்தீன் கல்லூரி அதிராம்பட்டினம் 1962-1967

6.முதல்வர், பிறைப்பள்ளி, வணடலூர், சென்னை. 1967-1974

7.நிர்வாக அதிகாரி, அல்-அமீன உயர்நிலைப்பள்ளி
கும்பகோணம், 1976-80

8 நிர்வாக அதிகாரி, திராவிட மொழி இயல் நிறுவனம், திரு வனந்தபுரம்

குடும்பம். மனைவி ஜமீலாபீவி

மகன். ஜமால் முஹம்மது.

சகோதரர்கள்: கா. ஹபீப் முகம்மது, கா அப்துல் லத்தீப்
கா முஹம்மது பாருக்

சகோதரிகள்: பாத்திமுத்து, மைமூன்

வகித்த பிற பொறுப்புகள்

1 தமிழ்ப் புலவர்க்குழு உறுப்பினர்

2.மதுரை,தஞ்சை மாவட்ட இலக்கிய ஆட்சிக்குழு உறுப்பினர்

3 திருச்சி அகில இந்திய வானொலி நிலைய ஆலோசனைக் குழு உறுப்பினர்

4.சென்னைப்பல்கலைக்கழக கல்விக் குழு செனட் சபை உறுப்பினர்.

5 கேரளப் பல்கலைக்கழக பாடநூல் குழு உறுப்பினர்.

## விருதுகள்/பரிசுகள்

1 பர்மாநாட்டு முஸ்லிம் அறிஞர் குழுவால் "கன்சுல் உலூம்"(கல்விக்களஞ்சியம்) பட்டமளிப்பு

2. அதிராம்பட்டினம் சான்றோர் பெருமக்களால் "இறையருட் கவிமணி"பட்டம் வழங்கப்படுதல்.

3 குளச்சல் இளைஞர் மன்றத்தால் "தீன்வழிச் செம்மல்" பட்டம் வழங்கப்படுதல்

4 திருவிதாங்கோடு அஞ்சுவன்னம் சபையினரால் "நபிவழிச் செம்மல்"பட்டம் வழங்கப்படுதல்

5 மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் "தமிழ்ச்செம்மல்" பட்டம் வழங்கப்படுதல்

6 அமெரிக்கா கலிபோர்னியா மாநிலத்தின் அனைத்துலகக் கலைப்பண்பாட்டு மையம் 1992 ஆம் ஆண்டு டி லிட்(இலக் கிய கலா நிதி) பட்டம் வழங்கிச்சிறப்பித்தல்)

7 சென்னை சீதக்காதி அறக்கட்டளை 1999 ஆம் ஆண்டிற்கான மாமேதை ஷெய்கு சதகத்துலலா அப்பா இலக்கியப் பரிசு வழங்கிச் சிறப்பித்தல்

## சிறப்புகள்

1 கல்லூரியில் முதன்முதலில் தமிழ்க் கவியரங்கை அறிமுகம் செய் துவைத்தார்(1948-வாணியம்பாடி இஸ்லாமியக்கல்லூரி)

2 கல்லூரி முதல்வரான முதல் தமிழ்ப் பேராசிரியர்

(ஹாதிகருத்த ராவுத்தர் கௌதியா கல்லூரி - உத்தமபாளையம்)

## உடன் பயின்ற மாணவர்கள்

1.டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன்

2 பேராசிரியர் க அன்பழகன்

3 மதியழகன்.

4 மராட்டிய மாநில முன்னாள் ஆளுநர் பி சி அலெக்ஸாண்டர்

## பேராசிரியரிடம் பயின்ற மாணவர்கள்

1.திரு எஸ் ஜே.சாதிக் பாட்சா,(முன்னாள் தமிழ்த்துறைத் தலைர்)

2.முனைவர் சிற்பி பாலசுப்ரமணியன்(முன்னால் தமிழ்த்துறைத் தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை)

3.கலைமாமணி மணவை முஸ்தபா(யுனஸ்கோ கூரியர் ஆசிரியர்)

# பின்னிணைப்பு 3

## இறையருட் கவிமணியின் நூல்கள்

### கவிதை

1 நாயகமே!
2 அன்னை பாத்திமா!
3 நபிமணி மாலை!
4 இறையருட் மாலை
5 திருமறைமாலை
6 நபிமொழி நானூறு
7 பொன்மொழி நானூறு
8. காஜாமாலை
9 பீரப்பா மாலை
10. முஹ்யித்தீன் மாலை
11 தலைப்பா(கவியரங்கக் கவிதைகள்)
12 துஆ - 100(பிரார்த்தனைப் பாடல்கள்)

### உரைநடை

1 இலக்கியம் ஈந்த தமிழ்
2 அற வாழ்வு
3 வாழும் நெறி இஸ்லாம்
4. இஸ்லாமிய இலக்கியம்
5. இனிக்கும் இறைமொழிகள்
6. மிக்க மேலானவன்.

### குழந்தை இலக்கியம்

1 அரும் பூ

**கா.அப்துல்கபூர்** (1924-2002): கல்லூரி முதல்வராய்ப் பணி யாற்றிய முதல் தமிழ்ப் பேராசிரியர். கல்லூரித் தமிழ் மன்றங் களில் தமிழ்க் கவியரங்குகளை அறிமுகம் செய்து வைத்தவர். ஏராளமான மாலை இலக்கியங்களை எழுதிக் குவித்தவர். வானொலி கவியரங்குகளில் பங்கேற்று முத்திரைப் பதித்தவர். இவரது வானொலி உரைப் பொழிவுகள் ஒன்று திரட்டப்பட்டு "இலக்கியம் ஈந்த தமிழ்" என்னும் பெயரில் நூல் வடிவம் பெற்று சென்னைப் பல்கலைக் கழகத்திலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், கேரளப் பல்கலைக்கழகத்திலும் பாட நூலாக வைக்கப்பட்டது. இவரது "அரும்பூ" என்னும் குழந்தை இலக்கிய நூல் தமிழக அரசின் கரும் பலகைத் திட்டத்திற்கு உரிய சிறந்த நூலாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. சென்னைப் பல்கலைக்கழக கல்விக்குழு, செனட் சபை உறுப்பினராய்ப் பணியாற்றிய கல்வியாளர். இனிய சந்தப் பாடல்களால் மக்கள் இதயம் கவர்ந்தவர். அறிஞர் அண்ணாவின் அன்பிற்கு உரிய வராய் திகழ்ந்தவர். இஸ்லாத்தை, தமிழைத் தன் இரு கண்களாய்ப் போற்றியர்.

**ஹ.மு. நத்தர்சா:** புதுக்கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர். படைப்பிலக்கியவாதி. மூன்று சிறுகதைத் தொகுப்புகள் வழங்கி யுள்ளார். புதுவையரசின் 1996 ஆம் ஆண்டிற்கான கம்பன் புகழ்ப்பரிசு பெற்றவர். வரலாற்று ஆய்வு நூல் ஒன்றும் எழுதி யுள்ளார். இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவைகளில் இக்கால இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம் குறித்து ஏராளமான ஆய்வுக்கட்டுரைகள் எழுதி யுள்ளார். இஸ்லாமிய சிறுகதைகள் குறித்து ஆய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

*Ka. Abdul Kapoor*(Tamil)Rs.25.
ISBN-81- 260- 2089-X